# TNPSC ThervuPettagam
# Current Affairs – August, 2017

www.tnpscthervupettagam.com














SHANKAR IAS ACADEMY™

Plot No.1742, Ist Floor, 18th Main Road, Anna Nagar, Chennai – 600 040.

Phone : 044-26216435, 64597222, 4353 3445, Mobile : 94441 66435

www.shankariasacademy.com

# பொருளடக்கம்

1. TNPSC துளிகள்....................................................................3

2. தமிழ்நாடு செய்திகள்....................................................................5

3. தேசியச் செய்திகள்....................................................................6

4. சர்வதேசச் செய்திகள்....................................................................37

5. பொருளாதாரம்....................................................................47

6. அறிவியல் மற்றும் தொழில்நுட்பம்....................................................................51

7. சுற்றுச்சூழல்....................................................................59

8. மாநிலச் செய்திகள்....................................................................66

9. பிரபலமானவர்கள், விருதுகள், நிகழ்வுகள்....................................................................74

10. விளையாட்டுச் செய்திகள்....................................................................80

11. இதரச் செய்திகள்....................................................................83

# TNPSC துளிகள்

- தேசியக் கல்விக் கொள்கை வரைவுக் குழுவுக்கான தொழில்நுட்பச் செயலகம் பெங்களூரு NAAC வளாகத்தில் குழுவின் தலைவர் கஸ்தூரிரங்கனால் துவக்கி வைக்கப்பட்டது.
- உற்பத்தி செய்யப்பட்ட வேளாண் பொருள்களை விற்பதற்காக மின் தேசிய விவசாய வேளாண் சந்தை (e-RaKAM) என்ற இணைய வாயிலை மத்திய அரசு துவக்கி இருக்கிறது.
- உலகிலேயே பாதசாரிகளுக்கான மிக நீண்ட தொங்கு பாலம் சுவிட்சர்லாந்தில் திறந்து வைக்கப்பட்டது.
- கோடைகால ஒலிம்பிக்ஸ்: 2028ல் அமெரிக்காவின் லாஸ் ஏஞ்சல்ஸ் நகரத்திலும் , 2024 ஆம் ஆண்டில் பிரான்சின் பாரீசிலும் நடத்தப்பட இருக்கிறது.
- வேலையில்லா இளைஞர்களுக்கு மானிய விலையில் வணிகரீதியிலான இரு சக்கர மற்றும் நான்கு சக்கர வாகனங்கள் வழங்கக்கூடிய வகையில் "Apni Gaddi Apna Rozgar"என்ற திட்டம் விரைவில் அமல்படுத்தப்பட உள்ளது என பஞ்சாப் அரசாங்கம் அறிவித்துள்ளது. இதனை சமீபத்தில் நூறு உபர் (Uber 100) மோட்டார் வண்டிகளை கொடியசைத்துத் துவக்கி வைக்கும்போது அறிவித்தது.
- பெங்களூருவில் "CANDI" என்றழைக்கப்படுகின்ற தனது முதல் இணைய வங்கிக் கிளையினை கனரா வங்கி திறந்துள்ளது.
- ஆகஸ்ட் 02 ஆம் தேதி முதல் , தமிழக அரசின் புதிய லஞ்ச ஒழிப்புத்துறை ஆணையராக வி.கே.ஜெயக்கொடி (இந்திய ஆட்சிப் பணி ) அவர்கள் தமிழக அரசால் நியமிக்கப்பட்டுள்ளார் .
- பாரத பங்குச் சந்தையின் இயக்குநர் குழுவின் தலைவராக திரேந்திரா ஸ்வரூபினை நியமிப்பதற்கான அனுமதியினை செபி வழங்கியது.
- இந்திய வர்த்தக மற்றும் தொழில் கூட்டமைப்பின் பொதுச் செயலாளராக சஞ்சயாபாரு நியமிக்கப்பட்டுள்ளார்.
- ஆகஸ்டு 15 தேதியினை 'சங்கல்ப் பர்வா' என்று கொண்டாட முடிவெடுத்துள்ளது மத்திய அரசு.
- புதிய இந்தியாவினை உருவாக்குவதற்கான புதிய எண்ணங்களை வெளிப்படுத்துமாறும், சமூகக் காரணங்களுக்காக 'சங்கல்ப் பர்வா' தினத்தில் தங்களை அர்ப்பணிக்குமாறும் இந்திய மக்களிடம் மத்திய அரசு கேட்டுக் கொண்டுள்ளது.
- இலண்டனில் நடைபெற்ற சர்வதேசத் தடகளக் கூட்டமைப்பு International Association of Athletics Federations - IAAF) 100 மீட்டர் ஓட்டப்பந்தய சாம்பியன்ஷிப் போட்டியில் உசேன் போல்ட்டை முந்தினார் ஜஸ்டின் கட்லின்.
- முதல் முன்று இடங்கள்**:**
  1. தங்கம் - ஜஸ்டின் கட்லின் (அமெரிக்கா) (9.92 வினாடிகள்)
  2. வெள்ளி - கிறிஸ்டியன் கால்மேன் (அமெரிக்கா) (9.94 வினாடிகள்)
  3. வெண்கலம் - உசேன் போல்ட் (ஜமைக்கா) (9.95 வினாடிகள்)

- இணைய உலகில், காணொளிகளை உருவாக்குபவர்களுக்காகவும் அதைப் பதிவேற்றம் செய்வதற்காகவும், யுடியூப் (YouTube) க்குப் போட்டியாக "வாட்ச்" (Watch) என்ற புதிய தளத்தினை முகநூல் (Face book) நிறுவனம் உருவாக்கி இருக்கிறது.
- 2017 ஆம் ஆண்டு அக்டோபரில் பிம்ஸ்டெக்கின் (BIMSTEC) முதலாவது பேரிடர் மேலாண்மை ஒத்திகையினை இந்தியா நடத்த இருக்கிறது.
- ஓய்வு பெற்ற இந்திய ஆட்சிப்பணி அதிகாரி ஐ.வி.சுப்பா ராவ் இந்திய துணைக் குடியரசுத் தலைவர் வெங்கையா நாயுடுவின் செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார். இவர் 1979-வது வருட ஆந்திரப் பிரதேச பணிப்பிரிவுச் சேர்ந்த இந்திய ஆட்சிப்பணி அதிகாரி ஆவார் .

- கஞ்சம் மாவட்டத்தின் தொலைதூரப் பகுதிகளில் மலேரியா பரவுவதைத் தடுக்க ஒடிசா அரசானது " துர்காமா அஞ்சலாரே மலேரியா நிராகாரன் (DAMON)" என்ற சிறப்புத் திட்டத்தை விரைவில் தொடங்க உள்ளது.

## பெண்கள் நலத்திற்கென்று 24x7

- சமீபத்தில் தெலுங்கானா மாநில அரசாங்கத்தால் பெண்கள் நலம் பேணுவதற்கென்றே தனியான 24x7 உதவி எண் '181' வெளியிடப்பட்டுள்ளது.
- இந்த உதவி எண் ஆனது வரதட்சணை கொடுமை வழக்குகள், பெண்குழந்தைகள் விற்பனை, குடும்ப வன்முறைகள், பெண்களைக் கடத்துதல் போன்றவை தொடர்பான தொலைபேசி அழைப்புகளுக்குத் தக்க பதில்களை வழங்குகிறது.
- மனரீதியாக பாதிக்கப்பட்ட பெண்களும் தற்கொலை செய்து கொள்ளும் எண்ணத்தில் உள்ள பெண்களும் இந்த எண்ணை அழைக்கலாம். இது போன்ற சமயங்களில் மருத்துவ உதவி, அவசர ஊர்தி போன்ற அவசரகாலச் சேவைகளுக்கு காவல்துறையினை அழைப்பதற்குப் பதிலாக இந்த உதவி எண்ணை அழைக்கலாம்.
- இந்த உதவி எண் ஆனது ஆண்டு முழுவதிலும் 24 மணிநேரமும் செயல்படக்கூடியது.
- இதற்கான நிதியுதவியினை மத்திய அரசும் ஜிவிகே ஈ.எம்.ஆர்.ஐ (GVK EMRI) யும் வழங்குகின்றன.

## ரயில்வே பேரிடர்களுக்கான மேலாண்மை கிராமம்

- கர்நாடகாவின் தலைநகர் பெங்களூருவில் இருந்து 25 கிலோமீட்டர் தொலைவில் உள்ள 'ஹெஜ்ஜாலா' (Hejjala) என்ற கிராமத்தில் 32 சதுர கிலோமீட்டர் பரப்பில் இந்தியாவின் முதல் ரயில்வே பேரிடர்களுக்கான மேலாண்மை மையம் (Railway Disaster management Centre) 2018ல் அமைக்கப்பட இருக்கிறது.
- தொடர்ந்து நடைபெறும் ரயில் விபத்துக்களுக்குத் தக்க பதில் அளிக்கும் விதத்தில் மீட்புப் பணிகளின் தர மேம்பாட்டினை முடுக்கிவிடுவதற்கு இது பயன்படும்.
- இங்கு ரயில்வே விபத்துக்களை ஆராய்வதற்கான மெய்நிகர் தோற்ற மையமும் (Virtual reality centre) ஏற்படுத்தப்பட இருக்கிறது.
- வகுப்பறையில் மீட்புப்பணிகள் மருத்துவ உதவி வழங்கல் போன்றவற்றிற்கு அதிநவீனத் தொழில்நுட்ப ரீதியிலான பயிற்சிகளும் வழங்கப்பட இருக்கின்றன. இவை பல்வேறு செயல்முறை மாதிரிகள் மூலம் விளக்கப்பட இருக்கிறது.
- ரயில்வே விபத்து தொடர்பான செயல்முறை மாதிரி வகுப்புகளும் நடத்தப்பட இருக்கின்றன.

## இந்தியாவின் முதல் விமானப் போக்குவரத்துப் பல்கலைக்கழகம்

- உத்திரப்பிரதேசத்தில் உள்ள ரேபரேலியின் ஃபுர்ஸத்கன்ஞ்சில் (Fursatganj) ராஜீவ்காந்தி தேசிய விமானப் போக்குவரத்துப் பல்கலைக்கழகம் (Rajiv Gandhi National Aviation University - RGNAU) என்ற இந்தியாவின் முதல் விமானப் போக்குவரத்துப் பல்கலைக்கழகம் (Aviation university) விரைவில் தொடங்கப்பட இருக்கிறது.
- விமானப் போக்குவரத்து பற்றிய கல்வியை ஊக்குவிக்கவும் அதில் பயிற்சிகளை வழங்கவும் ஆராய்ச்சிகள் மேற்கொள்ளவும் இது தொடங்கப்பட இருக்கிறது.
- இந்த மத்தியப் பல்கலைக்கழகமானது மத்திய உள்நாட்டு விமானப் போக்குவரத்து அமைச்சகத்தினுடைய நிர்வாகக் கட்டுப்பாட்டின் கீழ் தன்னாட்சி பெற்ற அமைப்பாகச் செயல்படும்.
- இந்தப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தராக ஓய்வுபெற்ற துணை ஏர்மார்ஷல் நளின் தாண்டன் (Nalin Tandon) நியமிக்கப்பட்டுள்ளார்.

### ஹார்வி சூறாவளி

- ஹார்வி என்ற வெப்பமண்டலச் சூறாவளி சமீபத்தில் டெக்சாஸ் நகரில் கரையைக் கடந்தது.
- 2004 ஆம் ஆண்டு முதல், அமெரிக்காவில் கரையைக் கடந்த முதல் 4 ஆம் வகை சூறாவளி (Category 4 hurricane) ஹார்வி ஆகும். 4 ஆம் வகை சூறாவளிகள் என்பது மணிக்கு 131 முதல் 155 மைல்கள் வேகத்தில் வீசக் கூடியவை ஆகும்.

### 100 சதவீத கணினி கல்வியறிவு அடைந்த கிராமம்

- மணிப்பூரின் உன்ங்தங்க் தம்பக் (Nungthong Tampak) கிராமமே இந்தியாவின் இரண்டாவது 100 சதவீத கணினிக் கல்வியறிவு பெற்றக் கிராமம் ஆகும். இந்த கிராமம் வடகிழக்கிந்தியாவின் முதலாவது 100 சதவீத கணினிக் கல்வியறிவு பெற்ற கிராமமாகும்.
- கேரளாவின் சம்ராவட்டோம் (Chamravattom) கிராமமே நாட்டின் முதலாவது 100 சதவீத கணினிக் கல்வியறிவு பெற்ற கிராமமாகும்.

### தொழில் நிறுவன கணக்கெடுப்பு (Enterprise Survey)

- மத்தியக் கொள்கைக் குழுவும் (NITI Aayog) மும்பையைச் சேர்ந்த ஐ.டி.எஃப்.சி (IDFC Institute) என்ற சிந்தனையாளர் மையமும் இணைந்து உற்பத்தி நிறுவனங்களைப் பற்றிய தொழில் நிறுவன கணக்கெடுப்பினை நடத்தி வருகிறது.

## தமிழ்நாடு செய்திகள்

### ஆழ்கடல் மீன்பிடிப்புத் திட்டம்

- பிரதமர் நரேந்திர மோடி 27.07.2017 அன்று, தமிழ்நாட்டிலுள்ள ராமநாதபுரம் மீனவர்களிடையே ஆழ்கடல் மீன்பிடித்தல் ஊக்குவிக்கும் திட்டத்தை முறையாக தொடங்கி வைத்தார் .

### உவர் நீர் நிலைகளில் மீன் வளர்க்கும் திட்டம்: காஞ்சிபுரத்தில் சாதனை

- உவர் நீர் நிலைகளில் வலைக் கூண்டுகள் அமைத்து முத்தொடர் முறையில் மீன் வளர்க்கும் தொழில்நுட்பம் இந்திய அளவில் முதன்முதலாக காஞ்சிபுரம் அருகே வெற்றிகரமாகச் செயல்படுத்தப்பட்டுள்ளது.
- சென்னையில் உள்ள இந்திய வேளாண்மை ஆராய்ச்சி நிறுவனத்தின் துணை நிறுவனமான மத்திய உவர் நீர் மீன் வளர்ப்பு ஆராய்ச்சி நிலையம் (Central Institute of Brackish water Aquaculture - CIBA) சார்பில், கடல் முகத்துவாரப் பகுதியான உவர் நீர் நிலைகளிலும் மீன்களை வளர்க்க முடியும் என்கிற தொழில்நுட்பத்தைக் கண்டறிந்து புதிய திட்டம் செயல்முறைக்கு வந்துள்ளது.
- காஞ்சிபுரம் மாவட்டம், வெண்ணாங்குப்பட்டு கிராமத்தில் அப்துல் கலாம் மீன்பிடிப்பாளர்கள் மகளிர் சுய உதவிக் குழுவுடன் இணைந்து, உவர்நீர் நிலைகளில் மீன்களைப் பிடிக்கும் திட்டம் இந்திய அளவில் முதன்முறையாகச் செயல்பாட்டுக்கு வந்துள்ளது.
- இதற்கு முன்பு வரை கடலில் ஆழமான மாசற்ற நீர் நிலைகளில் தான் வலைக்கூண்டுகள் அமைத்து மீன் வளர்க்க முடியும் என்ற நிலை இருந்தது. தற்போது இதை மாற்றியமைத்து உவர் நீர்நிலைகளிலும் வலைக்கூண்டுகள் அமைத்து முத்தொடர் முறையில் மீன்கள் வளர்க்க முடியும் என்ற நிலைக்கு மாறியுள்ளது.

### கொசுக்களை ஒழிக்க 'ஆயில் உருண்டை' வீசும் திட்டம்: தமிழகத்தில் முதன்முறையாக வேலூர் மாநகராட்சி அறிமுகம்

- தேங்கிய நீரில் உற்பத்தியாகும் கொசுக்களால் நோய்கள் பரவுவதைத் தடுக்கும் நோக்கில் மாநிலத்திலேயே முதல்முறையாக ஆயில் உருண்டை பந்துகள் வீசி கொசுக்களை அழிக்கும் திட்டத்தை வேலூர் மாநகராட்சி அறிமுகப்படுத்தியுள்ளது.
- சாக்கடை நீரில் உற்பத்தியாகும் கொசுக்கள் மூலம் யானைக்கால் நோயும், சுத்தமான தேங்கிய மழைநீரில் உற்பத்தியாகும் ஏடிஸ் கொசுக்கள் மூலம் டெங்கு, மலேரியா போன்ற காய்ச்சல் நோய்களும் பரவுகின்றன. சாக்கடை, தேங்கிய நீரில் உற்பத்தியாகும் கொசுக்களை அழிக்க மாநகராட்சி, நகராட்சி, ஊராட்சி நிர்வாகங்கள் கொசு மருந்து தெளிப்பது உள்ளிட்ட பல்வேறு பணிகளைச் செய்த போதிலும் அவற்றை முழுமையாக ஒழிக்க முடியவில்லை.
- இந்நிலையில், மரத்தூள்களை என்ஜின் கழிவு எண்ணெய், தேங்காய் எண்ணெய் ஆகியவற்றைக் கலந்து உருண்டையாக்கித் துணிப் பைகளில் கட்டி சாக்கடை, தேங்கிக் கிடங்கும் நீரில் வீசினால் அதிலிருந்து நீரில் பரவும் ஆயில் மூலம் ஈர்க்கப்பட்டு கொசுக்களை எளிதில் ஒழிக்க முடிவதோடு, கொசுக்கள் உற்பத்தியை முற்றிலும் தடுக்க முடியும். மற்ற மாநகராட்சிகளுக்கு முன்மாதிரியாக விளங்கும் வகையிலான இத்திட்டத்தை வேலூர் மாநகராட்சி நிர்வாகம் அறிமுகப்படுத்தியுள்ளது.

### தமிழகத்தில் 500 "ஜெனரிக்' மருந்து விற்பனை மையங்கள்

- தமிழகத்தில் 500 புதிய "ஜெனரிக்' ( அடிப்படை மூலக்கூறு மருந்துகள்) மருந்து விற்பனை மையங்கள் தொடங்கப்படும் என மத்திய அரசு தெரிவித்துள்ளது.
- இந்த மருந்தகங்களில் அனைத்து விதமான நோய்களுக்குமான மருந்துகள் குறைந்த விலையில் கிடைக்கும்.
- கடந்த 3 ஆண்டுகளில் இந்தியாவில் 2240 ஜெனரிக் மருந்தகங்கள் தொடங்கப்பட்டன.

### மதுரையில் மருந்தியல் ஆராய்ச்சி நிறுவனம்

- மத்திய மருந்தியல் கல்வி மற்றும் ஆராய்ச்சி தேசிய நிறுவனம் மதுரையில் விரைவில் அமையவுள்ளது.
- இந்தக் கல்வி நிறுவனம் பிற மத்திய கல்வி நிறுவனங்களான ஐஐடி, ஐஐஎம் போன்றவற்றுக்கு இணையாக இருக்கும் என மத்திய அரசு தெரிவித்துள்ளது.

# தேசியச் செய்திகள்

### பெருநிறுவன ஆளுகைக் குழு


- சமீபத்தில், இந்தியாவில் பட்டியலிடப்பட்ட குறிப்பிட்ட சில நிறுவனங்களின் பெருநிறுவன ஆளுகைத் தரத்தினை மேம்படுத்துவதற்காக கோடக் மஹிந்திரா வங்கியின் தலைவரான உதய் கோடக் தலைமையில் ஒரு குழுவை இந்திய பங்கு மற்றும் பரிவர்த்தனை வாரியம் (Securities and Exchange Board of India - SEBI) நியமித்துள்ளது.
- இந்தக் குழுவானது பட்டியலிடப்பட்ட பொதுத்துறை நிறுவனங்கள் (Public Sector Enterprises - PSE) எதிர்கொள்ளும் பெருநிறுவன நிர்வாக சவால்களை கருத்தில் கொண்டு செயல்படும்.
- அரசுகளின் நியமனக் கொள்கை, சுதந்திர இயக்குநர்களின் நியமனம் மற்றும் நிர்வாகப் பங்கு , பொறுப்புடைமை மற்றும் குழுக்களின் தன்னாட்சி உரிமை போன்ற விவாதங்கள் இக்குழுவினால் மேற்கொள்ளப்பட இருக்கிறது.
- பொதுத் துறை மற்றும் தனியார் துறை நிறுவனங்களுக்கு இடையே சமமான போட்டி நிலைகளை உருவாக்கவும் , இந்நிறுவனங்களை தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் பார்வையில் கொண்டு வரவும் இந்தக் குழு பரிசீலிக்க உள்ளது.

### ஜியோ பார்சி (Jiyo Parsi)

- ஜியோ பார்சி பிரச்சாரத்தின் இரண்டாம் கட்டத் திட்டம் மும்பையில் தொடங்கப்பட்டது. இத்திட்டத்தினை மத்திய சிறுபான்மையினர் நலன் அமைச்சகம் செயல்படுத்துகிறது.
- இந்தியாவில் சமீப காலத்தில் , பார்சி மத மக்களின் எண்ணிக்கை குறைந்து வருகின்றது. அவ்வாறு குறைந்து வரும் பார்சி மக்களின் எண்ணிக்கையினை நிலைப்படுத்துவதும், அதிகரிப்பதும் "ஜியோ பார்சி" திட்டத்தின் முக்கிய நோக்கம் ஆகும் .
- மருத்துவ உதவி மற்றும் ஆலோசனை என்று இத்திட்டம் இரண்டு பகுதிகளாக செயல்படுகிறது.

### பட்டாசுகளில் உள்ள 5 வேதிப் பொருட்களுக்குத் தடை

- பட்டாசு உற்பத்தியில் பயன்படுத்தப்படும் 5 வேதிப் பொருட்கள் காற்று மற்றும் ஒலி மாசுபாட்டினை உருவாக்குவதால் அவற்றை பயன்படுத்த தடை விதித்து உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.
- தடை விதிக்கப்பட்ட வேதிப்பொருட்கள் பின் வருமாறு - இலித்தியம், ஆண்டிமனி, பாதரசம், ஆர்சனிக் மற்றும் ஈயம் (lithium, antimony, mercury, arsenic and lead).



## The Toxic Elements of Fireworks - Pick Your Poison

| Toxic Element | Fireworks Usage | Toxic Effect of Fallout Dust & Fumes |
|---|---|---|
| Aluminum | brilliant whites | Contact dermatitis, bioaccumulation |
| Antimony sulfide | glitter effects | Toxic smoke, possible carcinogen |
| Arsenic compounds | Used as colorants. Sadly still out there. | Toxic ash can cause lung cancer, skin irritation and wart formation. |
| Barium Nitrate | glittering greens | Poisonous. Fumes can irritate respiratory tract. Possible radioactive fallout. |
| Copper compounds | blues | Polychlorinated dioxins and dibenzofurans. Can bioaccumulate. Cancer risk. |
| Hexachlorobenzene (HCB) | Use was supposed to be banned globally. | Persistent environmental toxin. Is a carcinogen, mutagen and a reproductive hazard |
| Lead Dioxide / Nitrate / Chloride | oxidizer | Bioaccumulation, developmental danger for kids & unborn babes, may remain airborne for days, poisonous to plants & animals |
| Lithium compounds | blazing reds | Toxic and irritating fumes when burned |
| Mercury (Mercurous chloride) | chlorine donor | Toxic heavy metal. Can bioaccumulate. |
| Nitric oxide | fireworks byproduct | Toxic by inhalation. Is a free radical |
| Nitrogen dioxide | fireworks byproduct | Highly toxic by inhalation. SIDS risk |
| Ozone | fireworks byproduct | Greenhouse gas that attacks & irritates lungs |
| Perchlorate - Ammonium & Potassium | propellant / oxidizer | Can contaminate ground & surface waters, can cause thyroid problems in humans & animals |
| Potassium Nitrate | in black powder | Toxic dusts, carcinogenic sulfur-coal compounds |
| Strontium compounds | blazing reds | Can replace calcium in body. Strontium chloride is slightly toxic. |
| Sulfur Dioxide | gaseous byproduct of sulfur combustion | Acid rain from sulphuric acid affects water sources, vegetation & causes property damage. SIDS risk |

- மத்திய மாசுக் கட்டுப்பாட்டு வாரியம் (Central Pollution Control Board - CPCB) மற்றும் பெட்ரோலியம் மற்றும் வெடிமருந்து பாதுகாப்பு அமைப்பு (Petroleum and Explosives Safety Organisation - PESO) ஆகியவை , ரசாயனக் கலவை தொடர்பான தரநிலைகளை வகுக்க வேண்டும் என்று உச்சநீதிமன்றம் குறிப்பிட்டுள்ளது.

| **வேதிப் பொருட்கள்** | **ஏற்படுத்தும் விளைவுகள்** |
|---|---|
| இலித்தியம்( Lithium) | வானவேடிக்கை பட்டாசுகளில் சிவப்பு வண்ணத்தை ஏற்படுத்துகிறது. |
| ஆண்டிமனி (Antimony) | ஒளிமயமான மிளிர்வுகளை ஏற்படுத்துகிறது |
| ஈயம் (Lead) | படபடவென்று பொறிவது போன்ற ஓசையினை ஏற்படுத்தும் |

## மகிளா கயிறுத் திட்டம்

- மகிளா கயிறுத் திட்டத்தை கயிறு வாரியம் செயல்படுத்தி வருகிறது. பெண்களுக்கு கயிறு தயாரிக்கும் இயந்திரங்கள் வழங்குவதன் மூலமாக அவர்களின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்துவது இந்தத் திட்டத்தின் நோக்கமாகும்.
- இது முற்றிலும் பெண்களுக்காகவே செயல்படுத்தப்படும் திட்டமாகும் . கிராமப்புற பெண்களுக்கு சுய வேலைவாய்ப்பு வழங்குவதற்காக அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.
- இயந்திரம் மூலம் இயங்கும் கயிறு இராட்டைகள் மற்றும் பிற உபகரணங்கள் பெண்களுக்கு 75% மானியத்துடன் வழங்கப்படவுள்ளது . இரண்டு மாதங்கள் இயந்திரங்களை இயக்குவதற்கான பயிற்சி அளிக்கப்பட்டு, 7500 ருபாய் வரை மானியம் வழங்கப்படுகிறது.

## சிறைக் கைதிகளை பரிமாற்றிக் கொள்ளும் ஒப்பந்தம் இந்தியா –சோமாலியா இடையே கையெழுத்தானது

- இந்தியா – சோமாலியா ஆகிய இருநாட்டு வெளியுறவு அமைச்சர்களின் சந்திப்பின் போது தண்டனைப் பெற்ற சிறைக்கைதிகளை இரு நாடுகளுக்கிடையே பரிமாறிக் கொள்வதற்கான ஒப்பந்தம் கையெழுத்தானது
- மேலும், இருநாட்டு வெளியுறவு அமைச்சர்களும் கடற்பாதுகாப்பு, கடற்கொள்ளை மற்றும் வளைகுடாப் பிராந்திய மேம்பாடு போன்றவற்றைப் பற்றி விவாதித்துக் கொண்டனர்.
- 2008 முதல் இந்தியக் கடற்படை ஏதென் வளைகுடா பகுதியில் கடற்கொள்ளைக்கு எதிரான ரோந்துப் பணிகளை மேற்கொண்டு வருகிறது. சோமாலியக் கடற்பகுதி கொள்ளைக்கான ஐநாவின் தொடர்பு குழுவில் இந்தியா உறுப்பினராக உள்ளது.

## தேசிய திறன் வளர்ச்சிக் கழகத்துடன் எல்லைப் பாதுகாப்புப்படை புரிந்துணர்வு ஒப்பந்தம்

- இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் மூலமாக, தேசிய திறன் வளர்ச்சிக் கழகமானது, எல்லைப் பாதுகாப்பு படையில் (Border Security Force - BSF) இருந்து ஓய்வு பெற்ற மற்றும் ஓய்வு பெறக்கூடிய பணியாளர்களுக்கு திறன் பயிற்சி வழங்கவுள்ளது. மேலும் எல்லைப் பகுதிகளில் வாழும் மக்களுக்கும் திறன் பயிற்சி வழங்கப்படவுள்ளது.
- இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் முக்கிய நோக்கமாக ஓய்வு பெற்ற எல்லை பாதுகாப்புப் படை பணியாளர்களுக்கும் அவர்களின் குடும்பத்தினருக்கும் பள்ளி மாணவர்களுக்கும், இளைஞர்களுக்கும், மாற்றுத் திறனாளிகளுக்கும் வருமானம் பெறத்தக்க வகையிலான வேலை வாய்ப்பினை வழங்கும் விதமாக திறன் பயிற்சி வழங்குவது ஆகும்.
- இந்தத் திட்டம் ஆனது ஏப்ரல் 2017 முதல் ஏப்ரல் 2022 வரையிலான 5 ஆண்டுகளுக்கு நடைமுறையில் இருக்கும்.

## ரஜஸ்வா கியான் சங்கம் (Rajaswa Gyan Sangam)

- வரித்துறை அதிகாரிகளுக்கான இரண்டு நாள் கூட்டத்தினை செப்டம்பர் 1 ஆம் தேதி டெல்லியில் பிரதமர் துவக்கி வைத்தார்.
- இக்கூட்டத்தின் முக்கிய விவாதப் பொருளாக இருப்பது சரக்கு மற்றும் சேவை வரியும் (GST) கருப்புப் பணத்தினை வெளிக்கொணர்வதும் ஆகும்.
- முதன் முறையாக சரக்கு மற்றும் சேவை வரித் தொடர்பான விவாதங்களில் மாநில அரசுகளின் வரித்துறை அலுவலர்களும் கலந்து கொள்ள உள்ளனர்.

## நீதிபதி கிருஷ்ணா: இந்தியாவிற்கான தரவுப் பாதுகாப்புக் கட்டமைப்பின் வல்லுநர் குழுவின் தலைவர்

- தரவுப் பாதுகாப்பின் முக்கியத்துவத்தினை உறுதிப்படுத்தும் வகையிலும் இந்தியக் குடிமக்களின் தனிப்பட்ட தரவுகளினை பாதுகாக்கும் வகையிலும் முன்னாள் உச்சநீதிமன்ற நீதிபதி பி.என்.கிருஷ்ணா தலைமையிலான வல்லுநர் குழுவினை, 2017 ஜூலை 31 ம் தேதி மத்திய தகவல் தொழில் நுட்ப அமைச்சகம் உருவாக்கியுள்ளது.

## நியாயமான சந்தை நடத்தைகளுக்கான குழு - (Panel on Fair Market Conduct)

- Fair market Conduct எனப்படும், 'நியாயமான சந்தை நடத்தைகள்' தொடர்பான குழு ஒன்றினை இந்திய பங்கு மற்றும் பரிவர்த்தனை வாரியம் (Securities and Exchange Board of India - SEBI) அமைத்துள்ளது. இந்தக் குழுவின் தலைவராக முன்னாள் மக்களவைச் செயலாளரும் , சட்டத்துறைச் செயலாளருமான டி.கே.விஸ்வநாதன் தேர்வு செய்யப்பட்டுள்ளார்.
- தற்போது நடைமுறையில் உள்ள இந்திய பங்கு மற்றும் பரிவர்த்தனை வாரியத்தின் விதிமுறைகள் மற்றும் Fraudulent and Unfair Trade Practices(FUTP) எனப்படும் மோசடி மற்றும் நியாயமற்ற வர்த்தக நடைமுறைகள் குறித்து பரிந்துரைப்பது இந்த குழுவின் முக்கிய பணியாகும்.
- நிறுவனங்களை கையகப்படுத்தும் பொழுது , அவற்றின் விலை குறித்த இரகசியங்களை கையாள்வது மற்றும் நிறுவனத்தின் பணியாளர்கள் முக்கிய தகவல்களை பிறருக்கு விற்பதை தடுப்பதற்கான விதிமுறைகளை நிறுவனங்களின் சட்டத்தின் (Companies Act, 2013)படி இந்தக் குழுவானது வகுக்கும்.

## பாரத்மாலா திட்டம் (Bharatmala Project)

- இந்தத் திட்டத்தை செயல்படுத்தும் அமைச்சகம்: மத்திய சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத்துறை அமைச்சகம் (Ministry of Road Transport and Highways).
- தேசிய நெடுஞ்சாலை மேம்பாட்டு திட்டத்தின் (National Highway Development Program - NHDP) கீழ் முடிக்கப்படாத பணிகள் , பாரத்மாலா திட்டத்தின் கீழ் உட்படுத்தப்படும்.
- எல்லைப்பகுதி மற்றும் சர்வதேச இணைப்புச் சாலைகள், கடற்கரை மற்றும் துறைமுக இணைப்புச் சாலைகள், தேசியச்சாலை வழித்தடங்களின் செயல்திறன் மேம்பாடு மற்றும் பொருளாதார நோக்கு வழித்தடங்களின் வளர்ச்சி போன்ற புதிய முயற்சிகளில் பாரத்மாலா திட்டம் கவனம் செலுத்துகிறது.

## வெளிநாடு வாழ் இந்தியர்களுக்கு 'பதிலி' வாக்கு முறை: மத்திய அமைச்சரவை ஒப்புதல்

- வெளிநாடுகளில் வசிக்கும் இந்தியர்கள் தங்களுக்குப் பதிலாக வேறு ஒருவர் மூலம் தேர்தலில் வாக்களிப்பதற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.
- தற்பொழுது வெளிநாடுகளில் வசிக்கும் இந்தியர்கள் எந்தத் தொகுதியில் பதிவு செய்துள்ளார்களோ அந்தத் தொகுதியில் மட்டும்தான் அவர்கள் வாக்களிக்கும் வழக்கம் நடைமுறையில் உள்ளது.
- இந்த மக்கள் பிரதிநிதித்துவ சட்டத்தில் செய்யப்பட்ட திருத்தம் நடைமுறைக்கு வருவதன் மூலம் வெளிநாடுகளில் வாழும் இந்தியர்கள் தங்களது உறவினர் மூலம் வாக்களிக்க முடியும்.
- ராணுவ வீரர்களுக்கு மட்டுமே இச்சலுகை தற்போது வழங்கப்பட்டு வருகிறது.
- இருந்தாலும் , ராணுவ வீரர்களுக்கும் வெளிநாடு வாழ் இந்தியர்களுக்கும் ஒரே மாதிரியான சலுகை வழங்கப்படவில்லை.

- ராணுவ வீரர்களுக்கான சலுகையானது அவர்களின் உறவினர்களை நிரந்தரமாகவே தங்களுக்கு பதிலாக வாக்களிக்க நியமித்துக்கொள்ள இயலும். ஆனால், வெளிநாடு வாழ் இந்தியர்கள் அனைத்து தேர்தல்களுக்கும் ஒரே பிரதிநிதியினை நியமிக்க இயலாது.

**நெடுஞ்சாலைக் கிராமங்கள் (Highway village) மற்றும் நெடுஞ்சாலைப் பின்னல்கள் (Highway Nests)**

- இந்திய தேசிய நெடுஞ்சாலைகள் ஆணையமானது தேசிய நெடுஞ்சாலைகளை ஒட்டி நாடு முழுவதும் 183 இடங்களில் வாகன ஓட்டிகள் ஓய்வு எடுப்பதற்கும் இளைப்பாறுவதற்கும் உண்டான வசதிகளை ஏற்படுத்தித் தருவதற்கான நடைமுறைகளை துவங்கி இருக்கிறது.



- இந்த இடங்களில் அனைத்து வித வசதிகளும் வாகன ஓட்டிகளுக்கு கிடைக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.
- "நெடுஞ்சாலை கிராமங்கள்" (Highway Villages) என்பது தேசிய நெடுஞ்சாலையை ஒட்டிய பகுதியில் 5 ஏக்கருக்கு மேல் உருவாக்கப்படுகின்ற பல வசதிகளுடன் கூடிய அமைப்பாகும். அதற்கு குறைவான ஏக்கர் மதிப்பில் இருப்பது "நெடுஞ்சாலைப் பின்னல்" (Highway Nest) ஆகும்.
- தேசிய நெடுஞ்சாலையில் ஒவ்வொரு 50 கிலோ மீட்டருக்கும் இந்த வசதிகள் உருவாக்கப்பட இருக்கின்றன.

**சர்வதேச நெல் ஆராய்ச்சி நிறுவனத்தின் தெற்காசிய பிராந்திய மையம் உ.பி. யின் வாரணாசியில் அமைய இருக்கிறது**

- வாரணாசியில் உள்ள தேசிய விதை ஆராய்ச்சி மற்றும் பயிற்சி மைய வளாகத்தில் இந்நிறுவனம் அமைக்கப்படுவதற்கான அனுமதியினை மத்திய அமைச்சரவைக் குழு வழங்கியிருக்கிறது.

- இப்பரிந்துரையின் கீழ் வாரணாசியில் நெல்லுக்கு மதிப்பு கூட்டுச் செய்யும் உயராய்வு மையம் ஏற்படுத்தப்பட உள்ளது.
- இந்நிறுவனத்தில் தானியங்களில் உள்ள கன உலோகங்களின் தரத்தினை அறியக்கூடிய வகையிலான சோதனைக் கூடம் நவீன முறையில் ஏற்படுத்தப்பட இருக்கிறது.
- கிழக்கிந்தியாவில் அமையப்பட இருக்கிற முதல் சர்வதேச மையம் இதுவே ஆகும். இப்பிராந்தியத்தில் நெல் உற்பத்தியினை மேம்படுத்துவதற்கு இந்நிறுவனம் மிகவும் உறுதுணையாக விளங்கும்.

## இந்தியாவின் முதல் தனியார் ஏவுகணை தொழிற்சாலை

- இந்தியாவில் ஏவுகணை துணைப்பாகங்களை உற்பத்தி செய்யும் முதல் தனியார் துறை தொழிற்சாலையானது தெலுங்கானா மாநிலத்தில் உள்ள ஹைதராபாத் நகரில் தொடங்கப்பட்டுள்ளது.
- மத்திய அரசின் 'இந்தியாவில் உருவாக்குவோம்' ('Make in India') திட்டத்தின்படி தொடங்கப்பட்டுள்ள இந்த தொழிற்சாலை , பாதுகாப்புத் துறையில் தனியார் பங்களிப்பை ஊக்கப்படுத்தவும், பாதுகாப்புத் துறையில் இந்தியாவின் திறன்களை வலுப்படுத்த உதவும்.

*தொழிற்சாலையின் பங்குதாரர்கள்:*

1. கல்யாணி குழுமம் – தனியார் குழுமம் – 51 % பங்குதாரர்
2. Rafael Advanced Defense Systems Ltd. - இஸ்ரேலிய பாதுகாப்பு தொழில்நுட்ப நிறுவனம் – 49 % பங்குதாரர்

- இந்தத் திட்டத்தின் முதல் கட்டமாக , கல்யாணி ரபேல் மேம்பட்ட அமைப்புகள் (Kalyani Rafael Advanced Systems, KRAS) தொழிற்சாலை, இஸ்ரேலின் இஸ்பைக் (Spike) எனப்படும் பீரங்கிகளை தாக்கி அழிக்கக்கூடிய ஏவுகணைகளை (Anti-Tank Guided Missile, ATGM) தயாரிக்க இருக்கிறது.


## அக்ரி உடான் (AGRI UDAAN) - உணவு மற்றும் வேளாண் வர்த்தகத்தை ஊக்கப்படுத்தும் முயற்சி

- அக்ரி உடான் என்பது தொடக்கநிலை வேளாண் நிறுவனங்களை மேம்படுத்தக்கூடிய தனித்துவமான முயற்சி ஆகும்.
- திட்டத்தினை இணைந்து செயல்படுத்தும் அமைப்புகள் :
  - இந்திய வேளாண்மை ஆய்வுக் கழகம் (Indian Council of Agriculture Research - ICAR)
  - இந்திய மேலாண்மைக் கழகம், அகமதாபாத் (Indian Institute of Management, Ahmedabad)
- தொடக்கநிலை வேளாண் நிறுவனங்களுக்கு கல்வி , விழிப்புணர்வு , வழிகாட்டுதல் , ஆலோசனை மற்றும் நிதி உதவி அளிப்பது போன்றவை இதன் நோக்கமாகும்.
- இந்த முயற்சியின் ஒரு பகுதியாக , ஆறு மாதத் திட்டம் ஒன்று வகுக்கப்பட்டுள்ளது . இதன்படி, புதுமையான வணிக முறைகளில் இயங்கும் தொடக்கநிலை வேளாண் நிறுவனங்கள்

தேர்ந்தெடுக்கப்பட்டு, அந்நிறுவனங்களுக்கு தேர்ந்த ஆலோசனையும் , வழிகாட்டுதல்களும் வழங்கப்படும். இது அவற்றின் செயல்பாட்டை சந்தையில் விரிவுபடுத்த உதவும்.

### வருடாந்திர கல்வி நிலை அறிக்கை(Annual Status of Education Report)

- பிரதம் (PRATHAM) என்னும் தன்னார்வ அரசு சாரா நிறுவனம் இந்த வருடாந்திர கல்வி நிலை அறிக்கையினை வெளியிடுகிறது.
- இந்த வருடாந்திர கல்வி நிலை அறிக்கை கணக்கெடுப்பில், மத்திய மனித வள மேம்பாட்டு அமைச்சகத்துக்கு எவ்வித தொடர்பும் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.



- இது கிராமப்புறங்களில் இருக்கும் வீடுகளை (குடும்பங்களை) மட்டும் உள்ளடக்கும் கணக்கெடுப்பு ஆகும் .
- ஆரம்ப நிலைக் கல்வியில், ஒவ்வொரு வகுப்பின் கற்றல் ஆக்கங்களை இந்த அறிக்கை காட்டுகிறது .மொழிப் பாடம் , கணிதம், சுற்றுச்சூழல் கல்வி, அறிவியல் மற்றும் சமூக அறிவியல் போன்ற பாடங்களின் அடிப்படையில் கற்றல் வெளிப்பாடு கணக்கிடப்படுகிறது.
- அனைத்துக் குழந்தைகளுக்கும் தகுந்த கல்வி, தரமாக கிடைக்க இந்த அறிக்கை வழிகாட்டுகிறது.
- கல்வித் திட்டங்களை செயல்படுத்துவதில் மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களுக்கு இந்த அறிக்கையானது பெரிதும் உதவுகின்றன.

### சாம்வாட் (SAMVAD)

- முரண்பாடுகளை தவிர்த்தல் மற்றும் சுற்றுச்சூழல் உணர்வு நிலையினை வெளிக் கொணர்வதற்காக உலகளாவிய கூடுகை முயற்சியே சம்வாட் ஆகும்.
- மியான்மரின் யாங்கூனில் ‘சம்வாட்டின்’ இரண்டாவது மாநாடு சமீபத்தில் நடைபெற்றது .
- 2015 ஆம் ஆண்டு செப்டம்பரில் விவேகானந்தா கேந்திராவின் மூலமாக இதன் முதல் மாநாடு புது தில்லியில் நடைபெற்றது.

- இம்மாநாடு உலகின் பல்வேறு மதங்களையும், மரபுகளையும் பிரதிபலிக்கின்றது.

### குடியரசு துணைத் தலைவராக வெங்கய்யா நாயுடு தேர்வு

- நாட்டின் 13-ஆவது குடியரசு துணைத் தலைவராக முன்னாள் மத்திய அமைச்சர் வெங்கய்யா நாயுடு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். அவர், தம்மை எதிர்த்துப் போட்டியிட்ட எதிர்க்கட்சிகளின் பொது வேட்பாளர் கோபாலகிருஷ்ண காந்தியைக் காட்டிலும் இரு மடங்கு அதிகமான வாக்குகளைப் பெற்று வெற்றி வாகை சூடினார்.
- புதிய குடியரசுத் துணைத் தலைவராக வெங்கய்யா நாயுடு வரும் ஆகஸ்ட் 11ஆம் தேதி பதவியேற்க உள்ளார்.
- மொத்தம் பதிவான 771 வாக்குகளில், வெங்கய்யா நாயுடு 516 வாக்குகளைப் பெற்று வெற்றி பெற்றார். அவரை எதிர்த்துப் போட்டியிட்ட கோபால கிருஷ்ண காந்தி 244 வாக்குளை மட்டுமே பெற்றார்.
- குடியரசு துணைத் தலைவர் தேர்தலில் நாடாளுமன்ற எம்.பி.க்கள் மட்டுமே வாக்களிக்க முடியும் என்பதால், இரு அவைகளையும் சேர்த்து மொத்தம் 790 வாக்குகள் இருந்தன. குடியரசு துணைத் தலைவர் தேர்தலில் 98 சதவீதத்திற்கும் அதிகமான வாக்குகள் பதிவாகியுள்ளன.
- தற்போதைய குடியரசு துணைத் தலைவர் ஹமீது அன்சாரியின் பதவிக்காலம் ஆகஸ்ட் 10ஆம் தேதியுடன் நிறைவடைகிறது. அவர் தொடர்ச்சியாக இருமுறை அப்பொறுப்பை வகித்துள்ளது குறிப்பிடத்தக்கது.
- இதற்கு முன்பு, கடந்த 2012 ஆம் ஆண்டு நடைபெற்ற குடியரசு துணைத் தலைவர் தேர்தலில் ஹமீது அன்சாரி 490 வாக்குகளையும், அவரை எதிர்த்துப் போட்டியிட்ட தேசிய ஜனநாயகக் கூட்டணி வேட்பாளர் ஜஸ்வந்த் சிங் 238 வாக்குகளையும் பெற்றது நினைவு கூரத்தக்கது.
- கடந்த 25 ஆண்டுகளில் மிக அதிகமான வாக்குகள் பெற்று தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கும் குடியரசுத் துணைத்தலைவர் என்கிற பெருமையும் வெங்கய்யா நாயுடுவுக்கு கிடைத்திருக்கிறது.
- 1952, 1957 தேர்தல்களில் டாக்டர் எஸ். இராதாகிருஷ்ணனும், 1979-இல் உச்சநீதிமன்ற முன்னாள் தலைமை நீதிபதி முகமது ஹிதயத்துல்லாவும், 1987 இல் சங்கர் தயாள் சர்மாவும் போட்டியின்றி துணை குடியரசுத் தலைவராக தேர்ந்தெடுக்கப் பட்டிருக்கிறார்கள்.
- அதேபோல இரண்டு முறை தொடர்ந்து குடியரசுத் துணைத்தலைவராக பதவி வகித்த பெருமை டாக்டர் எஸ். இராதாகிருஷ்ணனுக்கும்( 1952-57, 1957-62) , ஹமீது அன்சாரிக்கும் (2007-12, 2012-17) மட்டுமே உண்டு.

### ஹத்கர்கா சம்வர்தான் சகாயத்தா திட்டம் (Hathkargha Samvardhan Sahayata)

- கைத்தறி நெசவாளர்களின் வருமானத்தை அதிகப்படுத்தும் வகையிலான திட்டத்தினை மத்திய ஜவுளித்துறை அமைச்சகம் செயல்படுத்தி உள்ளது.
- கைத்தறி நெசவாளர்கள் தங்களது நூல் தறிக்கும் கருவிகளின் உபகரணத் தேவைகளை ஈடு செய்யும் விதத்தில் இந்தத் திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது.
- நெசவாளர்கள் புதிய தறிக் கருவிகள் வாங்கத் தேவையான செலவில் 90 சதவீதத்தினை மத்திய அரசே பொறுப்பேற்றுக் கொள்கிறது. இதனால் நெசவாளர்களுக்கான பெரும் நிதிச்சுமை நீங்குகிறது.

### மாடுகளுக்கு "ஆதார்' வழங்கும் திட்டம்

- மனிதர்களுக்கு தனி நபர் அடையாள அட்டை (ஆதார்) வழங்குவதைப் போலவே மாடுகளுக்கும் தனித்த அடையாள எண்ணுடன் கூடிய அடையாள அட்டை வழங்கும் திட்டத்தை மத்திய அரசு அறிமுகப்படுத்தியுள்ளது.

- இந்தத் திட்டத்தின் கீழ் தமிழகத்தில் முதல் முறையாக கோவையில் அடையாள அட்டை வழங்கும் பணிகள் தொடங்கியுள்ளன.
- மத்திய பால்வள மேம்பாட்டு வாரியம் சார்பில் நாடு முழுவதும் உள்ள மாடுகளுக்கு தனித்த அடையாள அட்டை வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது. விலங்குகள் நல அட்டை (ஹெல்த் கார்டு) என்ற பெயரில் வழங்கப்பட உள்ள இந்த அட்டையை தமிழகத்தில் முதல் கட்டமாக கோவை, சேலம், வேலூர், விழுப்புரம், மதுரை உள்ளிட்ட 7 மாவட்டங்களில் வழங்கத் திட்டமிடப்பட்டது.
- அதன்படி, சோதனை அடிப்படையில் கோவை மாவட்டத்தில் இந்தப் பணிகள் தொடங்கப்பட்டுள்ளன.
- நாடு முழுவதிலும் உள்ள மாடுகளின் உடல் நலனைக் கண்காணிக்கவும், எண்ணிக்கைப் பெருக்கம், நோய் பரவல் உள்ளிட்ட விவரங்களைச் சேகரிக்கவும், பால் பெருக்கத்தை அதிகரிக்கவும் ஒவ்வொரு மாட்டுக்கும் 12 இலக்கம் கொண்ட தனித்த அடையாள எண் (யு.ஐ.டி.) வழங்கப்பட உள்ளது. இதற்காக பார்கோடு கொண்ட பாலியூரித்தேனால் ஆன அட்டை ஒவ்வொரு மாட்டின் காதிலும் பொருத்தப்படும்.
- அத்துடன், இந்த விவரங்கள் சேகரிக்கப்பட்டு கால்நடை பராமரிப்புத் துறையின் இணையதளத்திலும் பதிவேற்றம் செய்யப்படும்.
- சேகரிக்கப்படும் விவரங்கள் ஆன்லைனில் பதிவேற்றம் செய்வதால் மாநிலம் முழுவதிலும் உள்ள மாடுகளின் விவரங்களை சென்னையில் உள்ள அதிகாரிகளாலும், தில்லியில் உள்ள உயர் அதிகாரிகளாலும் உடனடியாகக் காண முடியும்.
- கலப்பின மாடு, நாட்டு மாடு, எருமை ஆகியவற்றுக்கு 3 தனித்தனியான வர்ணங்களில் இந்த அட்டை வழங்கப்படும்.
- மாடுகளுக்கு தனித்த அடையாள அட்டையை வழங்குவதன் மூலமாகத் திருட்டு, இறைச்சிக்காக கடத்தப்படுவது போன்றவையும் கட்டுப்படுத்தப்படும் என்று கால்நடை பராமரிப்புத் துறை தெரிவித்துள்ளது.

## இரண்டாம் கட்ட தட்டம்மை ரூபெல்லா தடுப்பூசி முகாம்: 3.4 கோடி குழந்தைகளுக்கு செலுத்த இலக்கு

- இரண்டாம் கட்ட தட்டம்மை ரூபெல்லா தடுப்பூசி முகாமை மத்திய சுகாதாரத் துறை அமைச்சகம் துவக்கியுள்ளது . இந்த முகாமில், 3.4 கோடி குழந்தைகளுக்கு அந்தத் தடுப்பூசியை செலுத்த இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.
- ஆந்திரப் பிரதேசம், சண்டிகர், ஹிமாசலப் பிரதேசம், கேரளம், தெலுங்கானா, உத்தரகாண்ட் ஆகிய மாநிலங்களிலும், தாத்ரா-நாகர் ஹவேலி, டாமன்-டையூ ஆகிய யூனியன் பிரதேசங்களிலும் இந்த இரண்டாம் கட்ட தட்டம்மை ரூபெல்லா தடுப்பூசி முகாம்கள் நடத்தப்படவுள்ளன.
- முதல் கட்டமாக, தமிழ்நாடு, கர்நாடகம் ஆகிய மாநிலங்களிலும், கோவா, லட்சத்தீவு, புதுச்சேரி ஆகிய யூனியன் பிரதேசங்களிலும் நடைபெற்ற தட்டம்மை ரூபெல்லா தடுப்பூசி முகாமில் 3.3 கோடி குழந்தைகளுக்கு தடுப்பூசி போடப்பட்டது. இது, தடுப்பூசி போடுவதற்குரிய வயதுக் குழந்தைகளின் எண்ணிக்கையில் 97 சதவீதமாகும்.
- பல கட்டங்களாக நடத்தப்படும் இந்த முகாம்களில், 9 மாதக் குழந்தைகள் முதல் 15 வயதுக்குற்பட்ட சிறுவர்கள் வரை, மொத்தம் 41 கோடி பேருக்கு தட்டம்மை ரூபெல்லா தடுப்பூசி போடத் திட்டமிடப்பட்டுள்ளது.
- இந்த முகாம்களைத் தொடர்ந்து, தற்போது 9-இல் இருந்து 12 மாதங்களுக்குள் ஒரு முறையும், 16-இல் இருந்து 24 மாதங்களுக்கு ஒருமுறையும் வழங்கப்பட்டு வரும் தட்டம்மை தடுப்பூசிகளுக்குப் பதிலாக, தட்டம்மை ரூபெல்லா தடுப்பூசிகள் போடுவது வழக்கமாக்கப்படும்.

- தட்டம்மை மற்றும் ரூபெல்லா நோய்களுக்கு எதிரான எதிர்ப்பு சக்தியை குழந்தைகளிடம் உருவாக்கி, அந்த இரு நோய்களையும் ஒழித்துக்கட்டுவதே இந்த முகாம்களின் நோக்கமாகும்.

### உச்ச நீதிமன்ற 45-ஆவது தலைமை நீதிபதி: தீபக் மிஸ்ரா

- உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதியாக தற்போது பதவி வகித்து வரும் ஜே.எஸ். கேஹரின் பதவிக்காலம் வரும் ஆகஸ்ட் 27-ஆம் தேதியுடன் நிறைவடையவுள்ளது.
- இதையடுத்து, சட்ட விதிகளின்படி உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதியாக யாரை நியமிக்க வேண்டும் என்பது குறித்த பரிந்துரையை அளிக்கும்படி, கேஹரிடம் மத்திய சட்ட அமைச்சகம் கேட்டிருந்தது. அதன்படி, உச்ச நீதிமன்றத்தில் தனக்குப் பிறகு மிகவும் மூத்த நீதிபதியாக இருக்கும் தீபக் மிஸ்ராவின் பெயரை சட்ட அமைச்சகத்திடம் கேஹர் பரிந்துரைத்தார். இந்த பரிந்துரையை ஏற்று, உச்ச நீதிமன்றத்தின் புதிய தலைமை நீதிபதியாக தீபக் மிஸ்ராவை மத்திய அரசு நியமித்தது.
- 63 வயதாகும் தீபக் மிஸ்ரா, உச்ச நீதிமன்றத்தின் 45-ஆவது தலைமை நீதிபதியாக வரும் ஆகஸ்ட் 28-ஆம் தேதி பதவியேற்கவுள்ளார். அந்தப் பதவியை அவர் தொடர்ந்து 14 மாதங்கள் வகிப்பார்.
- அயோத்தி வழக்கு, காவேரி பிரச்னை, பிசிசிஐ சீர்திருத்தங்கள், பனாமா ஆவணங்கள் கசிவு உள்ளிட்ட முக்கிய விவகாரங்கள் தொடர்பான வழக்குகள் உச்ச நீதிமன்றத்தில் நடைபெற்று வருகின்றன. இந்த வழக்குகளை விசாரிக்கும் அமர்வுகளில், தீபக் மிஸ்ராவும் இடம் பெற்றுள்ளார்.
- முன்னதாக, கடந்த 1977-ஆம் ஆண்டில் வழக்குரைஞராக பதிவு செய்த தீபக் மிஸ்ரா, ஒடிஸா உயர் நீதிமன்றம் மற்றும் சேவைகள் தீர்ப்பாயத்தில் பல்வேறு விவகாரங்கள் தொடர்பான வழக்குகளில் திறம்பட வாதாடியுள்ளார். இதையடுத்து, ஒடிஸா உயர் நீதிமன்றத்தில் கூடுதல் நீதிபதியாக 1996-ஆம் ஆண்டு நியமிக்கப்பட்டார். பின்னர், மத்தியப் பிரதேச உயர் நீதிமன்றத்துக்கு இடமாற்றம் செய்யப்பட்டார். இதையடுத்து, பாட்னா உயர் நீதிமன்றம், தில்லி உயர் நீதிமன்றம் ஆகியவற்றில் தலைமை நீதிபதியாக அவர் நியமிக்கப்பட்டார். பிறகு, தில்லி உயர் நீதிமன்றத்தில் இருந்து உச்ச நீதிமன்ற நீதிபதியாக தீபக் மிஸ்ரா கடந்த 2011-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் நியமிக்கப்பட்டார்.

### உருது மொழியில் 'நீட்' தேர்வு: உச்ச நீதிமன்றத்திடம் மத்திய அரசு ஒப்புதல்

- மருத்துவப் படிப்புகளுக்கான 'நீட்' தேர்வுகள் தற்பொழுது ஆங்கிலம் மற்றும் 9 பிராந்திய மொழிகளில் நடத்தப்பட்டு வருகின்றன.
- இந்த நிலையில், இந்த ஆண்டுக்கான 'நீட்' தேர்வை உருது மொழியிலும் நடத்த வேண்டும் என்று உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட மனுவை விசாரித்த நீதிமன்றம், இது தொடர்பாக பதிலளிக்குமாறு மத்திய அரசுக்கு உத்தரவிட்டது.
- இந்த நிலையில், இதுதொடர்பாக நடைபெற்ற விசாரணையின் போது மத்திய அரசு சார்பில் ஆஜரான சொலிசிட்டர் ஜெனரல் ரஞ்சித் குமார், 'நீட்' தேர்வை உருது மொழியில் நடத்த மத்திய அரசு தயாராக இருப்பதாக தெரிவித்தார்.
- வரும் 2018-19 கல்வி ஆண்டுக்கான நீட் தேர்வை பிற மொழிகளைப் போல் உருது மொழியிலும் நடத்த மத்திய அரசு தயாராக இருப்பதாகத் தெரிவித்தார்.
- தற்போது'நீட்' தேர்வுகள் தமிழ், ஆங்கிலம், ஹிந்தி, குஜராத்தி, மராத்தி, ஒரிய மொழி, வங்க மொழி, அஸாமிய மொழி, தெலுங்கு, கன்னடம் ஆகிய மொழிகளில் நடத்தப்பட்டு வருகின்றன.

## தேசிய குற்ற ஆவணங்கள் செயலகமானது காவல் துறை ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுச் செயலகத்துடன் இணைப்பு

- தேசிய குற்ற ஆவணங்கள் செயலகமானது ) National Crime Records Bureau - NCRB), காவல் துறை ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுச் செயலகத்துடன் ) The Bureau of Police Research and Development - BPRD) இணைக்கப்பட்டுள்ளது.
- காவல்துறையின் செயல்பாடுகளை மேம்படுத்தவும் முன்னேற்றவும் இந்த இணைப்பு செயல்படுத்தப்பட்டுள்ளது .இவ்வாறு இணைக்கப்பட்ட புதிய குழுவின் தலைவராக காவல்துறை ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுச் செயலகத்தின் (BPRD) இயக்குனர் ஜெனரல் (Director General - DG) பதவி வகிப்பார்.
- தேசிய குற்ற ஆவணங்கள் காப்பகம் (National Crime Records Bureau - NCRB) என்பது நாடு முழுவதும் நடக்கும் குற்றங்களின் தரவுகளை சேகரித்து , பல அளவுருக்களின் அடிப்படையில் அவற்றை வகைப்படுத்தி பராமரிக்கும் மத்திய காவல்துறை நிறுவனம் ஆகும்.
- குற்றம் மற்றும் குற்றவியல் கண்காணிப்பு பிணைப்பினை (Crime and Criminal Tracking Network - CCTNS) செயல்படுத்தும் நிறுவனம் தேசிய குற்ற ஆவணங்கள் காப்பகம் ஆகும்.
- காவல்துறை ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுச் செயலகமானது (The Bureau of Police Research and Development - BPRD) காவல்துறை தொடர்பான ஆய்வு, ஆராய்ச்சி மற்றும் திட்டங்களை வகுப்பதற்காக தொடங்கப்பட்ட மத்திய காவல்துறை மேம்பாட்டு நிறுவனம் ஆகும்.
- இந்த இரண்டு நிறுவனங்களும் மத்திய உள்துறை அமைச்சகத்தின் கீழ் செயல்படுகின்றன.

## 'வெள்ளையனே வெளியேறு' போராட்டத்தின் 75 ஆவது ஆண்டு நினைவு

- 1942 ஆம் வருடம், ஆகஸ்டு மாதம் 8 ஆம் நாள், மும்பையில் கூடிய அகில இந்திய காங்கிரஸ் மாநாட்டில் வைத்து தான் முதன்முறையாக குயிட் இந்தியா எனப்படும் 'வெள்ளையனே வெளியேறு' போராட்டத்துக்கான அறிவிப்பு வெளியானது.
- ஆகஸ்டு மாதத்தில் துவக்கிய போராட்டம் என்பதால், இதை ஆகஸ்டு போராட்டம் என்றும், ஆகஸ்ட் கிரந்தி (August Kranti) என்றும் குறிப்பிடுவார்கள்.
- இந்த இயக்கம் இந்தியாவில் பிரிட்டிஷ் ஆட்சிக்கு முற்றுப்புள்ளி வைக்கக் கோரியது.
- 'கிரிப்ஸ் திட்டம்' (Cripps Mission) தோல்வியடைந்த பின்னர் இந்த தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இந்த இயக்கத்தில் தான் மகாத்மா காந்தியின் புகழ்பெற்ற "செய் அல்லது செத்து மடி" ("Do or Die" ) என்ற முழக்கம் முழங்கப்பட்டது.

## இ-சக்தி (E-Shakti)

- இ-சக்தி திட்டம் நபார்டு வங்கியின் முன்னோடித் திட்டம் ஆகும்.
- இதன் பிரதான நோக்கம் சுயஉதவிக் குழுக்களை மின்னணு மயமாக்குதல் ஆகும்.
- சுய உதவி குழுக்கள் பின்பற்றி வரும் கணக்குப் புத்தகங்களின் தரத்தினை மேம்படுத்தவும், அவர்களுக்கான கடன் வழங்குதல் குறித்த முடிவெடுத்தலினை எளிமைப் படுத்துவதற்காக வங்கிகளுக்கு உதவுதலும் இந்த முன்னோடித் திட்டம் மூலமாக செயல்படுத்தப்படுகிறது.

## பெண்ணின் 26 வார கருவைக் கலைக்க உச்ச நீதிமன்றம் அனுமதி

- மகாராஷ்டிர மாநிலத்தைச் சேர்ந்த 26 வயதாகும் பெண் ஒருவர், தனது வயிற்றில் இருக்கும் 26 வார கருவைக் கலைக்க அனுமதிக்கக் கோரி, உச்ச நீதிமன்றத்தில் மனு தொடுத்திருந்தார். இந்த மனு, உச்ச நீதிமன்றத்தில் நீதிபதிகள் எஸ்.ஏ. பாப்தே, நாகேஸ்வர ராவ் ஆகியோரைக் கொண்ட அமர்வு முன்னிலையில் விசாரணைக்கு வந்தது.

- அப்போது, பெண்ணின் உடல்நிலையைப் பரிசோதித்த மும்பையைச் சேர்ந்த மருத்துவமனை சார்பில் மருத்துவ அறிக்கை தாக்கல் செய்யப்பட்டது. அதில், கருவுக்கு, மண்டையோடு உருவாகவில்லை என்பதை சுட்டிக்காட்டி, அதை முழுவதும் வளர அனுமதிப்பது, பெண்ணுக்கு மனரீதியிலான பாதிப்பை ஏற்படுத்தும் எனத் தெரிவிக்கப்பட்டிருந்தது.
- இதை பரிசீலித்த நீதிபதிகள், 1971ஆம் ஆண்டு மருத்துவ ரீதியில் கருவைக் கலைக்கும் சட்டத்தின் கீழ், பெண்ணின் கருவைக் கலைக்க அனுமதித்து உத்தரவிட்டனர்.
- மேலும், அந்தப் பெண் மருத்துவ சிகிச்சைப் பெற்று வந்த மருத்துவமனையில் தான், கரு கலைக்கப்பட வேண்டும் என்றும் நீதிபதிகள் வலியுறுத்தினர்.
- கருவை மருத்துவ ரீதியிலான நடவடிக்கை மூலம் கலைக்கும் சட்டத்தின் 3(2)(பி) பிரிவில், 20 வார காலத்துக்கும் மேற்பட்ட கருவைக் கலைக்க தடை விதிக்கப்பட்டுள்ளது.
- எனினும், அசாதாரண சூழ்நிலையில், நீதிமன்ற அனுமதியுடன் மருத்துவ ரீதியில் கருவைக் கலைக்கும் நடைமுறை பின்பற்றப்பட்டு வருகிறது. இதுபோல், உச்ச நீதிமன்றத்தால் அண்மைக்காலங்களில் ஏராளமான தீர்ப்புகள் வழங்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

## பாரத ஸ்டேட் வங்கியுடன் துணை வங்கிகள் இணைப்பை அங்கீகரிக்கும் மசோதா நிறைவேற்றம்

- பாரத ஸ்டேட் வங்கியுடன் அதன் துணை வங்கிகள் இணைக்கப்பட்டதை அங்கீகரிக்கும் மசோதா, மக்களவையில் நிறைவேற்றப்பட்டது.
- பாரத ஸ்டேட் வங்கியுடன் அதன் துணை வங்கிகளான ஸ்டேட் பேங்க் ஆஃப் பிகானீர், ஜெய்ப்பூர் (எஸ்பிபிஜே), ஸ்டேட் பேங்க் ஆஃப் ஹைதராபாத் (எஸ்பிஹெச்), ஸ்டேட் பேங்க் ஆஃப் மைசூர் (எஸ்பிஎம்), ஸ்டேட் பேங்க் ஆஃப் பாட்டியாலா (எஸ்பிபி), ஸ்டேட் பேங்க் ஆஃப் திருவாங்கூர் (எஸ்பிடி) ஆகிய 5 வங்கிகளும், பாரதிய மகிளா வங்கியும் கடந்த ஏப்ரல் 1-ஆம் தேதி இணைக்கப்பட்டன.
- இந்த இணைப்பின் மூலம் பாரத ஸ்டேட் வங்கியின் மொத்த வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை 37 கோடியாகவும், வங்கிக் கிளைகளின் எண்ணிக்கை 24 ஆயிரமாகவும் உயர்ந்தது. இந்நிலையில், இந்த இணைப்பை அங்கீகரிக்கும் மசோதா, மக்களவையில் நிறைவேற்றப்பட்டது.
- இந்த மசோதா, கடந்த 1959-ஆம் ஆண்டைய எஸ்பிஐ (துணை வங்கிகள்) சட்டம், 1956-ஆம் ஆண்டைய ஸ்டேட் பேங்க் ஆஃப் ஹைதராபாத் சட்டம் ஆகியவற்றை நீக்குவதற்கும், பாரத ஸ்டேட் வங்கிச் சட்டத்தில் உரிய திருத்தங்கள் செய்வதற்கும் வழிவகுக்கிறது.
- எஸ்பிஐ-யுடன் துணை வங்கிகள் இணைக்கப்பட்டதன் மூலம் உலக அளவில் சிறந்த 50 வங்கிகளின் பட்டியலில் எஸ்பிஐ இடம்பிடித்துள்ளது. உலக அளவில் 45-ஆவது இடத்தில் எஸ்பிஐ உள்ளது.

## மாற்றுத் திறனாளிகளுக்காக சைகை மொழியில் தேசிய கீதம்: மத்திய அரசு வெளியீடு

- மாற்றுத் திறனாளிகளுக்காக சைகை மொழியில் உருவாக்கப்பட்டுள்ள தேசிய கீதத்தை மத்திய அரசு வெளியிட்டுள்ளது.
- சுமார் 3.35 நிமிடங்கள் ஓடக்கூடிய இந்த வீடியோவை மத்திய மனிதவள மேம்பாட்டுத் துறை அமைச்சர் மகேந்திர நாத் பாண்டே வெளியிட்டார். டில்லி செங்கோட்டையின் பின்னணியில், மாற்றுத்திறனாளிக் குழந்தைகளுடன், பாலிவுட் நடிகர் அமிதாப் பச்சனும் இணைந்து சைகை மொழியில் தேசிய கீதத்தை வழங்கியுள்ளனர். இதனை பிரபல திரைப்பட இயக்குனர் கோவிந்த் நிஹலானி இயக்கியுள்ளார்.
- மத்திய சமூக நீதி அமைச்சகத்தின் ஒத்துழைப்புடன் இந்த தேசிய கீதம் உருவாக்கப்பட்டுள்ளது.

### குடியரசு துணைத்தலைவராக வெங்கையா நாயுடு பதவியேற்பு

- நாட்டின் 15-ஆவது குடியரசு துணைத்தலைவராக வெங்கையா நாயுடு (68) 10.08.2017 அன்று பதவியேற்றுக் கொண்டார்.




- தில்லி குடியரசுத் தலைவர் மாளிகையில் உள்ள தர்பார் ஹாலில் குடியரசு துணைத்தலைவராக வெங்கையா நாயுடு பதவியேற்கும் விழா நடைபெற்றது. இதில், வெங்கையா நாயுடுவுக்கு குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த் பதவிப்பிரமாணம் செய்து வைத்தார்.
- வெங்கய்ய நாயுடு, இந்தியாவின் 15-ஆவது குடியரசு துணைத் தலைவர் ஆவார். அந்தப் பதவியை வகிக்கும் 13-ஆவது நபர் எனும் பெருமையையும் அவர் பெறுகிறார். மேலும் நாடு சுதந்திரம் அடைந்த பிறகு பிறந்த ஒருவர் குடியரசு துணைத் தலைவராக பதவியேற்பது இதுவே முதல்முறையாகும்.
- நாட்டின் குடியரசு துணைத் தலைவர் என்ற முறையில், மாநிலங்களவைக்கும் வெங்கையா நாயுடு தலைவராகிறார்.

### நிதித்தரவுகள் மேலாண்மை மையம்: (Financial Data Management Centre)

- சமீபத்தில் சட்ட அமைச்சகம் நிதித்தரவுகள் மேலாண்மை மையம் ஒன்றினை உருவாக்குவதற்கு ஒப்புதல் வழங்கியுள்ளது.
- நிதி ஒழுங்குபடுத்தும் அமைப்புகளின் தரவுகளை, புதிதாக உருவாக்கப்படும் இந்த மையம் அவர்களிடம் இருந்து தரவுகளை நேரடியாகப் பெற்றுக் கொள்ளும்.
- இனி பாரத ரிசர்வ் வங்கியானது நிதித்தரவுகளை மற்ற அமைப்புகளிடம் இருந்து பெற்று அதனை பாதுகாக்கக் கூடிய ஒரே அமைப்பாக இருக்க இயலாது.

### "சங்கல்ப் சே சித்தி" (Sankalp Se Siddhi) (புதிய இந்தியா இயக்கம் 2017-2022)

- இந்தியப் பிரதமர் அவர்களால் முன்னெடுக்கப்பட்டுள்ள புதிய இந்தியா இயக்கத்தின் மூலமாக, இந்தியாவானது வறுமை, ஊழல், தீவிரவாதம், வகுப்புவாதம், சாதீயம் மற்றும் தூய்மையற்ற நிலைகளில் இருந்து முற்றிலுமாக விடுதலையினை அடையக் கூடும். இவற்றினை முழுநோக்காகக் கொண்டு "சங்கல்ப் சே சித்தி" இயக்கம் தொடங்கப் பெற்றுள்ளது.




## மருந்துகளை உட்செலுத்தும் சிகிச்சைக்கான இணையவழிப் பயிற்சி

- உலகளாவிய நிறுவனமான உட்செலுத்துதலுக்கான செவிலியர்கள் சங்கம் (Infusion Nurses Society - INS) செவிலியர்களுக்காக மருந்துகளை உட்செலுத்தும் சிகிச்சைக்கான இணையவழி பயிற்சியை இந்தியாவில் முதன்முதலில் தொடங்கி உள்ளது. இதன் நோக்கம் 3,000 க்கும் மேற்பட்ட செவிலியர்களுக்கு திறம்பட பயிற்சி அளிக்க வேண்டும் என்பதாகும்.
- இந்தியாவின் கிராமப்புற பகுதிகளில் உள்ள செவிலியர்களை ஊக்குவிப்பதற்கான முன்முயற்சியாக இத்திட்டத்தை அறிவித்துள்ளது.
- மருத்துவமனையில் அனுமதிக்கப்படும் நோயாளிகளில் பத்தில் ஒன்பது பேர் மருத்துவ சிகிச்சைக்காக தங்கி இருக்கும் போது மருந்துகளை உட்செலுத்தும் சிகிச்சை அளிக்கப்படும். தவறான உட்செலுத்துதல் நடைமுறைகள் பல சிக்கல்களுக்கு வழிவகுக்கும் . இதனால் இறப்பு, நோயின் அறிகுறிகள், மருத்துவ செலவுகள் அதிகரிக்கும்.

## "பாரத் கி வீர்" இணையவாயில்

- 9-ஏப்ரல் - 2017அன்று மத்திய உள்துறை அமைச்சரும், நடிகர் அக்ஷய் குமாரும் இணைந்து "பாரத் கீ வீர்" இணைய வாயிலைத் திறந்து வைத்தனர்.
- இது 1-ஜனவரி -2016 முதல் பணியில் இருந்தபோது நாட்டுக்காக உயிர் துறந்த CAPF வீரர்களின் குடும்பத்திற்கு நிதிக்கொடை அளிக்க உதவும் ஆன்லைன் வசதிகளை அளிக்கிறது.




- கொடையளிக்கப்பட்ட தொகை, 'Next to Kin' எனும் CAPF/CPMF வீரர்களின் கணக்கில் செலுத்தப்படும். மேலும் இதில் கொடையளிக்க விரும்புவோர் தனக்கு விருப்பமானவர்களுக்கு வழங்கும் வசதியையும் இந்த முகைமை வழங்குகிறது.
- இந்த நன்கொடைத் தொகையானது வீரர்களின் வாரிசுகளுக்கு செலுத்தப்படும். மேலும் இந்த இணையவாயில் உயிர்நீத்த வீரர்களின் குடும்பங்களுக்கு யார் வேண்டுமானாலும் நிதி உதவி செய்ய ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

## இந்தியா மற்றும் ரஷ்யா இணைந்து முத்தரப்பு போர் பயிற்சி

- இந்தியா மற்றும் ரஷ்யா, தங்களது ராணுவம், கடற்படை, மற்றும் வான்படை ஆகிய மூன்றினையும் இணைத்து மாபெரும் போர்ப் பயிற்சி ஒன்றினை நிகழ்த்த திட்டமிட்டுள்ளன. 19 முதல் 29 வரை நடக்க உள்ள இந்தப் பயிற்சியில், இரு தரப்பு படைகளும் வலுப்படும் என உறுதியளிக்கப்படுகிறது.
- இது போன்ற அந்நிய நாட்டுடனான ஓர் முப்படைப்பயிற்சி இந்தியாவில் நடைபெறுவது இதுவே முதல் முறை. மிகப்பெரிய அளவில் கடற்படை, தரைப்படை மற்றும் விமானப்படை ஆகியவை பங்கு கொள்கின்றன.
- ரஷ்யாவின் கடல், ராணுவம் மற்றும் விமானப் படைகள் தனித்தனிப் பயிற்சியில் ஈடுபட உள்ளது.
    - இந்திரா கூட்டுப்பயிற்சி - இரு நாட்டு ராணுவ கூட்டுப்பயிற்சி
    - இந்திராநேவி கூட்டுப்பயிற்சி - இரு நாட்டு கடற்படை கூட்டுப்பயிற்சி.
    - அவியா இந்திரா கூட்டுப்பயிற்சி - இரு நாட்டு வான்படை கூட்டுப்பயிற்சி

## உலக விழியியல் கவுன்சில் காங்கிரஸ்

- உலக விழியியல் கவுன்சில் காங்கிரஸ் என்பது, ஆசிய பசிபிக் விழியியல் கவுன்சிலின் உறுப்பினர்கள் மற்றும் இந்திய பார்வை நிறுவனம் (Indian Vision Institute) ஆகியவற்றின் கூட்டு முயற்சியாகும்.
- இது இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை நடைபெறும்.

- முதல் மாநாடு கொலம்பியாவில், 2015-ம் ஆண்டு நடைபெற்றது.
- இரண்டாவது மாநாடு செப்டம்பர்11-13 , 2017-ல் ஐதராபாத்தில் நடைபெற உள்ளது.
- இந்த ஆண்டிற்கான கருத்துரு "தரமான பார்வை மற்றும் கண் நலனை அணுகுதல்"
- இது உலக சுகாதார நிறுவனத்தின் "அனைத்து கண் நலன்: ஓர் சர்வதேச செயல்திட்டம் 2014-19" எனும் திட்டத்துடன் தொடர்பு உடையது. இத்திட்டம் 2017 ஆம் ஆண்டிற்குள் கண்பார்வை குறைபாட்டை 25% குறைக்க உறுதிபூண்டிருந்தது.

## கரூர் வைஸ்யா வங்கியில் ஆதார் பதிவு சேவை தொடக்கம்

- தனியார் வங்கிகளில் நாட்டிலேயே முதன்முறையாக கரூர் வைஸ்யா வங்கி ஆதார் பதிவு சேவையைத் தொடங்கியுள்ளது.
- சென்னை நெல்சன் மாணிக்கம் சாலையில் உள்ள வங்கிக் கிளையில் இச்சேவை தொடங்கப்டுள்ளது. இந்தியாவில் இதுவரை 117 கோடி பேருக்கு ஆதார் அட்டை விநியோகிக்கப்பட்டுள்ளது.
- இந்தச் சேவை விரைவில் அனைத்து வங்கிகளிலும் தொடங்கப்படவுள்ளது. புதிய விண்ணப்பதாரர் ஆதார் அட்டை பெறவும், ஏற்கெனவே பெற்றவர்கள் திருத்தங்கள் செய்து கொள்ளவும் இந்தச் சேவை பெரிதும் உதவியாக இருக்கும்.

## ஜெம் சாம்வாத் (GeM Samvaad)

- அரசு மின்னணுச் சந்தை (Government eMarketplace - GeM) என்ற சிறப்பு நோக்கு வாகனம் மற்றும் இந்தியத் தொழில் கூட்டமைப்பு (Confederation of Indian Industry - CII) ஆகிய இரண்டும் இணைந்து GeM Samvaad என்ற தொழில் கூட்டமைப்பை உருவாக்கியுள்ளனர்.
- இந்தியத் தொழில்துறை மற்றும் தொழில் முனைவுதிறன் ஆகியவற்றை ஊக்குவிப்பதற்காக பங்குகொள்ளுதல் மற்றும் கூட்டு அணுகுமுறையை இது ஊக்குவிக்கிறது

*நோக்கங்கள்*

- சிறு நிறுவனகளிடம் இருந்து பெறப்பட்ட பொருட்கள் / சேவைகளின் தரத்தை உயர்த்துதல் ; அனைத்து பங்குதாரர்களுக்கான வருடாந்திர உச்சி மாநாட்டை நடத்துதல்.
- பிராந்திய இந்தியத் தொழில்துறை கூட்டமைப்பு அலுவலகங்களில் அரச இணைய சந்தையின் (GeM) வள மையங்களை அமைத்தல்.

## விரைவு அடையாள பட்டை

- விரைவு அடையாள பட்டை(FASTag) வாகனங்களுக்கு அனைத்து தேசிய நெடுஞ்சாலையிலுள்ள சுங்கச்சாவடிகளில் தனிப்பாதை செப்டம்பர்-1 லிருந்து அமைக்கப்படுகிறது.
- இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையமானது அனைத்து மின்னணு சுங்கச் சாவடிகளில் விரைவு அடையாள ஒட்டு கிடைக்கப்பெறும் வசதிகளை இந்திய ரிசர்வ் வங்கி மற்றும் இந்திய தேசிய செலுத்து நிறுவனத்துடன் (National Payment Corporation Of India - NPCI) கலந்து ஆலோசனை வழங்கியுள்ளது.
- இவை ஆன்லைன் மூலம் விரைவு அடையாள ஒட்டு விற்பனை செய்தல் மற்றும் ஆஃப்லைன் மூலம் சுங்கச் சாவடிகளுக்கு அருகில் பொதுச் சேவை மையங்கள் அமைத்து அதன் மூலம் விற்பனை செய்தல் ஆகும்.

*விரைவு அடையாள பட்டை* (FASTag)

- இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையமானது தேசிய நெடுஞ்சாலைகளிலுள்ள சுங்கச் சாவடிகளில் மின்னணு சுங்கம் வசூலிக்கும் திட்டத்தை ஏற்படுத்திள்ளது. இது FASTag என்று பெயர்.

- FASTag என்பது கருவியாகும். இது ரேடியோ அதிர்வெண் அடையாளம் காணுதல் (RFID) தொழில் நுட்பத்தில் செயல்படுகிறது. இது முன்பணம் செலுத்தப்பட்ட கணக்கிலிருந்து நேரடியாகச் சுங்கம் செலுத்துவதற்கான ஒரு தொழில்நுட்பமாகும்.
- இது உங்கள் வாகனத்தின் கண்ணாடியில் பொருத்தப்படும் . இதன் மூலம் சுங்கச் சாவடிகளில் நிறுத்தவேண்டிய அவசியம் இல்லாமல் தடையின்றி பயணம் செய்ய முடியும்.




- விரைவு அடையாள பட்டை (FASTag)ன் காலக்கெடு 5 ஆண்டுகள் ஆகும், பின்பு நமது தேவைக்கு ஏற்ப FASTag யை / மீள் நிரப்பு செய்து கொள்ளலாம்.
- FASTag-ஆனது சுங்கச் சாவடிகளில் வாகனங்களின் இடைவிடாத இயக்கத்திற்கு உதவுகிறது. மற்றும் தேசிய அளவிலான ஒருங்கிணைந்த சுங்கக் கட்டணத்தைப் பணமில்லாமல் செலுத்துவதற்கு வசதியாக உள்ளது.

**உயர்நிலை கல்விக்காக காலாவதியாகாத ஒற்றை நிதியம்**

- மத்திய அமைச்சரவை இடைநிலை மற்றும் உயர்நிலை கல்விக்காக காலாவதியாகாத ஒற்றை நிதியை உருவாக்கியுள்ளது
- பிரதம மந்திரியின் தலைமையிலான அமைச்சரவை, இடைநிலை மற்றும் உயர்நிலை கல்விக்காக காலாவதியாகாத ஒற்றை நிதியை “மத்தியமிக் மற்றும் உச்தார் சிக்ஷா கோஷ்” (Madhyamik and Uchchtar Shiksha Kosh - MUSK) என்ற பொதுக் கணக்கை ஏற்படுத்தி அதில் இடைநிலை மற்றும் உயர் கல்விக்கான வரவு செலவுகள் கணக்கு வைக்கப்படும் என அறிவித்துள்ளது.

- நாடு முழுவதிலும் உள்ள இடைநிலை மற்றும் உயர்நிலை கல்வியை பெறும் மாணவர்களுக்கு கல்வித் துறையில் உள்ள திட்டங்களின் மூலம் MUSK-ன் நிதியானது பயன்படுத்தப்படும்
- 2007-ம் ஆண்டுகளுக்கான நிதிச்சட்டம் பிரிவு 136-இன் கீழ் இதற்கான மேல் வரி விதிக்கப்பட்டது.
- நிர்வாகம் மற்றும் பராமரிப்பு ஆகியவற்றின் செயல்பாடுகள் மனிதவள மேம்பாட்டு அமைச்சகத்தின் கீழ் செயல்படும்.
- இந்த MUSK ஆனது இருப்பு நிதியாக, இந்தியாவின் பொதுக் கணக்கில் வட்டி இல்லாத பிரிவில் வைக்கப்படும்.
- தற்போது, மனிதவள மேம்பாட்டு அமைச்சகமானது பெறப்படும் வரியை இடைநிலைக் கல்வியில் பின்வரும் திட்டங்களுக்காக பயன்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
    - ராஷ்ட்ரிய மத்யமிக் சிக்ஷா அபியான் திட்டம்.
    - தேசிய அளவில் தகுதி வாய்ந்தோர்க்கு உதவித்தொகைத் திட்டம்
    - இடைநிலை கல்வி பெறும் மக்களுக்கு ஊக்கத்தொகை வழங்கும் தேசியத் திட்டம்.
- உயர்கல்விக்கான மேல் வரியானது பின்வருவனவற்றிற்காக பயன்படுத்தப்படுகிறது.
    - வட்டியில் மானியம், நிரந்தர உதவித் தொகை மற்றும் கல்லூரி மற்றும் பல்கலைக்கழக மாணவர்களுக்கு உதவித்தொகைத் திட்டம்.
    - ராஷ்ட்ரிய உட்சதார் சிக்ஷா அபியான்
    - தேசிய ஆசிரியர் பயிற்சித் திட்டம்.

### மாற்றத்திற்கான சாம்பியன்கள்

- நிதி ஆயோக் அமைப்பு வெளிநாடு வாழ் இந்தியர்கள் மையத்தில் ஏற்பாடு செய்திருந்த "மாற்றத்திற்கான சாம்பியன்கள்" நிகழ்ச்சியில் இளம் தொழில் முனைவோருடன் பிரதமர் மோடி கலந்துரையாடினார்.
- பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்தும் முக்கியத் துறைகளில் அரசும் இளம் தொழில் முனைவோரும் கூட்டாகச் செயல்பட வேண்டும் என்பதே இதன் நோக்கமாகும்.
- மாற்றத்திற்கான சாம்பியன்கள் என்ற இரண்டு நாள் நிகழ்வில் 6 துறையைச் சேர்ந்த இளம் தொழில் முனைவோர் பங்குபெற்று தங்களது துறையின் மேம்பாடு பற்றி விளக்கினர்.
- இளம் தொழில் முனைவோரின் 6 குழுக்கள் பிரதமரின் முன் விளக்கிய அடிப்படைக் கருத்துகளாவன.
    - மென்மையான ஆற்றல்: வியக்கத்தக்க இந்தியா 2.0
    - கல்வி மற்றும் திறன் மேம்பாடு
    - சுகாதாரம் மற்றும் ஊட்டச்சத்து
    - நிலையான எதிர்காலத்துக்குச் சக்தியூட்டுதல்
    - டிஜிட்டல் இந்தியா
    - 2022ல் புதிய இந்தியா

### நீண்ட கால நீர்ப்பாசனத்திற்கான நிதி - மத்திய அமைச்சரவை ஒப்புதல்

- மத்திய அரசின் ஒப்புதலுடன் நபார்டு வங்கியானது 2018ம் நிதி ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையின் மூலம் கூடுதல் பத்திரங்களை வெளியிட்டு 9,20 கோடி ரூபாய் திரட்ட முடிவெடுத்துள்ளது. இந்நிதியானது பிரதான் மந்திரி கிரிஷி சின்சாய் யோஜனா திட்டத்தின் கீழ் செயல்படும்.

- பிரதம மந்திரியின் தலைமையில் நிகழ்ந்த அமைச்சரவைக் கூட்டத்தில் இந்த முடிவு எடுக்கப்பட்டது.
- விரைவுபடுத்தப்பட்ட நீர்ப்பாசன நன்மைகள் திட்டத்தின் கீழ் ஏராளமான பெரிய மற்றும் நடுத்தர நீர்ப்பாசனத் திட்டங்கள் இந்த நிதியைப் பெறும்.

## பிரதான் மந்திரி கிரிஷி சின்சாய் யோஜானா:

- நிலத்தில் பாசன முதலீடுகளைக் குவித்தல், உறுதி செய்யப்பட்ட பாசனத்தின் கீழ் பயிரிடக்கூடிய நிலப்பகுதியை விரிவுபடுத்துதல், தண்ணீர் வீணாவதைக் குறைப்பதற்கு விளைநில நீர் பயன்பாட்டுத் திறனை அதிகரித்தல், சரியான நீர்ப்பாசன முறையை பின்பற்றுவதை அதிகரித்தல், மற்றும் நீர் சேமிப்புத் தொழில் நுட்பங்கள் (ஒரு துளிக்கு நிறைய பயிர்), நீர்த்தேக்கங்கள் நிரப்புவதை அதிகரித்தல், மற்றும் நகர்ப்புறங்களில் பயன்படுத்திய நீரை மறுசுழற்சிக்குப் பின்பு மீண்டும் விவசாயத்திற்குப் பயன்படுத்துதல் மற்றும் துல்லிய நீர்ப்பாசன முறையின் மூலம் அதிக முதலீட்டை ஈர்த்தல்.

## தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி நிறுவன உறுப்பினர்களுக்கு வீட்டுவசதித் திட்டம்

- நாடு முழுவதும் உள்ள தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி நிறுவன உறுப்பினர்களுக்கான வீட்டு வசதித் திட்டத்தை மத்தியத் தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை இணை அமைச்சர் பண்டாரு தத்தாத்ரேயா தூத்துக்குடியில் தொடங்கி வைத்தார்.
- இபிஎப் சந்தாதாரர்கள் அனைவருக்கும் வீட்டு வசதி என்ற திட்டத்தை மத்திய அரசு கடந்த ஏப்ரல் 12 ஆம் தேதி அறிமுகப்படுத்தியது. இந்தத் திட்டத்தின் மூலம் வீடு இல்லாத இபிஎப் சந்தாதாரர்கள் 10 அல்லது அதற்கு மேற்பட்ட உறுப்பினர்களைக் கொண்ட பதிவு செய்யப்பட்ட கூட்டுறவுச் சங்கத்தில் உறுப்பினராக இருந்தால் வருங்கால வைப்பு நிதியில் 90 சதவீதம் மூலமும், வங்கிக் கடன் பெற்றும் வீடு கட்டிக் கொள்ளலாம்.
- "2022 ஆம் ஆண்டிற்குள் அனைவருக்கும் வீடு" எனப் பிரதமர் அறிவித்த திட்டத்தின் கீழ் இந்தத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. அடுத்த 2 ஆண்டுகளில் 10 லட்சம் வீடுகள் இந்தத் திட்டத்தின் கீழ் கட்டி முடிக்கப்படும்.
- தொழிலாளர் துறையில் சமுதாயப் பாதுகாப்பு, வேலை உறுதி, ஊதிய உறுதி எனப் பெரும் சமூகப் பாதுகாப்புக் காரணிகள் உறுதிப்படுத்தப்பட்டுள்ளன.
- நாட்டில் உள்ள அனைத்துத் தொழிலாளர்களுக்கும் குறைந்தபட்சம் ரூ. 12 ஆயிரம் ஊதியம் உறுதி செய்யப்பட்டுள்ளது. பெண்களுக்குப் பேறுகால விடுப்பாக 12 வாரங்கள் வழங்கப்பட்டு வந்தது. தற்போது 26 வாரங்கள் என்றும் அந்த காலகட்டத்தில் ஊதியம் வழங்க வேண்டும் என்றும் உறுதியளிக்கப்பட்டுள்ளது.

## நவிகா சாகர் பரிக்கிரமா

- இந்தியக் கடற்படைக்குச் சொந்தமான ஐ.என்.எஸ்.வி தாரிணி பாய்மரக் கப்பலில் பயணித்து இந்தியக் கடற்படையின் ஆறு பெண் அதிகாரிகள் உலகைச் சுற்றிவரவுள்ளனர். முற்றிலும் பெண்களை உள்ளடக்கிய குழுவொன்று உலகத்தைக் கப்பலில் சுற்றி வருவது இந்தியாவில் இதுவே முதன்முறை ஆகும்.
- ஐ.என்.எஸ்.வி தரிணி கப்பல் , ஐ.என்.எஸ்.வி ஹதேய் (INSV Mhadei) கப்பலை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்டது ஆகும். இந்தக் கடல்வழிப் பயணமானது இந்தியக் கடற்படைச் செயல்பாடுகளையும் , இந்தியாவின் 'நரி சக்தி' திட்டத்தினையும் ஊக்குவிப்பதில் முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுகிறது.




*இந்தப் பயணத்தின் முக்கிய நோக்கங்கள்,*

*நரி சக்தி*

- பெண்கள் தங்களின் திறனை வளர்த்துக்கொள்ளவும் , முன்னேற்றம் காணவும் அரசாங்கம் தன் திட்டங்களின் மூலம் ஒத்துழைக்க வேண்டும். இந்தியாவில் பெண்களுக்கு எதிரான சமூக மனப்பான்மை மற்றும் மனநிலையை மாற்றும் நோக்கத்திலும் , சவாலான சூழலில் பெண்கள் பங்கேற்பதை வெளிப்படுத்தும் விதத்திலும் இந்தக் கடல்வழிப் பயணம் அமையும்.

*சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றம்*

- இந்த பாய்மரக் கப்பற்பயணம் சுற்றுச்சூழல் பாதிப்புகளை ஏற்படுத்தாத புதுப்பிக்கத்தக்க ஆற்றல் ஆதாரங்களைப் பயன்படுத்துவதை ஊக்கப் படுத்துகிறது.

*இந்தியாவில் உருவாக்குவோம்*

- முழுவதும் இந்தியாவிலேயே கட்டப்பட்ட கப்பலில் உலகைச் சுற்றி வருவது, 'இந்தியாவில் உருவாக்குவோம்' (Make in India') திட்டத்தினைப் பறைசாற்றும் விதமாக அமையும்.

*வானிலை / பெருங்கடல் / அலை தரவு கண்காணிப்பு*

- இந்தக் குழுவானது தினசரி அடிப்படையில் வானிலை மற்றும் பெருங்கடல் தொடர்பான பல தரவுகளை அளிக்கும் . இத்தரவுகள் பல்வேறு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனங்களுக்குப் பயனுள்ளதாக இருக்கும்.
- இக்குழு கடல் மாசுபடுவது குறித்த தரவுகளையும் அவ்வப்போது வழங்கும்.
- சாகசப் பயணம் மற்றும் புதுப்பிக்கத்தக்க ஆற்றல் பயன்பாட்டினை ஊக்குவிக்கும் விதமாக அமையும் இந்தப் பயணத்தின்போது, இந்திய வம்சாவளியைச் சேர்ந்த மக்களைப் பல்வேறு துறைமுகங்களில் சந்தித்து கடற்படை பெண் அதிகாரிகள் உரையாடத் திட்டமிட்டுள்ளனர்.
- கப்பலில் உலகம் முழுவதும் சுற்றிவரும் முதல் இந்தியக் கப்பற்படைப் பயணமானது ஆகஸ்ட் 19 , 2009 அன்று துவங்கி மே 19 , 2010 அன்று முடிவு பெற்றது. இந்தப் பயணத்திற்குத் தலைமை தாங்கியவர் படைத்தலைவர் திலிப் டேன்டே ஆவார். இவர் தலைமையிலான குழு ஐ.என்.எஸ்.வி ஹதேய் (INSV Mhadei) கப்பலில் உலகினைச் சுற்றி வந்தனர்.
- தனிமையாக , இடைநில்லாமல் உலகினைச் சுற்றி வந்த முதல் இந்தியர் கமாண்டர் அபிலாஷ் டோமி ஆவர் . இவர் நவம்பர் 01 , 2012 இல் துவங்கி மார்ச் 31, 2013 அன்று உலகினைச் சுற்றி வந்து சாதனைப் படைத்தார்.

## ஆறு அபாச்சே ஹெலிகாப்டர்களை வாங்குகிறது இந்திய ராணுவம்

- 4,168 கோடி ரூபாய் செலவில் இந்திய இராணுவத்திற்கு ஆறு அபாச்சே ஹெலிகாப்டர்களை வாங்கும் திட்டத்திற்குப் பாதுகாப்பு கையகப்படுத்தல் குழு அனுமதி அளித்துள்ளது. இந்த ஆறு அபாச்சே AH-64E ரக ஹெலிகாப்டர்களும் துணை உபகரணங்கள், ஆயுதங்கள் மற்றும் வெடிபொருட்களோடு சேர்த்து வாங்கப்படும்.
- இந்தியாவுக்கு வழங்குவதற்காக ரஷ்யாவில் இரண்டு அட்மிரல் க்ரிகோரோவிச் ரக கப்பல்கள் தயாரிக்கப்படுகின்றன. இவற்றில் பொருத்துவதற்காக உக்ரைனில் இருந்து இரண்டு எரிவாயு விசையாழிகளை வாங்கும் திட்டத்திற்கும் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.
- பாதுகாப்பு கையகப்படுத்தல் குழுவானது மத்தியப் பாதுகாப்பு அமைச்சகத்தின் கீழ் செயல்படுகிறது.
- தற்போது ரஷியாவின் Mi-25 மற்றும் Mi-35 ரக ஹெலிகாப்டர்கள் இந்தியக் கடற்படை இந்திய விமானப்படை மற்றும் இந்திய ராணுவத்தால் பயன்படுத்தப்படுகின்றன.

## உலகின் மிகப்பெரிய தெருவிளக்குகள் மேலாண்மை நிறுவனம்

- தேசியத் தெரு விளக்குகள் திட்டம் மூலமாகச் சுமார் 50 லட்சம் கிலோ மீட்டர் நீளத்திற்கு இந்திய சாலைகளில் 30 இலட்சத்திற்கும் மேற்பட்ட எல்.ஈ.டி (LED) தெரு விளக்குகள் பொருத்தப்பட்டுள்ளது .
- இதன் மூலமாக , இந்தத் திட்டங்களைச் செயல்படுத்திய எரிசக்தி திறன் சேவைகள் நிறுவனம் (Energy Efficiency Services Limited - EESL) உலகின் மிகப்பெரிய தெரு விளக்கு மேலாண்மை நிறுவனம் என்ற பெருமையினைப் பெற்றுள்ளது.
- எல்.ஈ.டி விளக்குகள் குறைந்த மின்சாரச் செலவில் இயங்குபவை ஆகும். இத்தகைய எல்.ஈ.டி தெருவிளக்குகள் நிறுவப்பட்டதன் மூலம் 39 கோடி கிலோவாட் மணிநேரம் (390,000,000 kW·h) அளவிலான மின் ஆற்றல் சேமிக்கப்பட்டுள்ளது.
- இந்தத் திட்டங்களின் மூலமாக இந்தியாவில் சுமார் 3.29 இலட்சம் டன் கரியமில வளிம வெளிப்பாடு குறைக்கப்பட்டுள்ளது என்று எரிசக்தி அமைச்சகத்தின் அதிகாரப்பூர்வ வெளியீட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## இந்தியாவில் புதிய ஐம்பது ரூபாய் நோட்டுகள்

- மகாத்மா காந்தியின் உருவம் அச்சிடப்பட்ட புதிய 50 ரூபாய் நோட்டுகளை இந்திய ரிசர்வ் வங்கி வெளியிடவுள்ளது.
- இந்திய ரிசர்வ் வங்கி அளித்த தகவலின் அடிப்படையில் , புதிய 50 ரூபாய் தாள்களின் அடிப்படை நிறம் ஒளிரும் நீல நிறத்திலும் , அதன் பரிமாணம் / அளவு 66 மில்லிமீட்டர் அகலமும் , 135 மில்லிமீட்டர் நீளமும் இருக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.
- தாளின் பின்புறத்தில் நாட்டின் தலைசிறந்த பாரம்பரியத்தைச் சித்தரிக்கும் வகையில் ஹம்பி நகரில் இருக்கும் தேரின் சித்திரம் அச்சிடப்பட்டு இருக்கும் . மேலும் தாளின் பின்புறத்தில் இடம்பெறவிருக்கும் அம்சங்கள்:
  - ஸ்வச் பாரத் அமைப்பின் சின்னம்
  - ரூபாய் தாள் அச்சிடப்பட்ட ஆண்டு
  - தேவனாகிரி மொழியில் 50 என்ற எண் அச்சிடப்பட்டுள்ளது
  - ரூபாய் தாளில் பல்வேறு மொழிகள் இடம்பெறும் பகுதி
- ரூபாய் தாளின் முன்புறத்தில் ரிசர்வ் வங்கியின் உத்தரவாதம் மற்றும் வாக்குறுதியுடன் சேர்த்து, ரிசர்வ் வங்கி ஆளுநர் உர்ஜித் படேலின் கையெழுத்தும் அச்சிடப்பட்டு இருக்கும். இந்திய ரிசர்வ் வங்கியின் சின்னம் ருபாய் தாளில் இடம்பெறும்.


- ரூபாய் தாளின் முன்புறத்தில் 'RBI', 'भारत', 'INDIA' மற்றும் '50' ஆகிய வார்த்தைகள் சிறிய எழுத்துக்களாகவும், வலது புறத்தில் அசோகா தூண் சின்னமும் அச்சிடப்படும்.
- முந்தைய தொடரில் அச்சிட்டு வழங்கப்பட்ட 50 ரூபாய் பிரிவில் உள்ள அனைத்து ரூபாய் நோட்டுகளும் எப்போதும்போல் செல்லுபடி ஆகும் என்று ரிசர்வ் வங்கி தரப்பில் கூறப்பட்டுள்ளது.

## உயர்கல்வி நிதி முகமை

- உயர்கல்வி நிதி முகமை (Higher Education Financing Agency) என்ற வங்கி சாரா நிதி நிறுவனத்தை (Non-Banking Financial Company - NBFC) ஏற்படுத்துவதற்காக கனரா வங்கியுடன் மத்திய அரசு ஒப்பந்தம் செய்துள்ளது.
- மத்திய மனித வளமேம்பாட்டு அமைச்சகத்திற்கும் வங்கிக்கும் இடையேயான கூட்டு நிறுவனமாக (Joint Venture ) இது செயல்படும்.
- முன்னணி கல்வி நிறுவனங்களில் உயர்தர உள்கட்டமைப்பை உருவாக்குவதற்கு இந்த முகமையானது பேருதவி புரிகிறது.
- இந்த முகமையானது சந்தையில் இருந்தும் பெருநிறுவனங்கள் / பொதுத்துறை நிறுவனங்களின் சமூகப் பொறுப்புடைமை நிதி (CSR - Corporate Social Responsibility) மூலமாகவும் நிதி திரட்டி அரசின் உயர்கல்வி நிறுவனங்களில் ஆராய்ச்சி மற்றும் புத்தாக்கங்களை முன்னெடுக்கவும் அளிக்கிறது.
- இந்த முகமை, ஆராய்ச்சிக் கூட உள் கட்டமைப்புத் திட்டங்களுக்கு 10 ஆண்டு கடனாக நிதியளிக்கிறது.
- இந்தியத் தொழில்நுட்பக் கழகங்கள் (IITs) , இந்திய மேலாண்மைக் கழகங்கள் (IIMs) , தேசியத் தொழில் நுட்ப நிறுவனம் போன்ற நிறுவனங்களில் உலகத் தரம் வாய்ந்த உட்கட்டமைப்பினை மேற்கொள்வதற்காக 20000 கோடி திரட்டும் வகையில் பங்கீட்டுத் தொகையினை உயர்த்தும் வகையில் இந்த முகமை செயல்படுகிறது.

## குற்றம் மற்றும் குற்றவியல் கண்காணிப்பு வலை அமைப்பு

- குற்றம் மற்றும் குற்றவியல் கண்காணிப்பு வலை அமைப்புத் திட்டத்தின் கீழ் டிஜிட்டல் காவல்துறை இனைவாயிலை (Digital Police Portal) மத்திய உள்துறை அமைச்சகம் அறிமுகப்படுத்தியுள்ளது.
- இந்தத் திட்டத்தில் காவல்துறைப் பணிகள், நீதிமன்றங்கள், சிறைச்சாலைகள், குற்றவியல் வழக்குகள், தடயவியல் ஆய்வகங்கள், கைரேகைப் பதிவுகள் மற்றும் சிறுவர் சீர்திருத்த இல்லங்கள் போன்ற குற்றவியல் நீதி அமைப்பின் பல்வேறு தரவுகள், குற்றம் மற்றும் குற்றவியல் கண்காணிப்பு வலை அமைப்பில் ஒருங்கிணைக்கப்படும்.
- குற்றவியல் வழக்குகளை விசாரிக்கும் அதிகாரிகள் இந்தத் தரவுத்தளத்தை அணுகி, நாட்டின் எந்தப் பகுதியிலும் இருக்கும் எந்தவொரு குற்றவாளியைக் குறித்தும் தகவல் தெரிந்துக்கொள்ள முடியும்.





*குற்றம் மற்றும் குற்றவியல் கண்காணிப்பு வலை அமைப்பு*

- குற்றம் மற்றும் குற்றவியல் கண்காணிப்பு வலை அமைப்பு என்பது நாட்டின் மின் ஆளுமைத் திட்டத்தின் கீழ் இந்திய அரசாங்கம் செயல்படுத்தும் ஒரு குறிக்கோள் திட்டம் ஆகும்.
- நாட்டில் காவல்துறை மற்றும் சட்ட ஒழுங்கு நடவடிக்கைகளைத் திறம்பட மேற்கொள்ளவும் , தொலைத்தொடர்பு மற்றும் தகவல் தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி குற்றம் மற்றும் புலனாய்வு பணிகளை எளிதாக ஒருங்கிணைக்கவும் இந்த வலையமைப்புச் செயல்படுகிறது.

**கண்டசாலாவில் புத்தர் சிலை**

- ஆந்திரப் பிரதேச மாநிலத்தின் கிருஷ்ணா மாவட்டத்தில் உள்ள கண்டசாலா கிராமத்தைப் பிரத்யேகப் புத்த சமய சுற்றுலாத் தளமாக உருவாக்குவதற்கான பரிந்துரைக்கு அரசாங்கம் ஒப்புதல் அளித்துள்ளது.



- இந்த சுற்றுலாத் தளம் புத்தரின் மகாபரிநிர்வாணத்தைக் கருப்பொருளாகக் கொண்டு உருவாக்கப்படவுள்ளது. புத்தர் மகாபரிநிர்வாணத் தோற்றப்பாங்கில் இருப்பது போல் எழுபது அடி நீள சிலை அமைக்கப்படவுள்ளது.
- புத்த சமயத்தில் நிர்வாணம் என்பது ஆசையையும், அகந்தையையும் வெற்றி கொண்டு, என்றும் நிலைத்திருக்கக்கூடிய அமைதியையும் மகிழ்ச்சியையும் அடைவது ஆகும்.
- கடற்கரையோரம் அமைந்திருக்கும் கண்டசாலா கிராமமானது முற்கால வரலாற்றில் காடகசீலம் என்று அழைக்கப்பட்டது.

### தொலைத்தொடர்பு வழிச் சட்ட உதவி

- திட்டத்தின் பெயர் : டெலி-லா / Tele-Law (தொலைத்தொடர்பு வழி ச்சட்ட உதவி)
- நோக்கம்: கிராமப்புறங்களில் வாழும் குடிமக்களுக்கு, குறிப்பாக ஒதுக்கப்பட்ட சமூகத்தினருக்குச் சட்ட உதவிகள் அளிப்பது. நாடு முழுவதும் உள்ள கிராமப் பஞ்சாயத்துகளில் பொதுச் சேவை மையங்கள் வாயிலாக இந்தச் சேவை வழங்கப்படும்.
- செயல்படுத்துவோர்:
    - மத்திய நிதி அமைச்சகம்
    - மத்தியத் தொலைத்தொடர்பு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகம்.

### ஸ்வஸ்த் பச்சே, ஸ்வஸ்த் பாரத் இயக்கம்

- ஸ்வஸ்த் பச்சே, ஸ்வஸ்த் பாரத் இயக்கம் (Swasth Bachche, Swasth Bharat)
- இந்த இயக்கம் மத்திய மனிதவள மேம்பாட்டு அமைச்சகத்தால் தொடங்கப் பெற்று இருக்கிறது.
- இதனை கேரளாவின் கொச்சியில் மத்திய மனிதவள மேம்பாட்டுத்துறை அமைச்சர் பிரகாஷ் ஜாவடேகர் தொடங்கி வைத்தார்.
- கேந்திரிய வித்யாலயா மாணவர்களின் உடல்நலம் குறித்த அட்டை தயாரிப்பதற்கான முயற்சியினை கேந்திரிய வித்யாலயா சங்கதன் மேற்கொள்கிறது.
- இந்த இயக்கத்தின் மூலமாக, மாற்றுத் திறனாளிகள் உள்ளிட்ட அனைத்து வயது குழந்தைகளுக்கும் ஒருங்கிணைந்த அட்டை வழங்கப்பட இருக்கிறது.
- மாணவர்களிடையே ஒலிம்பிக் மற்றும் பாராலிம்பிக் விளையாட்டுப் போட்டிகளின் மதிப்புகளை வேரூன்றச் செய்வதற்கான திட்டமிடலினை இந்த இயக்கம் செய்யவிருக்கிறது.

### ஓபிசி பிரிவினருக்கான கிரீமிலேயர் உச்சவரம்பு ரூ.8 லட்சமாக உயர்வு

- மத்திய அரசுப் பணிகளில் இதர பிற்படுத்தப்பட்டோர் இடஒதுக்கீடு பெறுவதற்கான வருமான உச்சவரம்பு (கிரீமிலேயர்) ரூ.8 லட்சமாக உயர்த்தப்பட்டுள்ளது.
- இதர பிற்படுத்தப்பட்ட பிரிவினரில் (ஓபிசி) கல்வி, பொருளாதாரத்தில் முன்னேறியவர்களுக்கு இடஒதுக்கீடு வழங்குவதைத் தவிர்க்கும் வகையில் கிரீமிலேயர் என்ற அளவுகோல் உள்ளது.
- இப்பிரிவின் கீழ் வகைப்படுத்தப்படுபவர்களுக்கு, மத்திய அரசுப் பணிகளில் இதர பிற்படுத்தப்பட்ட பிரிவினருக்கான இடஒதுக்கீடு வழங்கப்படாது.
- இதுவரை கிரீமிலேயர் வருமான உச்சவரம்பு, ஆண்டுக்கு ரூ.6 லட்சமாக இருந்தது. அதாவது, ஆண்டு வருமானம் ரூ.6 லட்சத்துக்கு மேல் உள்ளவர்கள் இடஒதுக்கீடு பெற முடியாது.
- இந்நிலையில், இந்த உச்சவரம்பை ரூ.8 லட்சமாக மத்திய அரசு உயர்த்தியுள்ளது.

## நேபாள எல்லையில் ரூ.159 கோடியில் பாலம்

- இந்திய-நேபாள எல்லையில் உள்ள மேச்சி ஆற்றின் குறுக்கே புதியபாலம் கட்டுவதற்கான பணிகளைத் தொடங்கவும், அதற்கான செலவினைப் பகிர்ந்துகொள்ளவும், இந்தியா- நேபாளம் இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்வதற்கு பிரதமர் தலைமையிலான மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது. இந்தப் பாலத்தை ரூ.158.65கோடி செலவில் கட்டிமுடிப்பதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.
- இதற்கான நிதியை, ஆசிய வளர்ச்சி வங்கி மூலமாக, மத்திய அரசு வழங்கும்.
- மத்திய சாலை மற்றும் நெடுஞ்சாலைப் போக்குவரத்து அமைச்சகத்தின் கீழ் இயங்கும் தேசிய நெடுஞ்சாலை மற்றும் உள்கட்டமைப்பு மேம்பாட்டுக்கழகம் (என்எச்ஐடிசிஎல்), இந்தத் திட்டத்தை நிறைவேற்றும்.
- நேபாளத்தின் மேச்சி நகரில் உள்ள காகர் விட்டா- மேற்கு வங்கத்தில் உள்ள பனிதாங்கி புறவழிச்சாலை ஆகியவற்றை இணைக்கும் வகையில், 1,500 மீட்டர் நீளத்திலும், 6 வழிப்பாதைகளுடன் இந்தப் புதிய பாலம் இருக்கும்.
- புதிய பாலம் கட்டுவதால், இருநாடுகளுக்கு இடையேயான பிராந்தியத் தொடர்புகள் அதிகரிக்கும். மேலும், இருநாடுகளுக்கு இடையே தொழில்துறை வளர்ச்சி, சமூக, கலாசார பரிமாற்றங்கள் மேலும் வலுவடைவதால், இருநாட்டு நல்லுறவு மேம்படும்.

## பாரத் வேகன் நிறுவனத்தை மூட அமைச்சரவை ஒப்புதல்

- நஷ்டத்தில் இயங்கும் மத்தியப் பொதுத்துறை நிறுவனமான பாரத் வேகனை (Bharat Wagon and Engineering Company Limited - BWEL) மூடுவதற்குப் பொருளாதார விவகாரங்களுக்கான மத்திய அமைச்சரவைக் குழு (Cabinet Committee on Economic Affairs - CCEA) ஒப்புதல் வழங்கி இருக்கிறது.
- இந்தப் பொதுத்துறை நிறுவனம் ரயில்வே அமைச்சகத்தின் கீழ் செயல்பட்டு வருகிறது.

## மத்தியக் கொள்கைக் குழுவின் "வழிகாட்டி இந்தியா" (Mentor India)

- "வழிகாட்டி இந்தியா" ('Mentor India') எனும் திட்டத்தை மத்திய கொள்கைக் குழு துவங்கியுள்ளது.
- இத்திட்டத்தின் வாயிலாக தேசத்தின் பல்வேறு தலைமைப் பொறுப்பில் இருப்பவர்கள் மாணவர்களுக்கு ஆலோசனையும் வழிகாட்டுதலும் வழங்குவார்கள் .
- நாடு முழுவதும் அடல் புத்தாக்க திட்டத்தின் (Atal Innovation Mission) கீழ் துவங்கப்பட்ட 900 அடல் மேம்படுத்துதல் ஆய்வகங்கள் இதற்காகப் பயன்படுத்தப்படும்.
- இத்திட்டத்தின் மூலம் தலைமைப் பொறுப்பில் இருப்பவர்கள் , மாணவர்களின் சிந்தைகளை வளர்க்கவும் அவர்களுக்கு வழிகாட்டவும் செய்வார்கள்.
- மாணவர்கள் சிந்தனை மற்றும் செயல்களுக்கு பரிந்துரை செய்வதோடு அல்லாமல், அதனை நடைமுறைப்படுத்த உடனிருந்து உதவி புரிவார்கள் .

*அடல் மேம்படுத்துதல் ஆய்வகங்கள்* (Atal Tinkering Labs)

- அடல் மேம்படுத்துதல் ஆய்வகங்கள் என்பது ஆறாம் வகுப்பு முதல் பன்னிரண்டாம் வகுப்பு வரை உள்ள பள்ளி மாணவர்கள் தங்கள் புத்தாக்க திறன்களை வளர்த்துக் கொள்ளவும், புதிய கருத்துகளை மேம்படுத்திக்கொள்ளவும் உருவாக்கப்பட்ட ஆய்வகங்கள் ஆகும்.
- முப்பரிமான அச்சுப்பொறிகள்(3D printers) , ரோபாட்டிக்ஸ் மற்றும் மின்னணு மேம்பாட்டுக் கருவிகள் போன்ற அதிநவீனவசதிகளுடன் இந்த ஆய்வகம் உருவாக்கப்பட்டுள்ளது.

## தனிநபர் ரகசியம் அடிப்படை உரிமையே: ஆதார் வழக்கில் உச்சநீதிமன்றம் தீர்ப்பு

- இந்திய அரசியல் சாசனத்தின்படி தனிநபர் ரகசியம் அடிப்படை உரிமையே என ஆதார் வழக்கில் உச்சநீதிமன்றம் தீர்ப்பு வழங்கியுள்ளது. ஆதாரைக் கட்டாயமாக்கும் திட்டம் இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் வழங்கப்பட்டுள்ள அடிப்படை உரிமையான தனிநபர் சுதந்திரத்தை மீறுகிறதா? என்பது குறித்த வழக்கில் 9 நீதிபதிகள் அடங்கிய அரசியல் சாசன அமர்வு இத்தீர்ப்பை வழங்கியுள்ளது.
- முன்னதாக, சமையல் எரிவாயு, மதிய உணவு, முதியோர் ஓய்வூதியம், வங்கிச்சேவை மற்றும் பல்வேறு நலத்திட்டங்களுக்கு ஆதார்எண் கட்டாயம் என்று அறிவிக்கப்பட்டுள்ளதை எதிர்த்து உச்சநீதிமன்றத்தில் பல்வேறு மனுக்கள் தொடரப்பட்டன.
- இத்திட்டம் இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் குடிமகனுக்கு வழங்கப்பட்டுள்ள அடிப்படை உரிமையான தனிநபர் சுதந்திரத்தை மீறுகிறது என்ற குற்றச்சாட்டு எழுந்தது. இதற்குமுன் தனிநபர் சுதந்திரம் குறித்து எம்.பி.சர்மா மற்றும் கரக்சிங் வழக்குகளில் 8 நீதிபதிகள் வரை அடங்கிய நீதிமன்றம் தீர்ப்பளித்திருப்பதால், இதுகுறித்து கூடுதல் நீதிபதிகள் அடங்கிய அமர்வு விசாரித்து முடிவெடுக்க வேண்டும் என்று வாதிடப்பட்டது. இதுகுறித்து முடிவெடுப்பதற்காகத் தலைமை நீதிபதி ஜே.எஸ்.கேஹர், ஜெ.சலமேஸ்வர், எஸ்.ஏ.பாப்தே, டி.ஒய்.சந்திரசூட், அப்துல்நசீர், ஆர்.கே.அகர்வால், ஆர்.எஃப்.நாரிமன், ஏ.எம்.சாப்ரே, எஸ்.கே.கவுல் ஆகியோர் அடங்கிய அமர்வு அமைக்கப்பட்டது.
- மிகவும் எதிர்பார்க்கப்பட்ட வழக்கில் 9 நீதிபதிகள் கொண்ட அமர்வு (ஆகஸ்ட் 24ம் தேதி) தீர்ப்பு வழங்கியது. 9 நீதிபதிகளுமே தனிநபர் ரகசியம் என்பது அரசியல் சாசனச் சட்டப்பிரிவு 21 ன்படி அடிப்படை உரிமையே என ஒருமித்த கருத்து தெரிவித்துள்ளனர்.
- ஆதாரைக் கட்டாயமாக்கி மத்திய அரசு பல்வேறு திட்டங்களையும் அறிவித்து செயல்படுத்தி வரும் நிலையில் உச்சநீதிமன்றம் இந்தத் தீர்ப்பை வழங்கியுள்ளது.

## உலகின் மிகப்பெரிய கடல் உணவு ஏற்றுமதியாளர்- இந்தியா

- குளோப் பிஷ் (Globe Fish) என்பது ஐக்கிய நாடுகளின் உணவு மற்றும் வேளாண்மை அமைப்பின் (Food and Agriculture Organization of the United Nations - FAO) ஒரு அங்கம் ஆகும். இது சர்வதேச மீன் வர்த்தகம் மற்றும் சந்தைகள் மீதான தகவல் மற்றும் பகுப்பாய்வினை மேற்கொள்கிறது.
- குளோப் பிஷ் நிறுவனத்தின் அறிக்கையில் இறால், சூரை மீன் , சால்மன் மீன் போன்ற 14 முக்கியமான கடல் உணவுகளைப் பற்றிய விரிவான புள்ளிவிவரங்கள் இடம்பெறுகின்றது.
- இந்நிறுவனத்தின் சமீபத்திய அறிக்கையின் படி , 2016 ஆம் ஆண்டின் மிகப்பெரும் கடல் உணவு ஏற்றுமதியாளர் இந்தியா ஆகும்.
- இறால் ஏற்றுமதியில் முதல் ஐந்து இடம் வகிக்கும் நாடுகள் முறையே இந்தியா, வியட்நாம், ஈக்வடார் , இந்தோனேசியா மற்றும் தாய்லாந்து ஆகியவை ஆகும்.
- அமெரிக்கா , வியட்நாம், ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் மற்றும் ஜப்பான் போன்ற நாடுகளுக்கு இந்தியா அதிகப்படியாக கடல் உணவு ஏற்றுமதி செய்கின்றது.
- உலகில் அதிகமாக மீன் உற்பத்தி செய்யும் நாடுகள் பட்டியலில் சீனா முதலிடம் வகிக்கிறது . உலகில் உற்பத்தி செய்யப்படும் மீன்களில் சுமார் 6 சதவீதம் மீன்கள் சீனாவில் உற்பத்தி செய்யப்படுகின்றன. மீன் உற்பத்தியாளர்கள் பட்டியலில் இந்தியா இரண்டாம் இடத்தை வகிக்கின்றது.

## ஐக்கிய நாடுகளின் உணவு மற்றும் வேளாண்மை அமைப்பு

- இத்தாலி ரோமைத் தலைமையகமாகக் கொண்டியங்கும் ஐக்கிய நாடுகளின் உணவு மற்றும் வேளாண்மை அமைப்பானது மக்களின் ஊட்ட நலனை அதிகரிப்பதற்கும் வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவதற்கும், வேளாண்மை மற்றும் உணவுப் பொருட் தயாரிப்பு, சந்தைப்படுத்தல்,

விநியோகம் போன்றவற்றுடன் கிராமங்களை விருத்தி செய்து பசி பட்டினியை நீக்கப் பாடுபடுகின்றது.

- 1945 இல் இவ்வமைப்பானது கனடாவில் கியூபெக் நகரில் ஆரம்பிக்கப்பட்டது.




- மொத்தம் உறுப்பினர்கள்: 197
    - 194 உறுப்பினர் நாடுகள்
    - 1 உறுப்பினர் அமைப்பு (ஐரோப்பிய ஒன்றியம்)
    - 2 இணை உறுப்பினர்கள் (ஃபாரோ தீவுகள் மற்றும் டோக்கெலாவ்)
- உணவுப் பாதுகாப்புத் திட்டங்கள், கோடெக்ஸ் அளிமென்டரி (Codex Alimentarius) , சர்வதேசத் தாவரப் பாதுகாப்பு ஒப்பந்தம் (International Plant Protection Convention-IPPC) போன்ற முக்கியமான திட்டங்களை ஐக்கிய நாடுகளின் உணவு மற்றும் வேளாண்மை அமைப்பு செயல்படுத்துகின்றது.

## விஞ்ஞான அமைச்சர்கள் கூட்டுக்குழு

- விஞ்ஞான அமைச்சர்கள் கூட்டுக்குழு (Science Ministers' Conclave) என்பது சர்வதேச இந்திய அறிவியல் திருவிழாவின் (India International Science Festival - IISF) ஒரு அங்கம் ஆகும்.
- விஞ்ஞான அமைச்சர்கள் கூட்டுக்குழு என்பது விஞ்ஞானத் தொழில்நுட்பங்களைக் கருப்பொருளாகக் கொண்ட கண்காட்சி ஆகும்.
- இந்தக் கூட்டுக் குழுவினை ஒருங்கிணைப்போர் - அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்துறை அமைச்சகம் மற்றும் விஞ்ஞான பாரதி (Vijnana Bharati) எனும் இலாப நோக்கமற்ற நிறுவனம் ஆகும்.
- ஆண்டுதோறும் நடைபெறும் விஞ்ஞான அமைச்சர்கள் கூட்டுக்குழுவில், இந்திய விஞ்ஞானத்தின் சமகால மற்றும் வரலாற்றுச் சாதனைகள் பறைசாற்றப்படுகின்றன. கடந்த மூன்று ஆண்டுகளாக நடைபெறும் இந்த வருடாந்திர நிகழ்வில் மாணவர்கள் மற்றும் விஞ்ஞானிகள் பங்குபெறுகின்றனர்.

### *3 ஆவது விஞ்ஞான அமைச்சர்கள் கூட்டுக்குழு*

- நடைபெறும் நகரம்: சென்னை.

- நடைபெறும் இடங்கள் :
  - இந்திய தொழில்நுட்பக் கழகம் , சென்னை
  - அண்ணா பல்கலைக்கழகம் , சென்னை
  - தேசிய கடல்சார் தொழில்நுட்ப நிறுவனம் (National Institute of Ocean Technology - NIOT)
- இந்தக் கூடத்தில் பங்கு பெற சீனா உள்பட அண்டை நாடுகளின் அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்துறை அமைச்சர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.
- விஞ்ஞான அமைச்சர்கள் கூட்டுக்குழுவின் முதல் கூட்டம் டில்லியில் உள்ள இந்தியத் தொழில்நுட்பக் கழகத்தில் 2015 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் நடைபெற்றது. இதில் அதிக மாணவர்கள் ஒன்றாகத் திரண்டு " உலகில் அதிக மக்கள் கலந்து கொண்ட அறிவியல் பாடம்" என்ற கின்னஸ் உலக சாதனையை நிகழ்த்தினர்.
- விஞ்ஞான அமைச்சர்கள் கூட்டுக்குழுவின் இரண்டாம் கூட்டம் டில்லியில் உள்ள அறிவியல் மற்றும் தொழிலக ஆய்வு மன்றத்தின் (Council of Scientific and Industrial Research - CSIR) தேசிய இயற்பியல் ஆய்வகத்தில் 2016 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் நடைபெற்றது.

## திறம்பட்ட மக்களின் தேசியப் பதிவேடு

- பயிற்சி மற்றும் மேம்பாட்டுக்கான இந்திய சங்கம் (Indian Society for Training and Development - ISTD), நாட்டில் தொழில் திறமையற்ற மக்களுக்கு உதவுவதற்காகத் திறம்பட்ட மக்களின் தேசியப் பதிவேட்டினை உருவாக்க திட்டமிட்டுள்ளது.

## இந்தியாவின் முதலாவது 'விதேஷ் பவன்' மும்பையில் தொடங்கப்பட்டுள்ளது

- மகாராஷ்டிராவின் மும்பையில் உள்ள பாந்த்ரா குர்லா பகுதியில் ஆகஸ்ட் 27 ஆம் தேதியன்று இந்தியாவின் முதலாவது வெளியுறவு அமைச்சகத்தின் கட்டிடத்தை (Vidhesh Bhavan) மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் திறந்து வைத்தார்.
- முதலாவது முன்முயற்சித் திட்டமாக (Pilot Project), மத்திய வெளியுறவு அமைச்சகத்தின் நான்கு அலுவலகங்களை ஒரே இடத்தில் நவீனத் தொழில்நுட்பத்தில் உருவாக்கப்பட்ட கட்டிடத்தில் ஒருங்கிணைத்து அமைக்கப்பட்டுள்ளது.
- அவையாவன :
  - பிராந்தியக் கடவுச்சீட்டு அலுவலகம் (Regional Passpost Office (RPO)
  - குடிபெயர்பவர்களின் காப்பாளர் அலுவலகம் (Protector & Emigrants Office – POE)
  - கிளைச் செயலகம் (Branch Secretariat)
  - அயல் நாடுகளுடனான கலாச்சார உறவுகளுக்கான இந்தியக் குழுவின் (ICCR- Indian Council for Cultural Relations) பிராந்திய அலுவலகம்.
- மும்பையில் அமைக்கப்பட்டுள்ள விதேஷ் பவன் கட்டிடமானது, மத்திய வெளியுறவு அமைச்சகத்தின் பல்வேறு அலுவலகங்களை ஒரே குடையின் கீழ் கொண்டுவரும் மத்திய அரசின் கொள்கையில் ஒரு பகுதியாகும்.
- இதன் மூலம், வேலைவாய்ப்பு, கல்வி, வணிகம் மற்றும் சுற்றுலா போன்ற காரணங்களுக்காக அதிகளவில் வெளிநாடுகளுக்குச் செல்பவர்கள் அதிகமுள்ள நாடுகளோடு நெருங்கியத் தொடர்போடு பணியாற்ற இயலும்.
- மும்பையில் அமைக்கப்பெற்ற இந்த 'விதேஷ் பவன்' மத்திய வெளியுறவு அமைச்சகத்தினுடைய வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத வகையிலான முதலாவது ஒருங்கிணைந்த அலுவலகக் கட்டிடமாகும்.

## அகில இந்திய கைத்தறி மற்றும் கைவினைப் பொருட்கள் முகாம்கள்

- மத்திய ஜவுளித்துறை அமைச்சகம் "ஹஸ்தல்கா சஹாயோக் ஷிவிர்" (Hastkala Sahyog Shivir) என்ற முயற்சியின் கீழ் அகில இந்திய அளவிலான கைத்தறி மற்றும் கைவினைப் பொருட்கள் முகாம்களை நடத்தத் திட்டமிட்டுள்ளது.
- முகாம்கள் நடத்தப்படும் தேதிகள்: அக்டோபர் 7, 2017 முதல் அக்டோபர் 17,2017 வரை.
- ஜவுளித்துறை அமைச்சகம் நடத்தும் இந்த முகாம்கள் பண்டிட் தீன்தயாள் உபாத்யாய் கரீப் கல்யான் வர்ஷிர்க்கு அர்ப்பணிக்கப்படுகிறது. பண்டிட் தீன்தயாள் உபாத்யாயின் பிறந்த நாள் நூற்றாண்டான இந்த வருடம், பண்டிட் தீன்தயாள் உபாத்யாய் கரீப் கல்யான் வர்ஷ் (Pandit Deendayal Upadhyay Garib Kalyan Varsh) என்று அனுசரிக்கப்படுகிறது.
- இந்த முகாம்களில் பல்வேறு சேவைகள் வழங்கப்படும்.
- நெசவாளர்கள் மற்றும் கைவினைஞர்களுக்கு முத்ரா திட்டம் (Micro Units Development & Refinance Agency Ltd - MUDRA) வழியாக கடன் வசதிகள் செய்து தரப்படும்.
- ஹத்கர்கா சம்வர்தன் சஹாயாதா (Hatgarga Samvardan Sahayada) திட்டம் வழியாக நெசவாளர்களுக்குத் தறிகள் , நவீன உபகரணங்கள், மற்றும் நூல் பற்றுவரவுப் புத்தகங்கள் (Yarn Pass Book) வழங்கப்படும்.

## விளையாட்டுத் திறன்களைத் தேடும் இணையவாயில்

- நாட்டின் இளைஞர் மக்கட்தொகையில் விளையாட்டுத் திறன்களைக் கண்டறிவதற்கான தேடல் இணையவாயில் ஒன்றினை மத்திய இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு அமைச்சகம் அறிமுகப்படுத்தியுள்ளது.
- இந்த இணைய வாயிலை டில்லியில் உள்ள இந்திரா காந்தி விளையாட்டு அரங்கத்தில் ஆகஸ்ட் 29 அன்று நடைபெற்ற விழாவில் , நாட்டின் துணைக் குடியரசுத் தலைவர் வெங்கையா நாயுடு துவங்கி வைத்தார்.

## யுவா – திறன் மேம்பாட்டுத் திட்டம்

- பிரதமரின் கவுஷல் விகாஸ் திட்டத்தின் கீழ் ,(Pradhan Mantri Kaushal Vikas Yojana - PMKVY) யுவா (YUVA) என்ற திட்டத்தினை டெல்லி காவல்துறை அறிமுகப்படுத்தியுள்ளது.
- இந்தத் திட்டம் நாட்டில் உள்ள இளைஞர்கள் அவர்தம் திறன்களை மேம்படுத்திக் கொள்ளவும் , தகுந்த வேலை வாய்ப்புகளைப் பெறவும் வழிவகை செய்கிறது.
- நிறுவனங்களில் தேவைப்படும் வேலைவாய்ப்பு சார்ந்த திறன் பயிற்சிளை அளிக்கும் விதமாக , தேசியத் திறன் மேம்பாட்டு நிறுவனம் (National Skill Development Corporation - NSDC) மற்றும் இந்தியத் தொழில் கூட்டமைப்பு (Confederation of Indian Industry - CII) ஆகியவற்றுடன் இணைந்து டெல்லி காவல்துறை இத்திட்டத்தைச் செயல்படுத்துகிறது.

### *பிரதமரின் கவுஷல் விகாஸ் திட்டம்*

- இது பலன் அடிப்படையிலான திறன் சான்றிதழ் திட்டம் (outcome based skill certification scheme) ஆகும்.
- தேசியத் திறன் மேம்பாட்டு நிறுவனம் (National Skill Development Corporation - NSDC) இதனைச் செயல்படுத்துகிறது.
- முன்னரே திறன்களைக் கற்றுக்கொண்ட தகுதிவாய்ந்த நபர்களுக்கு, அவர்தம் திறன்கள் மதிப்பீடு செய்யப்பட்டு 'முன் கற்றல் அங்கீகாரச் சான்றிதழ்' (Recognition of Prior Learning - RPL) வழங்கப்படும்.
- திறன் மேம்பாடு மற்றும் தொழில் முனைவோர் அமைச்சகம் இத்திட்டத்தினைச் செயற்படுத்துகிறது.

- திட்டம் அறிமுகப்படுத்தப்பட்ட நாள் : 16 ஜூலை 2015.
- திறன் பயிற்சிகள் மற்றும் மதிப்பீட்டிற்கான கட்டணங்களை அரசாங்கமே ஏற்றுக்கொள்ளும்.

## ஜீபூ கால்நடை மரபணுத்தொகுதி மற்றும் இனப்பெருக்க உடன்படிக்கை

- பிரதமர் தலைமையிலான மத்திய அமைச்சரவைக் குழு , இந்தியா மற்றும் பிரேசில் இடையேயான ஜீபூ கால்நடை மரபணுத்தொகுதி (Zebu Cattle Genomics) மற்றும் இனப்பெருக்க ஒத்துழைப்புக்கான புரிந்துணர்வு உடன்படிக்கையினை உறுதி செய்துள்ளது.
- அக்டோபர் மாதம் 2016 ஆம் ஆண்டு ஒப்பந்தம் கையெழுத்தானது.

### *ஜீபூ மாடுகள்*

- ஜீபூ (Bos primigenius indicus or Bos indicus or Bos taurus indicus) என்பவை இந்தியத் துணைக் கண்டத்தைப் பூர்வீகமாகக் கொண்ட உள்நாட்டு மாடு இனங்கள் ஆகும்.



- சிந்து சமவெளி நாகரிகத்தின் போது , சிந்து நதிப் படுகையில் இவ்வகை மாடுகள் உருவாகின என்று வரலாறு குறிக்கின்றது.
- ஜீபூ மாடுகள் கொழுத்த திமில்களையும், பெரிய அசைத் தாடைகளையும் (dewlap) கொண்டிருக்கும். காதுகள் தொங்கிய நிலையில் தோற்றமளிக்கும் இந்த ஜீபூ மாடுகள் அதிக வெப்ப நிலைகளைத் தாங்ககூடியவை ஆகும். இவை பெருமளவில் வெப்பமண்டல நாடுகளில் வளர்க்கப்படுகின்றன.
- ஜீபூ மாடுகள் உழவு மாடுகளாகவும், பால் மாடுகளாகவும், மாட்டு இறைச்சிக்காகவும் வளர்க்கப்படுகின்றன.
- டெக்சாஸ் பல்கலைக்கழகத்தைச் சார்ந்த ஆராய்ச்சியாளர்கள் , 1999 ஆம் ஆண்டு ஜீபூ மாடு ஒன்றினைக் குளோனிங் செய்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# சர்வதேசச் செய்திகள்

### 2017 பிரிக்ஸ் நாடுகளின் வர்த்தகத் துறை அமைச்சர்கள் மாநாடு

- இவ்வாண்டிற்கான பிரிக்ஸ் நாடுகளின் வர்த்தகத் துறை அமைச்சர்கள் மாநாடு சீனாவில் நடைபெறுகிறது.
- இந்த மாநாட்டில், சரக்குப் போக்குவரத்து, நிதிப் பரிமாற்றங்கள் போன்ற பல்வேறு துறைகளில் மின்-வர்த்தக ஒத்துழைப்பை மேம்படுத்துவது குறித்து விவாதிக்கப்பட இருக்கிறது.
- BRICS என்பது ஐந்து முக்கிய வளர்ந்து வருகின்ற பொருளாதாரங்களின் கூட்டமைப்பாகும். 2017 ஆம் ஆண்டிற்கான பிரிக்ஸ் நாடுகளின் ஒன்பதாவது உச்சி மாநாடு, சீனாவின் ஜியாமென் (Xiamen) பகுதியில் செப்டம்பர் மாதம் 3, 4 மற்றும் 5 ஆகிய தேதிகளில் நடைபெற இருக்கிறது . பிரிக்ஸ் நாடுகள் 2009 இல் இருந்து, ஆண்டுதோறும் அதன் உச்சி மாநாட்டில் சந்தித்து பல்வேறு முக்கிய முடிவுகளை எடுக்கின்றன.

### 19ஆவது விரிவான பிராந்தியப் பொருளாதாரக் கூட்டு ஒப்பந்தக் கூட்டம் (Regional Comprehensive Economic Partnership - RCEP)

- இக்கூட்டம் இந்தியாவின் ஹைதராபாத் நகரில் ஜூலை 17 முதல் 28 வரை நடைபெற்றது. இந்த சந்திப்பில் இவ்வமைப்பின் வர்த்தகப் பேச்சுவார்த்தைக் குழு (Trade Negotiating Committee - TNC) மற்றும் பிற குழுக்கள் கலந்துக்கொண்டன.
- விரிவான பிராந்தியப் பொருளாதாரக் கூட்டமைப்பு என்பது பதினாறு நாடுகளினை உள்ளடக்கிய பிராந்திய பொருளாதார ஒருங்கிணைப்பு ஒப்பந்தம் ஆகும். இதில் பங்கு வகிக்கும் நாடுகள்
- ஆசியான் கூட்டமைப்பின் பத்து நாடுகள் - புருணை டருசலம், கம்போடியா, இந்தோனேசியா, லாவோஸ், மலேசியா, மியான்மர், பிலிப்பைன்ஸ், சிங்கப்பூர், தாய்லாந்து மற்றும் வியட்நாம்
- சுதந்திர வர்த்தக உடன்படிக்கை (Free Trade Agreements - FTAs) பங்குதாரர்களான - ஆஸ்திரேலியா, நியூசிலாந்து, ஜப்பான், சீனா, கொரியா மற்றும் இந்தியா.
- இந்த 19ஆவது சந்திப்பின் பொழுது ; பொருட்கள் வர்த்தகம் செயற்குழு , சேவைகள் வர்த்தகம் செயற்குழு, முதலீடுகள் வர்த்தகம் செயற்குழு ஆகியவற்றின் இணைக் கூட்டங்கள் நடைபெற்றது. அறிவு சார்ந்த சொத்துகள், மின்னணு வர்த்தகம், சட்டம் மற்றும் நிறுவன நெருக்கடி குறித்த செயற்குழுக்களும் இக்கூட்டத்தில் சந்தித்து ஆலோசனை நடத்தின.

### இந்திய-பூட்டான் நாடுகளுக்கு இடையே உள்ள வர்த்தக உறவுகள்

- இந்திய-பூட்டான் நாடுகளுக்கு இடையே உள்ள வர்த்தக உறவுகளை பலப்படுத்தும் வகையில் ஜூலை 29 முதல் புதிய உடன்படிக்கை அமல்படுத்தப்பட்டுள்ளது. இது இரு நாடுகளுக்கும் இடையான தொழில், வர்த்தகம் மற்றும் போக்குவரத்து ஆகிய துறைகள் குறித்த சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் (Free Trade Agreements - FTA) ஆகும்.
- இந்த உடன்படிக்கையானது பூட்டான் நாட்டின் பொருட்களை பிற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் பொழுது , இந்திய நாடு வழியாக சுங்க வரி செலுத்தாமல் கடந்து செல்ல வழிவகை செய்கிறது.
- இந்தியா மற்றும் பூட்டான் இடையேயான இருதரப்பு வர்த்தக உறவுகள் இந்த ஒப்பந்தத்தால் நிர்வகிக்கப்படுகின்றன. இந்த ஒப்பந்தம் கடந்த ஜூலை 29, 2016 அன்று பத்து வருட காலத்திற்கு புதுப்பிக்கப்பட்டது. இதன் செல்லுபடிக்காலம் ஒரு வருடம் அல்லது புதிய உடன்படிக்கை அமலுக்கு வரும் வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.
- இந்திய – பூட்டான் ஆகிய நாடுகளின் இருதரப்பு வர்த்தகம் 2016-17 ஆம் நிதி ஆண்டில் 7.43 பில்லியன் டாலராக அதிகரித்துள்ளது.

## வெனிசுலா அதிபர் மடுரோவுக்கு எதிராகத் தடைகள்: அமெரிக்கா அறிவிப்பு

- வெனிசுலா அதிபர் நிக்கோலஸ் மடுரோவை சர்வாதிகாரி என்று குறிப்பிட்டு அவருக்கு எதிராகப் பல தடைகளை அமெரிக்கா அறிவித்துள்ளது.



- வெனிசுலாவில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட நாடாளுமன்றம் செயல்பாட்டில் இருக்கும்போது, அதற்கும் மேலாக அரசியல் நிர்ணய சபைக்கான தேர்தலை நடத்தியது சட்ட விரோதமானது என்றும், அந்த நாட்டு மக்களின் விருப்பத்துக்கு மாறாக நடந்து கொள்ளும் அதிபர் என்றும் அமெரிக்கா குற்றம் சாற்றியுள்ளது.

## பாகிஸ்தான் நாட்டின் பிரதமராக ஷாஹித் அப்பாஸி தேர்வு

- பாகிஸ்தான் நாட்டின் இடைக்காலப் பிரதமராக முன்னாள் பெட்ரோலியத் துறை அமைச்சர் ஷாஹித் அப்பாஸி தேர்வு செய்யப்பட்டுள்ளார்.
- இவர் பாகிஸ்தானில் பிரதமர் பதவியில் இருந்து நீக்கப்பட்ட நவாஸ் ஷெரிப்பின் சகோதரர் சாபாஷ் ஷெரிப் பாராளுமன்றத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு பிரதமராக பொறுப்பேற்கும் வரை அப்பதவியில் நீடிப்பார்.



- பாகிஸ்தான் பிரதமராக இருந்த நவாஸ் ஷெரீப் 'பனாமா கேட்' ஊழல் வழக்கில் சிக்கியதைத் தொடர்ந்து, சுப்ரீம் கோர்ட்டு உத்தரவின் பேரில் கடந்த 28–ந் தேதி பதவி விலகினார்.

## எஃப்.பி.ஐ. இயக்குநராக கிறிஸ்டோஃபர் ரே தேர்வு

- அமெரிக்கப் புலனாய்வு அமைப்பான எஃப்.பி.ஐ-யின் புதிய இயக்குநராக, அதிபர் டொனால்ட் டிரம்ப்பால் பரிந்துரைக்கப்பட்ட கிறிஸ்டோஃபர் ரே-வை அந்த நாட்டு நாடாளுமன்றம் தேர்வு செய்துள்ளது.
- கடந்த ஆண்டு நடைபெற்ற அதிபர் தேர்தலில், டிரம்ப்புக்குச் சாதகமாக ரஷியாவின் தலையீடு இருந்ததாகக் கூறப்படுவது குறித்து விசாரிப்பது தொடர்பாக, இதுவரை எஃப்.பி.ஐ. இயக்குநராக இருந்த ஜேம்ஸ் கோமிக்கும், டிரம்புக்கும் இடையே கருத்து வேறுபாடு ஏற்பட்டது.
- அதனைத் தொடர்ந்து ஜேம்ஸ் கோமியைப் பதவியிலிருந்து அகற்றிய டொனால்ட் டிரம்ப், அந்தப் பதவிக்கு கிறிஸ்டோஃபரின் பெயரை பரிந்துரை செய்திருந்தார். இந்த நிலையில், இந்த நியமனம் குறித்து நாடாளுமன்றத்தின் செனட் சபையில் வாக்கெடுப்பு நடைபெற்றது.

## முதல் சுற்றுச்சூழல் ஆராய்ச்சி செயற்கைக்கோளினை விண்ணில் ஏவியது இஸ்ரேல்

- வீனஸ் (Vegetation and Environment monitoring New microsatellite venues) என்று பெயரிடப்பட்டுள்ள முதல் சுற்றுச்சூழல் ஆராய்ச்சி செயற்கைக்கோளினை இஸ்ரேல் விண்ணில் செலுத்தி இருக்கிறது.
- இந்த செயற்கைக் கோளினை இஸ்ரேலும் பிரான்சும் கூட்டாக இணைந்து தயாரித்து இருக்கிறது.

## மேகாங் – கங்கா ஒத்துழைப்பு அமைப்பு

- மேகாங் – கங்கா ஒத்துழைப்பு அமைப்பின் அமைச்சர்கள் சந்திப்பு , பிலிப்பைன்ஸ் நாட்டில் உள்ள மணிலா நகரில் நடைபெற்றது.
- மேகாங் – கங்கா ஒத்துழைப்பு நாடுகளுக்கு இடையே சுற்றுச்சூழல், கலாச்சாரம், கல்வி, போக்குவரத்து மற்றும் தகவல்தொடர்பு போன்ற பகுதிகளில் ஒத்துழைப்புக்கான புதிய அம்சங்களைச் சேர்க்க முன்மொழியப்பட்டது.

## மேகாங் – கங்கா ஒத்துழைப்பு அமைப்பு

- தொடங்கப்பட்ட வருடம் : நவம்பர் 10 , 2000.
- இடம் : வியன்டியன் நகரம் (லாவோஸ்).
- உறுப்பினர் நாடுகள்: இந்தியா, தாய்லாந்து, மியான்மர், கம்போடியா, லாவோஸ் மற்றும் வியட்நாம்.
- ஒத்துழைப்புக்கு முனையும் துறைகள் : சுற்றுலா, கலாச்சாரம், கல்வி, போக்குவரத்து மற்றும் தகவல் தொடர்பு.
- ஆண்டுதோறும் சந்திக்கும் பணிக்குழுக்கள்:
    - ✓ வருடாந்திர அமைச்சர் சபை சந்திப்பு
    - ✓ மூத்த அதிகாரிகளின் சந்திப்பு
    - ✓ சுற்றுலா பணிக்குழு (குழுவின் தலைமை: தாய்லாந்து)
    - ✓ கல்விப் பணிக்குழு (மனிதவளமேம்பாடு) [குழுவின் தலைமை : இந்தியா ]
    - ✓ கலாச்சாரப் பணிக்குழு (குழுவின் தலைமை :கம்போடியா)
    - ✓ தொலைத்தொடர்பு மற்றும் போக்குவரத்து பணிக்குழு (குழுவின் தலைமை :லாவோஸ் மக்கள் ஜனநாயக குடியரசு)
    - ✓ செயல்திட்டப் பணிக்குழு (குழுவின் தலைமை : வியட்நாம்)

- இப்பகுதியில் கங்கை மற்றும் மீகாங் ஆகிய இரண்டு பெரிய ஆறுகள் அமைந்திருப்பதால் இந்த அமைப்பு இப்பெயர் பெறுகிறது.

## பிம்ஸ்டெக்கின் (BIMSTEC) 15-ஆவது அமைச்சரவைக் கூட்டம்

- 15th-வது பிம்ஸ்டெக்கின் (BIMSTEC) அமைச்சரவைக் கூட்டம் ஆகஸ்ட் 11-ம் தேதி நேபாள தலைநகர் காத்மாண்டுவில் நடைபெற்றது.
- இக்கூட்டத்திற்கு பிறகு 18-வது பிம்ஸ்டெக்கின் (BIMSTEC) மூத்த உயர் அதிகாரிகள் அளவிலான கூட்டம் நடைபெற்றது.

*பிம்ஸ்டெக்* (BIMSTEC)

- பிம்ஸ்டெக் (BIMSTEC - Bay of Bengal Initiatives for Multi-Sectoral Technical and Economic Cooperation) என்ற துணைப் பிராந்தியக் குழுவானது தெற்கு ஆசியா மற்றும் தென் கிழக்கு ஆசியாவின் ஏழு நாடுகளை உள்ளடக்கியது. (அந்நாடுகள்: பங்களாதேஷ், இந்தியா, மியான்மர், இலங்கை, தாய்லாந்து, பூடான் மற்றும் நேபாளம்).
- 1997 ஆம் ஆண்டு ஜூன் 6 ஆம் தேதி பாங்காக்கில் பிஸ்டெக் (BIST-EC என்ற பங்களாதேஷ், இந்தியா, இலங்கை மற்றும் தாய்லாந்து நாடுகளின் பொருளாதாரக் கூட்டிணைவு) என்கிற புதிய துணைப் பிராந்தியக் குழு தொடங்கப்பெற்றது. பின்னர் இதில் மியான்மரும், நேபாளமும் இணைந்து பிம்ஸ்டெக் என்று ஆயிற்று.
- இந்த பிம்ஸ்டெக் (BIMSTEC) அமைப்பிற்கு நேபாளம் தற்போது தலைமை வகிக்கிறது. இதன் செயலகம் டாக்காவில் அமைந்திருக்கிறது.

## சர்வதேச கடல்சார் தேடுதல் மற்றும் மீட்புப் பயிற்சி - IMMSAREX

- இந்தியப் பெருங்கடல் கடற்படை கருத்தரங்கின் (Indian Ocean Naval Symposium - IONS) தற்போதைய தலைமைப் பொறுப்பினை வங்காளதேசம் வகித்து வருகிறது. இந்நிலையில் வங்காள தேசம் சர்வதேச கடல்சார் தேடுதல் மற்றும் மீட்புப் பயிற்சியினை (International Maritime Search and Rescue Exercise - IMMSAREX) நவம்பர் மாதம் வங்காள விரிகுடா பகுதியில் நடத்த திட்டமிட்டுள்ளது.
- இந்தியப் பெருங்கடல் கடற்படை கருத்தரங்கின் உறுப்பினர்கள் மற்றும் பார்வையாளர் நாடுகள் இதில் பங்கேற்கவுள்ளன.
- மீட்பு நடவடிக்கைகள் பயிற்சியில் பார்வையாளராக (Observer) சீனா கலந்துகொள்ள உள்ளது.


*இந்தியப் பெருங்கடல் கடற்படை கருத்தரங்கு*

- இது இந்தியப் பெருங்கடல் பகுதியில் அமைந்துள்ள நாடுகளின் பிராந்தியக் கூட்டமைப்பு ஆகும். இவ்வமைப்பு 2008 ஆம் ஆண்டு நிறுவப்பட்டது.

- தற்சமயம் இந்த அமைப்பில் 23 உறுப்பினர்களும், 9 பார்வையாளர்களும் உள்ளனர்.
- இந்தியப் பெருங்கடல் கரையோர நாடுகளின் சார்பாக அந்தந்த நாட்டின் கடற்படைத் தளபதிகள் கலந்துக் கொள்கின்றனர். உறுப்பினர் நாடுகளுக்கு இடையே இராணுவ ஒத்துழைப்பை ஊக்குவிப்பது இந்தக் கருத்தரங்கின் நோக்கம் ஆகும்.
- மனிதாபிமான உதவிகள் மற்றும் பேரிடர் நிவாரணம் (Humanitarian Assistance and Disaster Relief - HADR), தகவல் பாதுகாப்பு மற்றும் இயங்குத்தன்மை (Information Security and Interoperability - IS&I) மற்றும் கடற்கொள்ளைத் தடுப்பு (Anti-Piracy) ஆகிய செயற்குழுக்கள் 'கடல் பாதுகாப்பு' என்ற ஒரு குழுவின் கீழ் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளது.

## ஜப்பானிய மூளைக்காய்ச்சல்

- இது கொசுக்கள் மூலம் பரவி மூளையைத் தாக்கும் வைரஸ் நோய்.
- ஜப்பானிய மூளைக்காய்ச்சல் வைரஸ் (JEV) என்பது ஓர் வகை பிளேவி வைரஸ். இந்த வகை வைரஸின் பிற இனங்களே, டெங்கு, மஞ்சள் காய்ச்சல், மேற்கு நைல் வைரஸ் போன்ற கொசுக்கள் மூலம் பரவும் நோய்களுக்கு காரணமாக அமைகிறது.




- ஜப்பானிய மூளைக்காய்ச்சல் நோய்க்கு தீர்வோ மருந்தோ கிடையாது, நோயாளிகளின் அறிகுறிகளுக்கு தக்கவாறு தீவிர சிகிச்சை அளிக்கப்படும்.
- இந்நோய் கியுலக்ஸ் வகை கொசுக்களில் பாதிக்கப்பட்டவை கடிப்பதன் மூலம் மக்களுக்குப் பரவுகிறது.

## முதல் தாவரம் சார்ந்த சிகா தடுப்பூசி உருவாக்கப்பட்டது

- முதன்முதலில், அமெரிக்காவின் அரிசோனா மாநிலப் பல்கலைகழகத்தைச் (ASU) சேர்ந்த விஞ்ஞானிகள், தாவரம் சார்ந்த சிகா தடுப்பூசியை உருவாக்கியுள்ளனர், இது சிகா நோய்க்காக

உருவாக்கப்பட்ட பிற மருந்துகளை விட அதிக சக்திவாய்ந்த, பாதுகாப்பான மற்றும் மலிவானதாகவும் இருக்கும்.


- புகையிலைத் தாவரத்தைப் பயன்படுத்தி உருவாக்கப்பட்ட இந்த தடுப்பூசி முக்கிய புரதமான DIII யை குறிவைக்கிறது. இப்புரதமானது ஜிகா (Zika) வைரஸை வெளிப்புறமாக சூழ்ந்து மறைக்கிறது. மேலும் வைரஸ் நோய் தொற்றிலும் முக்கிய பங்கு வகிக்கிறது .
- எலியின் மீது செய்யப்பட்ட நோய்த் தடுப்பு பரிசோதனைகள், ஜிகா வைரசிற்கு எதிராக ஆன்டிபாடிகளை செலுத்துவதிலும் செல்லுலார் நோயெதிர்ப்பை ஊக்குவிப்பதிலும் 100 சதவிகிதம் வெற்றி கண்டன.
- உலகெங்கிலும் உள்ள ஜிகா அச்சுறுத்தல் முதலில் 2015 ல் உருவானது. அது மில்லியன் கணக்கான மக்களின் இறப்பிற்கும் , மேலும் பிறப்புக் குறைபாடுகளுடன் கூடிய குழந்தைகளின் பிறப்பிற்கும் வழிவகுத்தது.

## ஸ்ட்ரெப்டோகோகஸ் பியோஜெனெஸ் நோய்க்குறி கண்டறிவுக்கான டிஎன்ஏ உணர்கருவி (சென்சார்)

- சுமார் 30 நிமிடங்களில் பல்வேறு நோய்களை ஏற்படுத்தும் பாக்டீரியாவான ஸ்ட்ரெப்டோகோக்கஸ் பியோஜெனெசை கண்டறிவதற்காக அல்ட்ராசென்சிடிவ் டிஎன்ஏ உணர் கருவி (Sensor), உருவாக்கப்பட்டுள்ளது.
- டி.என்.ஏ. சிப்கள் எஸ்.பியோஜெனஸ்களை (S. pyogenes) கண்டறிய பயன்படும் குறிப்பிடப்பட்ட சாதனமாகும்
- வழக்கமான முறையான இனமறியும் முறை 18-24 மணிநேரம் வரை எடுத்துக்கொள்ளும் மற்றும் அடிப்படைக் கலாச்சார சோதனையானது எஸ்.பையோஜென்களை வேறுபடுத்திக் காட்டுவதற்கு உதவாது.
- மிதமான தோல் மற்றும் தொண்டை நோய்த்தொற்று முதல் உயிருக்கு ஆபத்தான நச்சு நோய்களை ஏற்படுத்தும் எஸ்.பியோஜெனஸ் தொற்றுகள் ஒவ்வொரு வருடமும் 700 மில்லியன் மக்களை பாதிக்கின்றன.ஆரம்பக் காலகட்டத்திலேயே சிகிச்சையளிக்கப்படாவிட்டால், எஸ். பியோஜென்களின் மூலம், இதய நோய் (இதய வால்வுகள் சேதம்) ஏற்படலாம்.
- CSIR- இன் இன்ஸ்டிடியூட் ஆஃப் ஜெனோமிக்ஸ் மற்றும் ஒருங்கிணைந்த உயிரியல் மற்றும் நோயியல் கட்டுப்பாட்டுக்கான தேசிய மையம் (NCDC) ஆகியவற்றின் விஞ்ஞானிகளால் இந்த சென்சார் உருவாக்கப்பட்டது
- இதன் முடிவுகள் உயிரியல் பெருமூலக் கூறுகளுக்கான சர்வதேச பத்திரிக்கையில் வெளியிடப்பட்டன
- டிஎன்ஏ சிப் அடிப்படையிலான இந்த சென்சார் கார்பன் எலெக்ட்ரோட் மற்றும் தங்க நானோ துகள்களுடன் உட்பொதிக்கப்பட்டிருக்கிறது.

## துர்க்மேனிஸ்தான் - ஆப்கானிஸ்தான் - பாகிஸ்தான் - இந்தியா (TAPI) - எரிவாயுக் குழாய்

- துர்க்மேனிஸ்தான் - ஆப்கானிஸ்தான் - பாகிஸ்தான் - இந்தியா எரிவாயுக் குழாய், ஏசியன் மேம்பாட்டு வங்கியால் உருவாக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது.
- இந்தக் குழாய் காஸ்பியன் கடலின் இயற்கை எரிவாயுவை துர்க்மேனிஸ்தானிலிருந்து ஆப்கானிஸ்தான் வழியாக பாகிஸ்தானுக்கும் பின் இந்தியாவிற்கும் கொண்டு வரும் திட்டமாகும்.




- இத்திட்டம் துர்க்மேனிஸ்தானில் டிசம்பர்-2015-ல் துவக்கப்பட்டது. இது 2020 இல் நடைமுறைக்கு வரும் என எதிர்பார்க்கப்படுகிறது.
- TAPI என்பது நாடுகளின் முதல் எழுத்துக்கள் ஒன்றிணைத்து உருவாக்கப்பட்ட பெயர். இந்த வழி, முந்தைய பட்டு சாலையின் நவீனகாலத் தொடர்ச்சியாகும்.

### அண்டார்டிகாவில் உலகின் பெரிய எரிமலைப் பகுதி

- உலகின் மிகப்பெரிய எரிமலைப் பகுதியை அறிவியலாளர்கள் கண்டறிந்துள்ளனர். இதில் குறைந்தபட்சம் 100 எரிமலைகள் இருக்கலாம். இது அண்டார்டிகாவின் பனிப் போர்வைகளுக்கு கீழ், 2 கிமீ ஆழத்தில் அமைந்துள்ளது. இங்கிலாந்தின் எடின்பார்க் பல்கலைக் கழகம் 91 எரிமலைகள் உள்ளதைத் தெரியப்படுத்தியது. இதில் 47 ஏற்கனவே கண்டறியப்பட்டவை ஆகும். இதில் சுவிட்சர்லாந்தில் 4000 மீட்டர் உயரத்தில் அமைதுள்ள எய்கர் (EIGER) என்பது மிக உயரமானது ஆகும்.
- புதிதாகக் கண்டறிப்பட்ட எரிமலைகள் 100 முதல் 3850 மீட்டர்கள் உயரம் வரை அமைந்துள்ளது. இந்த உயிர்ப்புள்ள எரிமலைகள் மேற்கு அண்டார்டிகாவின் பிளவுப்பகுதியில் குவிந்திருகின்றன. இப்பரவல், ரோஸ் பனியடுக்கிலிருந்து, அண்டார்டிக் தீபகற்பம் வரை அமைந்துள்ளது.

### 40 ஆண்டு தடைக்குப் பின் இந்தியா வருகிறது அமெரிக்க கச்சா எண்ணெய்

- 40 ஆண்டுகளுக்குப் பிறகு முதல் முறையாக அமெரிக்க கச்சா எண்ணெய் ஏற்றிய சரக்குக் கப்பல்கள் அடுத்த மாதம் இந்தியா வருகின்றன.
- இந்தியாவுக்கு கச்சா எண்ணெய் ஏற்றுமதி செய்வதற்கு சுமார் 40 ஆண்டுகளுக்கு முன்னர் அமெரிக்கா தடை விதித்தது.
- எனினும், இந்தியா - அமெரிக்கா இடையிலான உறவு அண்மைக் காலமாக வலுவடைந்து வரும் நிலையில், இந்தியாவுக்கான கச்சா எண்ணெய் ஏற்றுமதி தடையை இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் அப்போதைய அமெரிக்க அதிபர் ஒபாமா நீக்கினார்.

- அதையடுத்து, பிரதமர் நரேந்திர மோடி கடந்த ஜூன் மாதம் 26-ஆம் தேதி அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப்பைச் சந்தித்துப் பேசியபோது, எரிசக்தித் துறையில் இருநாட்டு ஒத்துழைப்பை மேம்படுத்த ஒப்புக் கொள்ளப்பட்டது.
- அதையடுத்து, இந்தியன் ஆயில், பாரத் பெட்ரோலியம் உள்ளிட்ட நிறுவனங்கள் அமெரிக்காவிடமிருந்து கச்சா எண்ணெய் வாங்க முன்வந்தன. இதன்மூலம், உலகின் மூன்றாவது மிகப் பெரிய எண்ணெய் இறக்குமதி நாடான இந்தியா, அமெரிக்காவிடமிருந்து எண்ணெய் கொள்முதல் செய்யும் தென் கொரியா, ஜப்பான், சீனா ஆகிய மூன்று நாடுகளுடன் இணைந்தது.
- இந்தச் சூழலில், சுமார் 10 கோடி டாலர் (ரூ.636 கோடி) மதிப்பிலான கச்சா எண்ணெய் பேரல்களை ஏற்றிய சரக்குக் கப்பல்கள் அமெரிக்காவின் பல்வேறு துறைமுகங்களில் இருந்து இந்தியாவின் ஒடிஸா மாநிலத்தில் உள்ள பாரதீப் துறைமுகம் நோக்கி புறப்பட்டுள்ளன.
- இந்த மாதம் 6 முதல் 14-ஆம் தேதி வரை அமெரிக்காவிலிருந்து புறப்பட்ட அந்தக் கப்பல்கள், அடுத்த (செப்டம்பர்) மாத இறுதியில் இந்தியா வந்தடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## நாசாவின் TDRS-M செயற்கைக்கோள்

- நாசா ஆகஸ்ட் 18 அன்று , அடுத்த தலைமுறை தகவல் தொடர்பு செயற்கைக்கோள்களின் தொடரில் மூன்றாவது மற்றும் இறுதியான செயற்கைக்கோளினை சுற்றுப்பாதையில் வெற்றிகரமாக நிறுத்தியது.
- TDRS-M என்று பெயரிடப்பட்டு இருக்கும் இந்த செயற்கைக் கோள், நாசாவின் விண்வெளி பிணையத்தில் ஒரு பகுதியாக செயல்படும். சர்வதேச விண்வெளி நிலையம், நாசாவின் ஹப்பல் விண்வெளி தொலைநோக்கி மற்றும் பிற விண்கலங்களுக்கு அதிவேக தரவுத் தொடர்பு மற்றும் இதர சேவைகளை வழங்கும் .
- TDRS-M இன் முன்னோடிகளான, TDRS-K மற்றும் TDRS-L ஆகியவை முறையே ஜனவரி 2013 மற்றும் ஜனவரி 2014 இன் பொழுது, அட்லஸ் V ராக்கெட்டுகளின் மூலமாக விண்ணில் செலுத்தப்பட்டது.

## இணையத் தகராறுகளுக்கான முதல் இணைய நீதிமன்றத்தை சீனா துவக்கி உள்ளது

- சீனாவின் மின்-வணிக மைய நகரமான ஹேங்காசுவில் (Hangzhou) இணையங்கள் தொடர்பான வழக்குகளை கையாள்வதற்காக இது தொடங்கப்பட்டிருக்கிறது.

## ஆழக் கடற்படுகையில் அகழ்வாராய்ச்சி

- மத்திய இந்தியப்பெருங்கடலின் கடற்படுகையில் உள்ள பல்உலோகத் திரளைகளை (Polymetallic Nodules) ஆகழ்வாராய்ச்சி செய்து எடுப்பதற்கான இந்தியாவின் தனியுரிமையினை ஐந்தாண்டுகளுக்கு நீட்டிக்கப்பட்டுள்ளது.
- சர்வதேச கடற்படுகை ஆணையம் (International Sea bed Authority) தான் சர்வதேசக் கடற்பகுதியில் வளர்ச்சிப்பணிகள் மேற்கொள்வதற்கான உரிமைகளை நிர்ணயிக்கிறது.
- ஆகஸ்ட் 18 அன்று ஜமைக்காவின் கிங்ஸ்டனில் நடைபெற்ற ஐ.எஸ்.ஏ (ISA) வின் 23 வது கூட்டத்தில் இந்தியாவிற்கான இந்த உரிமைக்கு ஒப்புதல் வழங்கப்பட்டது.
- மத்திய புவி அறிவியல் அமைச்சகத்தின் (Ministry of Earth Sciences) மூலமாக பல்உலோகத் திரளைகளினை அகழ்வாராய்ச்சி செய்தலையும் அதைப் பயன்படுத்துதலையும் இந்தியா மேற்கொண்டு வருகிறது.

### சர்வதேச கடற்படுகை ஆணையம்

- அரசுகளுக்கிடையேயான அமைப்பான (Intergovernmental body) சர்வதேச கடற்படுகை ஆணையம் (International Seabed Authority) ஆனது ஜமைக்காவின் கிங்ஸ்டனை அடிப்படையாகக் கொண்டு செயல்படுகிறது.
- நாடுகளின் எல்லைகளுக்கு அப்பாற்பட்ட சர்வதேச கடற்படுகைப் பகுதியில் நடைபெறக்கூடிய அனைத்து வித உலோகம் சார்ந்த நடவடிக்கைகளை ஒருங்கிணைக்கவும் ஒழுங்குபடுத்தவும் கட்டுப்படுத்தலுக்காகவும் இந்த அமைப்பு தொடங்கப்பெற்றுள்ளது.
- நாடுகளின் எல்லைகளுக்கு அப்பாற்பட்ட கடற்படுகை (sea bed), பெருங்கடலின் அடிப்பகுதி (ocean floor) மற்றும் அடிமண் (subsoil) போன்றவையே ஐ.எஸ்.ஏ எல்லைக்குட்பட்ட சர்வதேச கடற்படுகைப் பகுதி என்று கடல்சார் சட்டங்களுக்கான ஐக்கிய நாடுகளின் மாநாடு (UNCLOS) விவரிக்கின்றது.
- கடல்சார் சட்டங்களின் மாநாட்டின்படி இந்த அமைப்பு தொடங்கப்பெற்றிருக்கிறது.
- ஐநா அவையில் நோக்காளர் அந்தஸ்தினை இந்த அமைப்பு பெற்றிருக்கிறது.
- கடந்தாண்டு, ஐ.எஸ்.ஏ வின் உறுப்பினர் குழுவில் இந்தியா மீண்டும் உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டது.

### இந்திய பெருங்கடல் மாநாடு 2017

- ‘இந்திய பெருங்கடல் மாநாடு 2017’ இலங்கை தலைநகர் கொழும்புவில் நடைபெறுகிறது . இந்தியா பவுண்டேசன் (India Foundation) என்ற இந்தியாவைச் சார்ந்த சிந்தனையாளர்க் குழுவும் , RSIS (இலங்கை) மற்றும் NFIS (சிங்கப்பூர்) எனும் ஆராய்ச்சி மையங்களும் இந்த மாநாட்டினை ஒருங்கிணைக்கின்றன.
- மாநாட்டின் கருப்பொருள் : சமாதானம், முன்னேற்றம் மற்றும் செழிப்பு (Peace, Progress, and Prosperity )
- முதலாவது இந்தியப் பெருங்கடல் மாநாடு 2016 ஆம் ஆண்டு சிங்கப்பூர் நாட்டில் நடைபெற்றது. சிங்கப்பூர் , இலங்கை மற்றும் வங்காளதேச நாடுகளைச் சார்ந்த சிந்தனையாளர் குழுக்கள் இணைந்து இந்த மாநாட்டினை ஒருங்கிணைத்தனர்.

### புத்தாக்க எரிசக்தி மின்கட்டமைப்பு ஒப்பந்தம்

- இந்தோ - ஜெர்மன் எரிசக்தி இயக்கம் - பசுமை எரிசக்தி வழிச்சாலையின் (IGEN-GEC) கீழ் இந்தியா - ஜெர்மனி இடையே புத்தாக்க எரிசக்தி மின்கட்டமைப்பை உருவாக்குவதற்கான தொழில்நுட்ப ஒத்துழைப்பு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.
- 2013 இல் ஜெர்மன் வளர்ச்சி வங்கியின் (KfW - German Development Bank) மூலமாக 1 பில்லியன் யூரோக்கள் கடனாக இந்தியாவுக்கு ஜெர்மனி வழங்குவது என முடிவெடுத்தது.

### உலகின் முதல் குறைந்த செறிவூட்டப்பட்ட யுரேனியம் வங்கி

- கஜகஸ்தான் நாட்டில் யுரேனியம் வங்கியினை (Low Enriched Uranium Bank - LEU) , சர்வதேச அணுசக்தி முகமையகம் (International Atomic Energy Agency - IAEA) துவங்கியுள்ளது. புதிய நாடுகள் அணுசக்தி எரிபொருட்களை செறிவூட்டுவதைக் குறைக்கும் நோக்கத்துடன் இது துவங்கப்பட்டுள்ளது.
- கஜகஸ்தான் நாட்டின் ஓஸ்கிமென் நகரில் 150 மில்லியன் டாலர்கள் செலவில் துவங்கப்பட்டுள்ள இந்த வங்கியானது 90 டன் அளவிலான அணுசக்தி எரிபொருட்களை சேமித்து வைக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. சர்வதேச அணுசக்தி முகமையகத்தின் உறுப்பினர் நாடுகளுக்கு அணு எரிபொருள் கிடைக்காத காலங்களில் இந்த வங்கியின் இருப்பில் இருந்து வழங்கப்படும்.




- அணுமின் நிலையங்களுக்கு சீராக , தடை இல்லாத எரிபொருட்கள் கிடைக்கப்பெறுவதை இத்திட்டம் உறுதி செய்கிறது. உள்நாட்டுச் செறிவூட்டல் இல்லாமல் , ஒரே இடத்தில் அணுசக்தி எரிபொருட்களை செறிவூட்டி அதனை உறுப்பினர்களுக்கு விநியோகம் செய்வதே இந்தத் திட்டத்தின் நோக்கம் ஆகும்
- 2010 ஆம் ஆண்டு இதே போன்ற அணுசக்தி எரிபொருள் வங்கியினை ரஷ்யா தொடங்கியது. எனினும் கஜகஸ்தான் நாட்டில் தற்போது தொடங்கப்பட்டிருக்கும் வங்கியானது உலக அணுசக்தி கண்காணிப்புக் குழுவுக்கு முழுமையாக சொந்தமானதும், அக்குழுவால் இயக்கப்படுவதும் ஆகும்.
- ஐக்கிய நாடுகள், ஐரோப்பிய ஒன்றியம், குவைத், ஐக்கிய அரபு எமிரேட்ஸ், நார்வே, அணு ஆயுத அச்சுறுத்தலுக்கான அமைப்பு (Nuclear Threat Initiative) போன்றவற்றின் நிதி உதவியைக் கொண்டு இந்த வங்கி நிறுவப்பட்டுள்ளது.


*சர்வதேச அணுசக்தி முகமையகம்*

- சர்வதேச அணுசக்தி முகமையகம் (International Atomic Energy Agency) என்பது அணு சக்தியின் அமைதிவழிப் பயன்பாட்டினை ஊக்குவிக்கவும், அணுக்கருவிகளின் இராணுவப் பயன்பாடுகளை தடுக்கவும் ஜூலை 29, 1957 அன்று சர்வதேச அணுசக்தி அமைப்பு மசோதா மூலம் நிறுவப்பட்ட ஒரு தன்னாட்சி அமைப்பாகும்
- மறைந்த அமெரிக்க குடியரசுத்தலைவர் ஐசனோவர் அவர்கள் ஐக்கிய நாடுகள் பொதுச் சபையில் 1953-ஆம் ஆண்டு ஆற்றிய அமைதிக்கான அணுக்கள் எனும் உரையில் அணு சக்தியின் பயன்பாட்டினை கட்டுப்பாட்டுடன் வளர்க்க இப்பன்னாட்டு அமைப்பை உருவாக்கும் ஆலோசனையை முன்வைத்தார்
- நிறுவனத்தின் 60 ஆம் ஆண்டு விழாவிற்கானக் கருப்பொருள் (1957-2017): நமது குறிக்கோள் அமைதி மற்றும் மேம்பாட்டிற்காக அணுசக்தியை பயன்படுத்துவது (Our motto is Atoms for Peace and Development)
- நிறுவனத்தின் தற்போதைய தலைவர் : யுகியா அமனோ.

# பொருளாதாரம்

## புதிய பரிவர்த்தனை வர்த்தக நிதியம்: "பாரத் 22"

- மத்திய நிதி அமைச்சகம், "பாரத் 22" என்ற புதிய பரிவர்த்தனை வர்த்தக நிதியத்தினை (Exchange Traded Fund , ETF)அறிவித்துள்ளது
- "பாரத் 22"நிதியமானது மத்திய பொதுத்துறை நிறுவனங்கள், பொதுத் துறை வங்கிகள் , யூனிட் டிரஸ்ட் ஆஃப் இந்தியாவின் SUTTI (Specified Undertaking of Unit Trust of India (SUUTI) ஆகியவற்றின் 22 பங்குகளை உள்ளடக்கிய நிதியம் ஆகும்.
- 'பாரத் 22'என்பது நன்கு பன்முகப்படுத்தப்பட்ட 6 துறைப்பிரிவுகளைக் கொண்டது. அவை, அடிப்படைப் பொருட்கள், எரிசக்தி ஆற்றல், நிதித்துறை, வேகமாக விற்பனையாகும் நுகர்வோர் பொருட்கள் (Fast-moving consumer goods, FMCG), தொழிற்சாலைகள் மற்றும் உள்கட்டமைப்புகள் ஆகியவையாகும்.



- 'பாரத் 22' குறியீடானது ஆண்டுதோறும் மறுசீரமைக்கப்படும் . ஐ.சி.ஐ.சி.ஐ மற்றும் ஏ.எம்.சி ஆகிய நிறுவனங்கள் இந்த பரிவர்த்தனை வர்த்தக நிதியத்தின் மேலாளராக செயல்பட இருக்கின்றன.
- ஆசியா இன்டெக்ஸ் தனியார் நிறுவனமானது (Asia Index Private Limited) இந்நிதியின் குறியீட்டு வழங்குனர் ஆகும்.

## இந்தியா விக்ஸ் குறியீடு (India Volatility Index, VIX)

- இந்தியா விக்ஸ் குறியீடு / இந்திய நிலையாமைக் குறியீட்டினை தேசிய பங்குச் சந்தை (National Stock Exchange- NSE) வெளியிட்டுள்ளது.
- நிஃப்டி 50 இல் அடுத்த 30 நாட்களுக்கு வர்த்தகர்கள் எதிர்பார்க்கின்ற நிலைத்தன்மை அல்லது ஏற்ற இறக்கங்களை அளவிடுவதற்கு ஏற்றதாக இந்தக் குறியீடு இருக்கிறது.
- பங்குச்சந்தையில் பங்கு பெறுபவர்கள் எதிர்காலத்தில் முழு திருப்தி அடைவார்களா அல்லது திருப்தி அடைய மாட்டார்களா என்றும் கணிக்கக்கூடிய குறியீடாகவும் இது விளங்கும்.

## 7.5% பொருளாதார வளர்ச்சி சாத்தியமில்லை: பொருளாதார ஆய்வறிக்கையில் தகவல்

- நிகழாண்டில் நாட்டின் பொருளாதார வளர்ச்சி விகிதம் எதிர்பார்த்த அளவு (7.5 சதவீதம்) உயர வாய்ப்பு இல்லை என்று பொருளாதார ஆய்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.
- விவசாயக் கடன் தள்ளுபடியும், அந்நிய செலாவணிக்கு எதிரான இந்திய ரூபாயின் மதிப்பில் ஏற்பட்ட சரிவுமே அதற்கு காரணம் என்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.
- ரூபாய் நோட்டு வாபஸ் நடவடிக்கையால் நாட்டின் பொருளாதார நிலையில் முன்னேற்றம் ஏற்படும் என்று பிரதமர் கருத்து தெரிவித்து வந்த நிலையில், அதற்கு மாறான கருத்துகள் ஆய்வறிக்கையில் இடம் பெற்றிருப்பது விமர்சனங்களுக்கு இடமளித்துள்ளது.
- நிகழாண்டுக்கான முதலாவது பொருளாதார ஆய்வறிக்கை கடந்த ஜனவரி மாதம் வெளியிடப்பட்டது. அதில் நாட்டின் பொருளாதார வளர்ச்சி விகிதம் 6.5 சதவீதத்திலிருந்து 7.5 சதவீதம் வரை அதிகரிக்கக் கூடும் எனத் தெரிவிக்கப்பட்டிருந்தது.
- இந்நிலையில், அதற்கு அடுத்து வந்த மாதங்களில் பல்வேறு சீர்திருத்த நடவடிக்கைகளை மத்திய அரசு முன்னெடுத்தது. குறிப்பாக, சரக்கு மற்றும் சேவை வரி விதிப்பு (ஜிஎஸ்டி) நடைமுறை அமல்படுத்தப்பட்டது. அவற்றின் தாக்கங்கள் நாட்டின் நிதி நிலையில் பிரதிபலிக்கலாம் என எதிர்பார்க்கப்பட்டது.
- இந்தச் சூழலில் அதனை ஊர்ஜிதப்படுத்தும் வகையிலான அம்சங்கள் தற்போது வெளியிடப்பட்டுள்ள இரண்டாவது பொருளாதார அறிக்கையில் இடம்பெற்றுள்ளன.
- தலைமைப் பொருளாதார ஆலோசகர் அரவிந்த் சுப்ரமணியன் அவர்களின் தலைமையில் உருவாக்கப்பட்ட பொருளாதார ஆய்வு அறிக்கையை மத்திய நிதி அமைச்சர் அருண் ஜேட்லி நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்தார்.


## வடகிழக்கு மாநிலங்களில் தொழில் நிறுவனங்களுக்கு 2027 வரை வரி விலக்கு

- வடகிழக்கு மாநிலங்கள், இமயமலைப் பகுதி மாநிலங்களில் அமைந்துள்ள தொழில் நிறுவனங்களுக்கு 2027-ஆம் ஆண்டு வரை வரி விலக்கு அளிக்க மத்திய அமைச்சரவைக் கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டது.
- வடகிழக்கு மாநிலங்கள், இமயமலைப் பகுதி மாநிலங்களான ஜம்மு-காஷ்மீர், இமாசலப் பிரதேசம், உத்தரகண்ட் ஆகியவற்றில் தொழில் நிறுவனங்களுக்கு மேலும் 10 ஆண்டுகள் அதாவது 2027-ஆம் ஆண்டு வரை வரி விலக்கு அளிக்கப்படுகிறது. மேற்கண்ட மாநிலங்களில் புதிதாக தொழில் தொடங்கும் நிறுவனங்களுக்கும் இந்தச் சலுகை உண்டு.

- இப்போது அமலில் உள்ள சரக்கு-சேவை வரியில் (ஜிஎஸ்டி) வரிவிலக்கு அளிக்க இடமில்லை. எனினும், ஜிஎஸ்டி வரிவிதிப்பின் ஒரு பிரிவின்படி வரியை முழுமையாகத் திரும்பப் பெற்றுக்கொள்ள அனுமதியுள்ளது. அதன்படி, இந்த சிறப்புச் சலுகை அளிக்கப்படுகிறது. இதன் மூலம் 4,284 நிறுவனங்கள் முழுமையான வரிவிலக்குப் பெறும்.

## யுக்திமுறை பொதுப்பங்குகளை விற்பதற்கான புதிய வழிகாட்டுதலுக்கு ஒப்புதல்

- மத்திய பொதுத்துறை நிறுவனங்களில் (Central Public Sector Enterprises - CPSEs) முதலீடுகளைத் யுக்திமுறையில் விற்பதைத் துரிதப்படுத்துதல் .
- சமீபத்தில் பொருளாதார விவகாரங்களுக்கான அமைச்சரவைக் குழுவானது (Cabinet Committee on Economic Affairs) பொதுத்துறை நிறுவனங்களின் யுக்திமுறைப் பங்குகளை விற்பதற்கான முன்மொழிதலை ஏற்படுத்தவும், அதற்கான ஒப்புதல் அளிக்கவும் அமைச்சரவைக் குழு ஒன்றை ஏற்படுத்தியுள்ளது.
- இந்த திட்ட அறிக்கையானது முதலீடு மற்றும் பொதுச் சொத்து மேலாண்மைத் துறை மூலம் முன் மொழியப்பட்டடது (DIPAM)
- நிதி அமைச்சர், போக்குவரத்துத் துறை அமைச்சகத்தின் உறுப்பினர்கள், மேலாண்மைத் துறை அமைச்சர் ஆகியோரால் இந்த அதிகாரமிக்க அமைச்சரவைக் குழு வழி நடத்தப்படும்.
- யுக்திமுறை பொதுப்பங்குகளை முதலீட்டு பரிவர்த்தனை முறைகளை விரைவில் முடிக்க இந்த ஒப்புதல் உதவும்.




## சீனா பொருட்கள் மீது பொருள் குவிப்பு தடுப்பு வரி

- சீனாவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் கடினமான செம்பதக் கண்ணாடிகள் (Tempered Galsses) மீது மத்திய நிதி அமைச்சகம் பொருள் குவிப்பு தடுப்பு வரி விதித்துள்ளது.

- சூரிய ஒளி மின்னழுத்த தகடுகள் மற்றும் பிற சூரிய ஒளி மின்சார தயாரிப்பு அமைப்பில் பல்வேறு செம்பதக் கண்ணாடிகள் உபயோகிக்கப்படுகின்றன.
- இவை சூரிய ஒளிக் கண்ணாடிகள் என்றும் உயர் பரிமாற்ற ஒளிமின்னழுத்தக் கண்ணாடிகள் என்றும் அறியப்படும்.
- ஐந்து ஆண்டுகள் நடைமுறைப் படுத்தப்பட இருக்கும் இந்த வரி , உள்நாட்டு செம்பதக் கண்ணாடித் தொழிற்சாலைகளை மலிவான இறக்குமதியிலிருந்து காக்கும் நோக்கத்துடன் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது .

*பொருள் குவிப்பு தடுப்பு வரி*

- பொருள் குவிப்பு தடுப்பு வரி என்பது தங்கள் பொருட்களை நியாயமான சந்தை விலைக்கு குறைவாக விற்று , உள்நாட்டு உற்பத்தியாளர்களுக்கு பாதிப்பினை ஏற்படுத்தும் வெளிநாட்டு நிறுவனங்கள் மீது அரசாங்கம் கூடுதல் விதிக்கும் கூடுதல் பாதுகாப்பு சுங்க வரி ஆகும் .
- உள்நாட்டு உற்பத்தியாளர்களைப் பாதுகாக்கவும் , சந்தையில் ஏகபோகத்தைத் தடுக்கவும் , வர்த்தக நிலைத்தன்மையை ஏற்படுத்தவும் இத்தகைய வரி விதிக்கப்படுகிறது.

## புதிய ரூ.200 நோட்டு வெளியீடு

- இந்திய ரிசர்வ் வங்கி முதல் முறையாக, 200 ரூபாய் நோட்டை (ஆக.25) வெளியிட்டது. இதனால், குறைந்த மதிப்பிலான ரூபாய் நோட்டுகளுக்கான தட்டுப்பாடு குறையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.
- அடர்மஞ்சள் நிறத்தில் வெளியாகும் இந்தப் புதிய ரூபாய் நோட்டு, 66 மி.மீ. *146 மி.மீ. என்ற அளவில் இருக்கும். நோட்டின் மையப் பகுதியில் மகாத்மா காந்தியின் உருவமும், அதன் அருகில் மாறும் வண்ணத்தில் 200 என்று எண்ணிலும் அச்சிடப்பட்டிருக்கும்.
- இதுதவிர, பார்வையற்றவர்கள் எளிதில் அடையாளம் காணும் வகையில், பெரிதாகும் எண்கள், அசோகச் சக்கர முத்திரை, இரண்டு ஓரங்களிலும் நான்குகோடுகள் ஆகியவை இடம் பெற்றிருக்கும்.
- நோட்டின் பின்புறத்தில், தூய்மை இந்தியா வாசகம் மற்றும் சின்னம், இந்திய பாரம்பரிய கலாசாரத்தைப் போற்றும் சாஞ்சி ஸ்தூபியின் உருவம் ஆகியவை அச்சிடப்பட்டிருக்கும்.
- உயர்மதிப்புடைய ரூ.500, ரூ.1,000 நோட்டுகளை மத்திய அரசு கடந்த ஆண்டு நவம்பர் மாதம் வாபஸ் பெறப்பட்ட பிறகு, புதிய ரூ.500, ரூ.2,000 நோட்டுகள் வெளியிடப்பட்டன. இதனால், பணப்புழக்கம் குறைந்ததுடன் சில்லறைத் தட்டுப்பாடு ஏற்பட்டது.

## சோடியம் நைட்ரைட் மீது பொருள் குவிப்புத் தடுப்பு வரி விதிப்பு

- மத்திய நிதி அமைச்சகம் சீனாவில் இருந்து இறக்குமதி செய்யப்படும் சோடியம் நைட்ரைட் மீது ஐந்தாண்டுகளுக்கு பொருள் குவிப்பு தடுப்பு வரி (Anti-dumping duty) விதித்துள்ளது.
- வர்த்தக அமைச்சகத்தால் நியமிக்கப்பட்ட அமைப்பினுடைய மூன்றாவது மறு ஆய்வுக் கூட்டத்தின் ஆய்வின் படி இந்த வரி விதிப்பு பரிந்துரைக்கப்பட்டுள்ளது.
- இதன்படி சீனாவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் சோடியம் நைட்ரைட் மீதுடன் ஒன்றுக்கு 72.95 டாலர் மதிப்பிலான பொருள் குவிப்பு தடுப்பு வரியினை வருவாய்த்துறை விதிக்க இருக்கிறது.
- சோடியம் நைட்ரைட் ஆனது ஆக்சிஜனேற்ற மற்றும் ஒடுக்கும் காரணியாகவும் செயல்படுகிறது. இது வெள்ளை நிற படிகத் தூள்களால் ஆனது. இது மருந்து மற்றும் சாயத் தொழிற்சாலைகளிலும், உயவுப் பொருள்கள் மற்றும் கட்டுமான வேதிப் பொருள்கள் தயாரிப்புகளிலும் ரப்பர் விரிவாக்கும் தொழிற்சாலைகளிலும், இறைச்சித் தயாரிப்புக் கூடங்களிலும் மற்றும் ஜவுளித் தொழிற்சாலைகளிலும் பயன்படுகிறது.

- இந்தியாவில், சோடியம் நைட்ரைட்டை பஞ்சாப் வேதிப்பொருட்கள் மற்றும் பயிர்ப் பாதுகாப்பு தொழிற்சாலை (Punjab chemicals & Crop Protection Ltd), தேசிய உரத் தொழிற்சாலை (National Fertisers Ltd) மற்றும்ராஷ்டிரிய வேதிப்பொருட்கள் மற்றும் உரத் தொழிற்சாலைகள் நிறுவனம் (Rashtriya Chemicals & Fertilisers Limited) தயாரிக்கின்றன.

### மத்திய கொள்கைக்குழுவின் வர்த்தகத்தினை எளிமைப்படுத்தும் அறிக்கை

- தொழில் தொடங்குவதை எளிமையாக்குவது தொடர்பான அறிக்கையினை மத்திய கொள்கைக் குழு வெளியிட்டுள்ளது. நாடு முழுவதும் உள்ள 3500 நிறுவனங்களிடம் நடத்தப்பட்ட ஆய்வின் இறுதியாக இந்த அறிக்கை உருவாக்கப்பட்டுள்ளது.
- மத்திய கொள்கைக் குழுவும் , ஐ.டி.எப்.சி (IDFC) வங்கியும் இணைந்து நடத்திய இந்த ஆய்வானது , நாட்டில் நிகழும் வர்த்தகச் சூழல் , நிறுவன ஒழுங்குமுறைச் சட்டங்கள் மற்றும் முன்னேற்றச் சூழல்கள் குறித்து அறிந்து கொள்வதற்காக நடத்தப்பட்டதாகும்.

# அறிவியல் மற்றும் தொழில்நுட்பம்

### இராணுவ வீரர்களுக்கு ஹம்ராஸ் செயலி


- இந்திய இராணுவம், ஹம்ராஸ் எனப்படும் மொபைல் செயலியை உருவாக்கியுள்ளது. இதன் மூலம் ராணுவ வீரர்கள் , தங்கள் பணி நியமனம் மற்றும் பதவி உயர்வு போன்ற விவரங்களைத் தங்களது அறிதிறன் பேசி மூலமாக அறிந்துக்கொள்ள இயலும்.
- 'ஹம்ராஸ்' செயலி மூலம் வீரர்கள் தங்களது மாதச் சம்பளப் பற்றுச் சீட்டு, வருமான வரி தொடர்பான படிவம் 16 போன்றவற்றைக் கைபேசியில் பதிவிறக்கம் செய்து கொள்ள வசதியாக வடிவமைக்கப்பட்டுள்ளது.

### e-RaKAM இணைய சேவை

- விவசாயப் பொருட்களின் வர்த்தகத்தை மேம்படுத்தும் விதமாக , e-RaKAM என்ற இணைய சேவையை இந்திய அரசு அறிமுகம் செய்துள்ளது.
- அரசாங்கத்துக்குச் சொந்தமான MSTC எனும் ஏல நிறுவனமும், மத்திய தானியக்கிடங்கு நிறுவனமும் (Central Warehousing Corporation) இணைந்து இந்தச் சேவையை செயல்படுத்துகின்றன.
- இந்தத் திட்டமானது, இந்தியாவின் மிகச் சிறிய கிராமங்களின் விவசாயிகள் உள்ளிட்ட அனைவரையும் , உலக அளவிலான வேளாண்மைச் சந்தையுடன் இணைக்க மேற்கொள்ளப்படும் புதிய முயற்சி ஆகும். இணையதளம் மற்றும் e-RaKAM மையங்கள் மூலமாக இத்தகைய இணைப்பு சாத்தியம் ஆக்கப்படவுள்ளது .
- e-RaKAM டிஜிட்டல் முன்முயற்சி மூலமாக விவசாயிகள் , பொதுத்துறை நிறுவனங்கள் , பொது விநியோக நிறுவனங்கள் மற்றும் வேளாண் கொள்முதல் வியாபாரிகளை ஒரே தளத்தில் இணைப்பதன் மூலம் விவசாய உற்பத்திகளின் விற்பனை மற்றும் கொள்முதல் முறையினை எளிதாக்குகிறது.

### இந்தியாவில் புத்தாக்கம் செய்வோம் (Innovate In India - i3)

- “இந்தியாவில் புத்தாக்கம் செய்வோம்” என்று பெயரிடப்பட்ட தேசிய உயிரிமருந்தியல் இயக்கமானது, இந்தியாவில் தொழிலகங்கள் மற்றும் கல்விக் கழகங்களை உள்ளடக்கிய முதல் இயக்கமாகும்.




- இவ்வியக்கமானது, இந்தியாவில் உயிரிமருந்தியல் வளர்ச்சியினை மேம்படுத்தி ஊக்குவிக்கக்கூடிய ஒன்றாகும்.
- மத்திய அறிவியல் மற்றும் தொழில்நுட்ப அமைச்சகத்தினுள் உள்ள உயிரித்தொழில் நுட்பத்துறையின் கீழ் இயங்கும் பொதுத்துறையான உயிரித்தொழில் நுட்பத் தொழில் ஆராய்ச்சி உதவிக் குழுவினால் (BIRAC) இந்த இயக்கம் நடைமுறைப் படுத்தப்படுகின்றது. மேலும் இந்த இயக்கத்திற்கு உலகவங்கி பகுதியளவு நிதி உதவி அளிக்கிறது.

## நிசார்(NISAR) – இஸ்ரோ மற்றும் நாசாவின் கூட்டு முயற்சி

- NISAR என்பதன் பெயர் விரிவாக்கம்: NASA-ISRO Synthetic Aperture Radar / நாசா-இஸ்ரோ சிந்தெடிக் அபெர்ச்சர் ராடார்.
- இந்தியாவின் விண்வெளி ஆராய்ச்சி நிறுவனமான இஸ்ரோ (Indian Space Research Organisation - ISRO) மற்றும் அமெரிக்காவின் விண்வெளி ஆராய்ச்சி நிறுவனமான நாசா (National Aeronautics and Space Administration - NASA) ஆகியவை இணைந்து, நிசார் எனும் கூட்டு விண்வெளி ஆய்வுத் திட்டத்தினை 2021 ஆம் ஆண்டு செயல்படுத்த உள்ளன .
- நிசார் ராடார் அமைப்பு இரண்டு அலைக்கற்றைகளில் இயங்கக்கூடியது ஆகும் .
- இதில் L அலைக்கற்றையில் இயங்கும் ராடார் கருவியினை உருவாக்கும் பொறுப்பை நாசா நிறுவனம் ஏற்றுக்கொண்டுள்ளது. S அலைக்கற்றையில் இயங்கும் ராடார் கருவியினை இந்தியாவின் இஸ்ரோ நிறுவனம் உருவாக்குகின்றது .
- இந்த L மற்றும் S அலைக்கற்றை ராடார் கருவிகள் இரண்டும் , இஸ்ரோவின் விண்கலத்தில் ஒருங்கிணைக்கப்பட்டு GSLV செயற்கைக்கோள் ஏவு ஊர்தி மூலமாக விண்ணில் செலுத்தப்படவுள்ளது.

- 2021 ஆம் ஆண்டு விண்ணில் ஏவப்பட்ட பிறகு , கீழ்க்காணும் செயல்கள் திட்டமிடப்பட்டுள்ளன:
    - விண்வெளியில் இருக்கும் கருவிகளை அளவு திருத்துவது மற்றும் தரவுகளை ஒப்பிட்டு சரி பார்ப்பது.
    - அறிவியல் சார்ந்த திட்டங்களை உருவாக்குதல் மற்றும் முயன்றடைதல்
    - தரவு செயலாக்கம் மற்றும் பயன்பாடுகளை மேம்படுத்துதல்
    - ஆராய்ச்சி நிறுவனங்கள் மற்றும் கல்விக் கூடங்களில் அறிவியல் விழிப்புணர்வை ஏற்படுத்துதல் .
- சமாதான நோக்கங்களுக்காக விண்வெளியை பயன்படுத்தவும், ஆய்வு நடத்தவும் , இஸ்ரோ – நாசா இடையே 2008 ஆம் ஆண்டில் ஒப்பந்தம் கையெழுத்தானது . அந்த உடன்படிக்கையின் கீழ் செயல்படுத்தப்படும் நிசார் திட்டம் 2034 ஆம் ஆண்டு வரை செல்லுபடி ஆகும் .
- நிசார் விண்வெளி ஆராய்ச்சி திட்டத்தின் செயல்படுத்துதலுக்குப் பிறகு இந்தியாவும் அமெரிக்காவும் விண்வெளி ஆராய்ச்சி மற்றும் அறிவியல் துறையில் பல இணைந்த முயற்சிகளை மேற்கொள்ள வழிவகுக்கும்.

## தேசிய இணையவெளி ஒருங்கிணைப்பு மையம் (National Cyber Coordination Centre - NCCC)

- தேசிய இணையவெளி ஒருங்கிணைப்பு மையத்தின் முதல் கட்ட இயக்கம் செயல்படுத்தப்பட்டு உள்ளது. நாட்டின் இணைய வெளி பாதுகாப்பை உறுதி செய்வதும் , அச்சுறுத்தல்களைக் கண்டறிந்து சரிசெய்வதும் இதன் முக்கிய நோக்கம் ஆகும் .
- இதற்காக நாட்டின் இணைய தள போக்குவரத்துகளை இந்த மையம் கண்காணிக்கிறது. அச்சுறுத்தல்களைக் கண்டறிந்துச் சரியான நேரத்தில் நடவடிக்கை எடுக்கும்படி இணைய சேவை வழங்கும் நிறுவனங்களுக்கும், பிற நிறுவனங்களுக்கும் தகவல் அளிக்கிறது.
- மேலும் மக்களின் மென்பொருள் சாதனங்களில் பாட்நெட் போன்ற தீய மென்பொருள்களைக் கண்டறிந்து , அவற்றைச் சரி செய்யும் வசதியுடன் கூடிய மையம் (Botnet and Malware Cleaning Center) ஒன்றையும் தொடங்கியுள்ளது.
- செயல்படுத்தும் நிறுவனம்: CERT-In (Computer Emergency Response Team - CERT-In). CERT-In என்பது கணினி மற்றும் இணையதளம் தொடர்பான அவசர நிலைகளைக் கையாள்வதற்காகத் தொலைதொடர்பு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகத்தின் (Ministry of Electronics and Information Technology - MeiTY) கீழ் அமைக்கப்பட்ட குழு ஆகும். இந்தக் குழுவின் அதிகாரங்களும் உரிமைகளும், 2000 ஆவது ஆண்டின் தகவல் தொழில்நுட்பச் சட்டத்தின் (Information Technology Act, 2000) '69B' பிரிவில் இருந்து பெறப்படுகிறது.

## 'ஷவுர்யா' கடல் ரோந்துக் கப்பல்

- இந்திய கடலோரப் பாதுகாப்புப் படையில் 'ஷவுர்யா' என்ற கடல் ரோந்துக் கப்பல் (OPV) சேர்க்கப்பட்டுள்ளது. 105 மீட்டர் நீளம் உள்ள கடல் ரோந்துக் கப்பல்கள் வரிசையில் 'ஷவுர்யா' ஆறாவது கப்பல் ஆகும். கோவாவில் நடந்த விழாவின் போது இந்தக் கப்பல் கடலோரப் பாதுகாப்புப் படையில் முறைப்படி இணைக்கப்பட்டது.
- 9100 கிலோ வாட் சக்தி கொண்ட டீசல் என்ஜின் பொருத்தப்பட்டிருக்கும் இக்கப்பலானது 2350 டன் அளவிலான எடையினை இழுக்கவல்லது. முழுவதும் உள்நாட்டிலேயே தயாராகும் இக்கப்பல், கோவா கப்பல்கட்டுந்துறையில் கட்டப்படுகிறது. அதிநவீன உணரிகள், இயந்திரங்கள் மற்றும் தொலைத்தொடர்பு சாதனங்களும் இதில் அமையவுள்ளன.
- ஹெலிகாப்டர், அதிவேக இயந்திரப் படகுகள் போன்றவற்றை சுமந்து செல்லும் வகையில் இக்கப்பல் வடிவமைக்கப்பட்டுள்ளது. கடலில் எண்ணெய் கசிவது போன்ற சுற்றுப்புறச் சூழல் மாசு நிகழும்பொழுது அதற்கேற்ப தகுந்த நடவடிக்கைகள் எடுக்கும் உபகரணங்களும் இந்தக் கப்பலில் பொருத்தப்படும்.

- 'ஷவுர்யா' கப்பல் சென்னையில் பணியமர்த்தப்படும். கடலோரக் காவல்படை தளபதியின் (கிழக்கு) தலைமையில் இயங்கவிருக்கும் இக்கப்பலானது இந்தியாவின் பிரத்யேகப் பொருளாதாரப் பண்டலங்களைக் கண்காணிப்பதில் பெருமளவு பயன்படுத்தப்படும். இது இந்தியாவில் கடற்படை பலத்தை கூட்டும் விதமாக அமையும்.

### NSDC - Google India - செல்போன் செயலி மேம்பாட்டுத் திட்டம்

- தேதிய திறன் மேம்பாட்டு கழகம் மற்றும் கூகுள் இந்தியா நிறுவனம் இணைந்து செயலி உருவாக்குபவர்களுக்கு பயிற்சியளிக்கிறது. இதில் ஆண்டிராய்டு மற்றும் இணையதள சேவைகள் கருத்தில் கொள்ளப்பட்டுள்ளன. இது நாட்டின் செயலி செயல்பாட்டினை மேம்படுத்த உருவான திட்டம் ஆகும்.
- இம்முயற்சியின் கீழ் NSDC, சில பயிற்றுத் திட்டங்களை அறிமுகம் செய்துள்ளது. இவை ஆண்ட்ராய்டு தளத்தின் மூலம் இயங்கும் ஸ்மார்ட் போன்களில் செயலிகளை மேம்படுத்துவது தொடர்பாக பயிற்றுவிக்கும்.
- NSDC ஓர் பொது-தனியார் பங்கீட்டு நிறுவனமாகும். இது திறன் மேம்பாட்டு மற்றும் தொழில் முனைவோர் அமைச்சகத்தின் கீழ் இயங்குவது.
- இதன் நோக்கம், நாட்டில் பயிற்சியளிப்பின் திறனை மேம்படுத்துவதாகும். தொழிற்கல்வியில் பயிற்சிக்கு நிதி ஒதுக்கி, திறன் மேம்பட்ட சந்தைச் சூழலை உருவாக்குகிறது. 2022-ற்குள் 150 மில்லியன் மக்களுக்கு பயிற்சி அளித்தல் அத்தியாவசியமான ஒன்றாகும்.

### மை பாஸ்ட் டேக் (MyFASTag ) மற்றும் பாஸ்ட் டேக் பார்ட்னர் ( FASTag Partner ) செயலிகள்

- இந்தியாவின் தேசிய நெடுஞ்சாலை ஆணையம் MyFASTag மற்றும் FASTag பார்ட்னர் எனும் இரண்டு மொபைல் செயலிகளை அறிமுகப்படுத்தியுள்ளது. இந்த செயலிகளைப் பயன்படுத்தி மின்னணு முறையில் சுங்கச்சாவடி கட்டணம் செலுத்த முடியும்.
- அக்டோபர் 1, 2017 முதல் நாட்டிலுள்ள மொத்த 371 சுங்கசாவடிகளின், அனைத்து வழித்தடங்களிலும் பாஸ்ட் டேக் கட்டண முறை செயல்படுத்தப்படும். பாஸ்ட் டேக் முறையில் மட்டுமே கட்டணம் செலுத்தும் விதமாக பிரத்யேகமாக ஒரு பாதையும் ஒதுக்கப்படும்.

*மின்னணு சுங்கச்சாவடி கட்டணம்*

- சுங்கசாவடி ஊழியர்கள் இல்லாமல் நெடுஞ்சாலை சுங்கக் கட்டணத்தை மின்னணு முறையில் வசூலிக்கும் முறை ETC (Electronic Toll Collection ) எனப்படும்.
- ETC முறையில் வாகனத்திற்கும், சுங்கக் கட்டணம் வசூலிக்கும் நிறுவனத்திற்கும் இடையில் ஒரு மின்னணு முறையில் பண பரிவர்த்தனை நிகழும்.

*மை பாஸ்ட் டேக்*


- பாஸ்ட் டேக் பட்டை பொருத்தப்பட்டிருக்கும் வாகனங்கள் சுங்கச்சாவடிகளை கடக்கும் பொழுது , பட்டையோடு பதிவு செய்யப்பட்டிருக்கும் வங்கிக் கணக்கிலிருந்து பணம் பிடித்தம் செய்துக் கொள்ளப்படும். கையில் பணம் செலுத்தி கடவுச்சீட்டு பெற அவசியம் இருக்காது.

*பாஸ்ட் டேக் பார்ட்நர்*


- பாஸ்ட் டேக் பார்ட்னர் என்பது பாஸ்ட் டாக் பட்டைகளை விற்பனை செய்யும் வங்கிகள் மற்றும் முகவர்களுக்கான செயலி ஆகும் . சுமார் பத்து வங்கிகள் மற்றும் கைபேசி பண உறை (Mobile Wallet) முகவர்கள் பாஸ்ட் டேக் பட்டைகளை விற்பனை செய்கின்றனர்.

**காலா அசார் (அ) டம் டம் காய்ச்சல் (அ) கருங்காய்ச்சல்**

- காலா அசார் நோய் உலகின் இரண்டாவது மிகப்பெரிய ஒட்டுண்ணிக் கொல்லி ஆகும் .முதலாவது பெரிய ஒட்டுண்ணிக்கொல்லி மலேரியா ஆகும்.
- காலா அசார் என்றழைக்கப்படும் 'விஸ்செரல் லீ ஷ்மேனியாசிஸ்' (Visceral leishmaniasis- VL) ஆனது லீஷ்மேனியாசிஸின் (leishmaniasis) மிகவும் கொடிய வடிவம் ஆகும்.
- லீஷ்மேனியா புரோட்டாசோவா ஒட்டுண்ணிகளின் காரணமாக லீஷ்மேனியாசிஸ் ஏற்படுகிறது.




- பாதிக்கப்பட்ட பெண் மணல் கொசுக்கள் (Sandflies) மூலமாக மனிதர்களுக்கு இந்நோய் பரவுகிறது
- இது மனிதர்களுக்கு மட்டுமே பாதிப்பினை ஏற்படுத்துகிறது , பிற விலங்கு இனங்களை பாதிப்பதில்லை
- இதன் அறிகுறிகள் : தொடர்ந்து காய்ச்சல், எடைகுறைவு, கல்லீரல் மற்றும் மண்ணீரல் வீக்கம், மற்றும் ரத்த சோகை
- இந்த ஒட்டுண்ணிகள் மனித உள்ளுறுப்புகளுக்குள் ஊடுருவி கல்லீரல் மற்றும் எலும்பு மஜ்ஜையினை பாதிப்படையச் செய்கிறது. இதற்கு தகுந்த சிகிச்சை அளிக்காவிடில் மரணம் ஏற்படும்.
- ஆர்.கே.39 போன்ற ரத்தப் பரிசோதனைகள் மூலம் ஒட்டுண்ணிகள் மனிதனின் உடலில் இருக்கிறதா என அறிந்துக்கொள்ளலாம்.




- பீகார். ஜார்க்கண்ட், உத்திரப்பிரேசம் மற்றும் மேற்கு வங்கம் ஆகிய இந்தியாவின் கிழக்கு மாநிலங்களில் இந்நோய் காணப்படுகிறது.

## உலகின் மிகச்சிறிய அறுவை சிகிச்சை ரோபோட்

- உலகின் மிகச்சிறிய அறுவை சிகிச்சை ரோபோட்டினை இங்கிலாந்தைச் சேர்ந்த விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர். கைப்பேசி மற்றும் விண்வெளி நிறுவனங்களில் பயன்படுத்தப்படும் விலை குறைவான தொழில் நுட்பங்களைக் கொண்டு இந்த ரோபோட் வடிவமைக்கப்பட்டுள்ளது .
- வெர்ஸியஸ் என்று பெயரிடப்பட்டு இருக்கும் இந்த ரோபோட் மனிதனின் கைகளைப்போல் செயல்படவும் , பல்வேறு அறுவை சிகிச்சை பணிகளை மேற்கொள்ளும் வகையிலும் தயாரிக்கப்பட்டுள்ளது.
- குடலிறக்கம் , பெருங்குடல் அறுவை சிகிச்சை , புரோஸ்டேட் , கண் , காது , தொண்டை தொடர்பான அறுவை சிகிச்சைகளைப் பெரிய அளவு உடல் காயங்கள் ஏற்படாமல் , சிறிய துளையிட்டு அதன் வழியாக வெர்ஸியஸ் ரோபோட்டினை உள்செலுத்தி அறுவை சிகிச்சை செய்ய முடியும் . இதனால் வலி குறைவதோடு மட்டும் அல்லாமல் , அறுவை சிகிச்சை பெறுபவர்கள் விரைவில் இயல்பு வாழ்கைக்குத் திரும்ப முடியும்.


## வர்ஷாதாரி திட்டம் - மேக விதைப்பு திட்டம் - கர்நாடக அரசு

- ஆகாய விமானங்கள் இரசாயனங்களைத் தூவி மழையைத் தருவிக்க மேகங்களை தூண்டி விடும் திட்டம் ஒன்றை வர்ஷாதாரி (Project Varshadhari) என்ற பெயரில் கர்நாடக அரசு பெங்களூருவில் தொடங்கி இருக்கிறது.
- இது பெங்களூரு, கடக் மற்றும் யாதகிரி மாவட்டங்களில் ஆரம்பிக்கப்படும் ஒரு பரிசோதனை முயற்சியாகும்.
- இந்த மேக விதைப்பு முயற்சி 10 மைக்ரானுக்கும் குறைந்த அளவில் உள்ள சிறிய நீல்மூலக்கூறுகளை திரவமாக்கி 50 மைக்ரானுக்கான அமைப்பில் நீர்த்திவலைகளாக மாற்ற முனைகிறது.

- 2003-ல் வருணாத் திட்டம் என்ற பெயரில் அப்போதைய நீர்வளத் துறை அமைச்சகத்தால் மேக விதைப்புத் திட்டம் துவங்கப்பட்டது. இதன் பலன்கள் விவாதத்திற்குரியது என்றாலும், இந்த முறை மேக அறிவியலாளர்களும், வானிலை மையக் கட்டுப்பாட்டுக்குழுவும் சிறந்த பலன்களை எதிர்பார்க்கின்றனர்.

*மேக விதைப்பு* (Cloud seeding)

- மேக விதைப்பு என்பது தட்பவெப்பநிலையை மாற்றும் ஒரு முறை.
- இது மேகத்திலிருந்து விழும் மழையின் வடிவத்தையும், அளவையும் மாற்றும் முறை. இது காற்றில் மேக உருவாக்கலுக்கான காரணமான பனி மூலக்கூறுகளை பிரிக்கும் ஒரு முயற்சியாகும். இதன் மூலம் மேகத்தின் உள்ளே நடக்கும் நுண்கட்டமைப்பு செயல்முறைகளில் மாற்றம் கொண்டு வர முடியும். இதன் வழக்கமான நோக்கம் மழைப்பொழிவின் அல்லது பனிப்பொழிவின் அளவை அதிகரிப்பதாகும்.




- இத்திட்டத்தில் பெரும்பாலும் உபயோகப்படுத்தப்படும் இரசாயனங்கள் சில்வர் அயோடைட், பொட்டாசியம் அயோடைட் மற்றும் உலர் பனி எனப்படும் திடவடிவிலான கார்பன்டைஆக்ஸைடு ஆகும். வாயுவாக பிரியும் திரவ ப்ரோப்பேனும் இதற்காக பயன்படுத்தப்படுகின்றன. இவை சில்வர் அயோடைடைக் காட்டிலும் அதிக வெப்பநிலையில் பனி படிகங்களை உருவாக்கும்.

## செயற்கை நுண்ணறிவு நுட்பம் திட்டக் குழு

- பொருளாதார சீர்திருத்தங்களில் செயற்கை நுண்ணறிவு நுட்பத்தை (Artificial Intelligence – AI ) புகுத்துவது தொடர்பாக ஆலோசனை வழங்குவதற்கு 18 பேரடங்கிய குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது.
- வர்த்தகம் மற்றும் தொழில்துறை அமைச்சகம் இதை அமைத்துள்ளது
- சென்னையில் உள்ள இந்திய தொழில்நுட்பக் கழகத்தின் (IIT Madras) பேராசிரியர் காமகோடி இக்குழுவின் தலைவராக இருப்பார்.

- இக்குழுவானது தனது அறிக்கையை அரசு மற்றும் தொழிற்துறை மற்றும் ஆராய்ச்சி நிறுவனங்களுக்கு அளிக்கும்.

### மைக்ரோசாப்ட் நிறுவனத்தின் பிரைன்வேவ் தொழில்நுட்பம்

- மைக்ரோசாப்ட் நிறுவனம் ‘பிரைன்வேவ்’ (Brainwave) என்ற நிகழ்நேர செயற்கை நுண்ணறிவு அமைப்பை அறிமுகம் செய்துள்ளது. இந்த நுண்ணறிவு தொழில்நுட்பம் தரவுகள் பெறப்பட்டதும் , செயலாக்கங்களை விரைவாக செய்து முடிக்கின்றது . மிகக் குறைவான தாமதத்துடன் (ultra-low latency) செயல்களை நிறைவு செய்கின்றது.
- நிகழ் நேர செயற்கை நுண்ணறிவு அமைப்பு என்பது நிகழ்நேர தரவுப் பெயர்ச்சி , தேடல் வினவல்கள் மற்றும் பயனர்களுடனான உடனடித் தொடர்புக்கு பெரிதும் உதவுவதால் சமீப காலத்தில் முக்கியத்துவம் பெற்று வருகிறது.

*செயற்கை நுண்ணறிவு*

- செயற்கை நுண்ணறிவு என்பது காட்சி உணர்தல் , பேச்சுக் கண்டறிதல் , முடிவெடுக்கும் திறன் , மொழிகளுக்கு இடையே மொழிபெயர்ப்பது போன்ற மனித நுண்ணறிவு தேவைப்படும் பணிகளை கணினிகள் செய்யக்கூடிய வகையில் அமைப்புகள் மற்றும் கோட்பாடுகளை உருவாக்குவது ஆகும்.

### பிரகதி (Pro-Active Governance And Timely Implementation - PRAGATI)

- இது தகவல் மற்றும் தொழில்நுட்பம் அடிப்படையிலான , பல் முகட்டு அரசு ஆளுமை செயல்முறைத் திட்டம் ஆகும்.
- பிரகதி என்பது பொதுமக்கள் குறைகேட்பு மற்றும் அரசின் பல்வேறு திட்டங்களை ஒருங்கிணைந்த முறையில் ஒரே தளத்தில் கண்காணிப்பதற்கான முன்முயற்சி ஆகும்.




- இந்த தளம் மூலமாக மத்திய அரசு மற்றும் மாநில அரசுகளின் திட்டங்கள் ஒருங்கிணைந்த முறையில் கண்காணிக்கப்படும் .
- இத்திட்டத்தின் மூன்று முக்கியக் கொள்கைகள் ,

- பொதுமக்கள் குறைகேட்பு
- திட்டங்கள் செயலாக்கம் மற்றும் கண்காணிப்பு
- தகவல் தொழில்நுட்பம் மூலமாக குறைகேட்பு மற்றும் கண்காணிப்பை திறம்பட மேற்கொள்ளுதல்

- இது மூன்று அடுக்கு முறையிலான அமைப்பு ஆகும் – பிரதமர் அலுவலகம் , மத்திய அரசின் செயலாளர்கள் , மாநிலங்களின் செயலாளர்கள் .
- திட்டம் துவங்கப்பட்ட நாள் : 25 மார்ச் , 2015.

# சுற்றுச்சூழல்

## அகில இந்தியப் புலிகள் கணக்கெடுப்பு: அடுத்தாண்டு மார்ச் மாதம் வெளியிடப்படுகிறது

- அகில இந்திய அளவில் கடந்த நான்கு ஆண்டுகளாக எடுக்கப்பட்டு வந்த புலிகள் கணக்கெடுப்பு அடுத்த ஆண்டு மார்ச் மாதம் வெளியிடப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.
- தமிழகத்துக்கு 4 ஆவது இடம்: 2014 ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி, புலிகளின் எண்ணிக்கையில் தமிழகத்துக்கு நான்காவது இடம் கிடைத்தது. தமிழகத்தில் மொத்தம் 229 புலிகள் உள்ளதாக தெரிய வந்தது.
- தமிழகத்தில் களக்காடு - முண்டந்துறை, ஆனைமலை, முதுமலை, சத்தியமங்கலம் புலிகள் பாதுகாப்பு சரணாலயங்களில் கணக்கெடுப்பு நடத்தப்பட்டது. தமிழக வனத்துறையின் கணக்கெடுப்புப்படி சத்தியமங்கலத்தில் 64 புலிகள் இருப்பதாகக் கூறப்படுகிறது. மேலும் முதுமலையில் 43-க்கும் அதிகமான புலிகள் இருக்கலாம் எனக் கூறப்படுகிறது.
- உயிரிழப்புகள்: தமிழகத்தில் 2014 முதல் 2016 ஆம் ஆண்டு வரை மொத்தம் 24 புலிகள் உயிரிழந்துள்ளதாக தேசியப் புலிகள் பாதுகாப்பு நிறுவனம் தெரிவித்துள்ளது.
- 2014 ஆம் ஆண்டில் இந்தியாவிலேயே தமிழகத்தில் தான் அதிக அளவில் புலிகள் இறந்துள்ளன.
- தமிழகத்தில் மட்டும் 15 புலிகள் பல்வேறு காரணங்களால் உயிரிழந்துள்ளன. அதேநேரத்தில், கடந்தாண்டில் (2015) தமிழகத்தில் 6 புலிகள் மட்டுமே உயிரிழந்துள்ளன. 2016 இல் மூன்று புலிகள் உயிரிழந்துள்ளன.

## டெல்லியில் பிளாஸ்டிக் பைகளுக்குத் தடை

- 50 மைக்ரான் அளவுக்குக் குறைவான நெகிழிப் பைகளைப் பயன்படுத்துவதற்கு டெல்லி முழுவதும் தடை விதிக்கப்பட்டுள்ளது. இந்தத் தடை உத்தரவினைத் தேசியப் பசுமைத் தீர்ப்பாயம் (National Green Tribunal - NGT) பிறப்பித்து இருக்கிறது.
- தடை செய்யப்பட்ட நெகிழிப் பைகளை வைத்து இருப்போரிடம் 5000 ருபாய் வரை அபராதம் வசூலிக்கப்படும் என்று தேசியப் பசுமைத் தீர்ப்பாயத்தின் தலைவர் சுவதந்தர் குமார் தலைமையிலான அமர்வு தெரிவித்துள்ளது .
- மேலும் பொது இடங்களில் கழிவுகளைக் கொட்டும் காய்கறி மற்றும் மாமிச வியாபாரிகளிடம் 10,000 ருபாய் வரை அபராதம் வசூலிக்கப்படும் என்று இந்த உத்தரவில் எச்சரிக்கப்பட்டுள்ளது.

### *தேசியப் பசுமைத் தீர்ப்பாயம்*

- தேசியப் பசுமைத் தீர்ப்பாயம் 18-10-2010 அன்று, தேசியப் பசுமைத் தீர்ப்பாயச்சட்டம் 2010 இன் கீழ் நிறுவப்பட்டது.
- சுற்றுசூழல் பாதுகாப்பு குறித்த வழக்குகளைத் தெளிவாக விசாரித்து , விரைந்து முடிப்பதற்காக இந்தத் தீர்ப்பாயம் உருவாக்கப்பட்டது.
- வனங்கள் மற்றும் இயற்கை வளங்களின் பாதுகாப்பினைச் சட்டப்படி உறுதி செய்வதும்; அத்தகைய வளங்களை முன்னேற்றப் பணிகளுக்காக உபயோகிக்கும் பொழுது இழப்பைச்

சந்திப்பவர்களுக்குத் தகுந்த இழப்பீடு கிடைக்க வழிவகைச் செய்வதும் இந்தத் தீர்பாயத்தின் முக்கியப் பணிகள் ஆகும்.

- இந்தத் தீர்பாயத்தின் முதன்மை அமர்வாக புதுதில்லி இருக்கிறது. இதன் கிளை அமர்வுகளாக போபால் , புனே , கொல்கத்தா மற்றும் சென்னை ஆகியவை விளங்குகிறது.

## யானைகளைக் காப்பாற்ற 'கஜ யாத்திரை' பிரச்சாரம்

- உலக யானை தினம் - ஆகஸ்ட் 12
- மத்திய சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை அமைச்சகம், உலக யானைகள் தினத்தன்று யானைகளைப் பாதுகாக்க 'கஜ யாத்திரை' (Gaj Yatra) என்ற பிரச்சாரத்தைத் துவங்கியுள்ளது.
- இந்த 'கஜ யாத்திரை' பேரணியின் பொழுது யானைகள் குறித்த கலை மற்றும் கைவினை வேலைப்பாடுகள் உருவாக்கப்படும்.
- கலைஞர்கள் மற்றும் கைவினைஞர்களைக் கொண்டு இயற்கை வடிவளவில் இந்த கைவினை வேலைப்பாடுகள் உருவாக்கப்படும்.
- காட்டு யானைகள் வசிக்கும் 12 மாநிலங்கள் வழியாக இந்த சாலைக் கண்காட்சி நடத்தப்படும்.
- இந்த பேரணிக்காகப் பிரத்யேகமாக உருவாக்கப்பட்ட வாகனங்களில் பிரச்சாரக்காரர்கள் விழிப்புணர்வு ஏற்படுத்தியபடி பயணிப்பார்கள்.
- பிரச்சாரத்தின் சின்னம், "காஜூ" என்கிற யானை பொம்மை ஆகும். இந்தச் சின்னத்தினை மத்திய சுற்றுக்சூழல் அமைச்சகம் கடந்த 2012 ஆம் ஆண்டு வெளியிட்டது.
- 2017 ஆம் ஆண்டிற்கான அகில இந்திய யானைகள் கணக்கெடுப்பினை மத்திய சுற்றுக்சூழல் அமைச்சகம் வெளியிட்டது. இந்தியா-வங்காளதேச நாடுகளுக்கு இடையிலான எல்லையைக் கடந்த யானைகள் பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்து இந்த அறிக்கை விவரிக்கிறது.
- இந்தியா-வங்காளதேசம் இடையே யானைகள் கடந்து செல்ல 'Elephant Corridors' எனப்படும் 'யானைகள் வழித்தடங்கள்'' உள்ளன. இதைப்பற்றிய ஆவணம் ஒன்று வெளியிடப்பட்டது.
  - ஆவணத்தின் தலைப்பு : கடந்து செல்லும் உரிமை (Right of Passage).
- பாராளுமன்றத்தில் எழுந்த கேள்விகள் மற்றும் பதில்கள் அடிப்படையில் யானைகள் பாதுகாப்புக்கு எடுக்கப்பட்ட முயற்சிகள் குறித்த தொகுப்பு ஒன்று வெளியிடப்பட்டது.
  - தொகுப்பின் பெயர் : 'Glimpses of Initiatives Taken for Elephant Conservation in India (2012-2017)
  - வெளியிட்டோர்:
    - சுற்றுச்சூழல் தகவல் அமைப்பு மையம் (ENVIS Centre)
    - இயற்கைக்கான உலகளாவிய நிதியம் - இந்தியா (WWF-India)
    - சுற்றுச்சூழல் அமைச்சகத்தின் யானைகள் திட்டப் பிரிவு – (Project Elephant Division, MoEFCC)

## தேசிய யானைகள் கணக்கெடுப்பு: கர்நாடகம் முதலிடம்

- தேசிய அளவில் எடுக்கப்பட்ட யானைகள் கணக்கெடுப்பின்படி 6,049 யானைகளுடன் கர்நாடக மாநிலம் முதல் இடத்தில் உள்ளது.
- 2,700 யானைகளுடன் தமிழகம் 4 - ஆவது இடத்தை பிடித்துள்ளது. தேசிய அளவிலான யானைகள் கணக்கெடுப்பு குறித்த விவரம் 2012 -ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது. அதன் பின்பு, கணக்கெடுப்புகள் நடத்தப்பட்டாலும், யானைகளின் எண்ணிக்கை குறித்த விவரங்கள் வெளியிடப்படாமல் இருந்து வந்தன. தந்தங்களுக்காக யானைகள் வேட்டையாடப்படுவதை

தடுக்கவே யானைகளின் எண்ணிக்கை குறித்த விவரங்களை மத்திய அரசு வெளியிடாமல் இருந்து வந்தது.

- தற்போது நாடு முழுவதும் அந்தந்த மாநிலங்களில் உள்ள யானைகளின் எண்ணிக்கை விவரத்தை, மத்திய சுற்றுச்சூழல் அமைச்சகம் வெளியிட்டுள்ளது.
- கடந்த 2012 -ஆம் ஆண்டு இறுதியாக வெளியிடப்பட்ட கணக்கெடுப்பில், இந்தியாவில் 29, 391 முதல் 30,711 யானைகள் இருப்பதாக தெரிவித்திருந்தது. தற்போது வெளியிடப்பட்ட கணக்கெடுப்பில் இந்தியக் காடுகளில் மொத்தம் 27,312 யானைகள் இருப்பதாக தெரிவித்துள்ளது.
- ஒட்டுமொத்தமாக, 5 ஆண்டுகளில் யானைகளின் எண்ணிக்கை குறைந்துள்ளது. ஆனால், நாட்டின் இதர பகுதிகளோடு ஒப்பிடுகையில், தென் இந்தியாவில் அதிக அளவு யானைகள் காணப்படுகின்றன. இங்கு மொத்தம் 11,960 யானைகள் காடுகளில் வசிப்பதாக கணக்கெடுப்பில் தெரிய வந்துள்ளது. இதற்கு அடுத்தப்படியாக வடகிழக்கு மாநிலங்களில் மொத்தம் 10,139 யானைகள் இருப்பதாக அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.
- தேசிய அளவில் அதிகபட்சமாக கர்நாடகத்தில் 6,049 யானைகளும், அடுத்ததாக, கேரளத்தில் 3, 054 மற்றும் தமிழகத்தில் 2,761 யானைகளும் உள்ளன. இதில், தமிழகத்தில் யானைகளின் எண்ணிக்கை வெகுவாக குறைந்துள்ளது. 2012 -ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி, தமிழகத்தில் 3, 500 யானைகள் இருந்தன. தேசிய அளவில் யானைகளின் எண்ணிக்கையில் கர்நாடகத்துக்கு அடுத்து அஸ்ஸாமில் 5,719 யானைகள் உள்ளன.



*யானைகளின் எண்ணிக்கை குறையக் காரணம்*

- யானைகளின் வழித்தடங்களை ஆக்கிரமிக்க தொடங்கியதன் காரணமாகவே தமிழகத்தில் கடந்த 5 ஆண்டுகளில் யானைகளின் எண்ணிக்கை வெகுவாக குறைந்து வருகிறது . எவையெல்லாம் யானைகளின் வழித்தடம் என கண்டறியப்பட்டுள்ளதோ, அவை குறித்த விவரங்கள் 25 ஆண்டுகளுக்கு முன்பே அரசுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.
- நகரமயமாக்கலுக்கு பின்னர், காட்டையொட்டி உள்ள பகுதிகள் வருவாய் நிலங்களாகப் பிரிக்கப்பட்டு அவை விற்கப்படுகின்றன. காட்டை ஒட்டியுள்ள பகுதிகளில் தனியார் தங்கும் விடுதிகள் அதிகமாகிவிட்டதால், யானைகளின் வழித்தடம் மறைக்கப்படுகிறது. யானைகள் தங்கும் இடத்தை மாற்றிக் கொண்டே இருக்கும். காட்டில் அவற்றுக்குத் தேவையான நீர் ஆதாரங்கள், உணவுகள் போன்றவை இல்லாததால், மனிதர்கள் வசிக்கும் இடங்களை நோக்கி அவை நகர்கின்றன.
- மேலும், யானைகள் மனிதர்களைத் தாக்குவதற்கு, அவற்றுக்கு ஏற்பட்டுள்ள மன உளைச்சல், மனிதர்களின் ஆக்கிரமிப்பு, இடையூறு போன்றவைதான் முக்கியக் காரணங்கள் என சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் கருதுகின்றனர்.

| மாநிலம் | யானைகள் எண்ணிக்கை |
|---|---|
| கர்நாடகம் | 6049 |
| அஸ்ஸாம் | 5719 |
| கேரளம் | 3054 |
| தமிழகம் | 2761 |
| ஒடிஸா | 1976 |
| உத்தரகண்ட் | 1839 |
| மேகாலயா | 1754 |
| அருணாசல பிரதேசம் | 1614 |
| மேற்கு வங்கம் | 682 |
| ஜார்க்கண்ட் | 679 |

### வட கோயல் நீர்த்தேக்கத் திட்டம்

- ஜார்க்கண்ட் மற்றும் பீஹாரில் வட கொயல் நீர்த்தேக்க திட்டம் முடிக்கப்படுவதற்கான ஒப்புதலை அமைச்சரை வழிங்கியுள்ளது.
- பீஹார் மாநிலத்தின் கயா மற்றும் ஔரங்கபாத் மாவட்டங்கள் , ஜார்க்கண்ட் மாநிலத்தின் பாலமு மற்றம் கர்வா (Palamu & Garhwa ) போன்ற பின்தங்கிய மற்றும் வறட்சி மாவட்டங்களில் பாசன நீர் வசதியை ஏற்படுத்துவதே இந்த திட்டத்தின் நோக்கமாகும்.
- ஜார்கண்ட் மாநிலத்தின் ராஞ்சி பீடபூமியில் வட கொயல் நதி உருவாகிறது.




- சோனா ஆற்றின் கிளை நதியான இது பீஹாரில் கங்கை நதியில் இணைகிறது.
- ஜார்கண்ட் மாநிலத்தில் " மண்டல் அணை"என்ற பெயரால் அணை கட்டுவதையே இத்திட்டத்தின் நெடு நோக்கமாக கொண்டுள்ளது.
- கொயல் மற்றும் அவற்றின் கிளை ஆறுகள் பெத்லா தேசியப் பூங்காவின் வடபகுதியில் பாய்கின்றன.
- இந்த நீர்த்தேக்க திட்டமனது பலாமா புலிகள் காப்பகத்திலுள்ள கிராமங்களை வெள்ள அபாயத்திலிருந்து பாதுகாக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.
- நீரில் மூழ்குதலைக் குறைப்பதன் மூலம் மண்டல் அணையின் சேமிப்புத் திறனை கட்டுப்படுத்தி பெட்லா தேசியப் பூங்கா மற்றும் பலாமா புலிகள் காப்பகம் ஆகியவற்றை பாதுகாக்கும்படி இந்திய அரசு கூறியுள்ளது

## இந்தியா உலகலாவிய சுற்றுச்சூழல் வசதியை வழங்குவதற்கான ஒப்பந்தத்தில் உலகவங்கியுடன் கையெழுத்திட்டது

- உலகலாவிய சுற்றுச்சூழல் வசதிக்காக "சுற்றுசூழல் சேவை மேம்பாட்டு திட்டம்"என்ற திட்டத்தை இந்தியா உலக வங்கியுடன் 24,64 மில்லியன் ஐக்கிய அமெரிக்க டாலர் செலவில் செயல் படுத்துவதற்கான ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது.
- இத்திட்டத்திற்கு தேவையான 24,64 மில்லியன் ஐக்கிய அமெரிக்க டாலர் நிதியை உலக வங்கியானது அதன் பொறுப்பான்மையிலுள்ள உலகலாவிய சுற்றுசூழல் நிதியிலிருந்து வழங்குகிறது.
- இத்திட்டத்திற்கான கால அளவு 5 ஆண்டுகள் ஆகும்.
- பசுமை இந்தியா தேசிய திட்டத்தின் கீழுள்ள இந்திய வன ஆராய்ச்சி மற்றும் கல்வி குழுவினால் சத்திஸ்கர் மற்றும் மத்திய பிரதேஷ் மாநிலங்களில் இத்திட்டம் செயல்படுத்தப்படும் என சுற்றுச்சூழல், வன மற்றும் காலநிலை மாற்றம் அமைச்சகமானது தெரிவித்துள்ளது.

- துறையின் நிறுவன திறனை வலுப்படுத்துதல், வன சுற்றுச்சூழல் சேவையை அதிகரிக்க சமூக நிறுவனங்கள் அமைத்தல், மற்றும் மத்திய இந்திய மலைப்பகுதிகளின் வன சார்புடைய சமூகங்களின் வாழ்வாதாரங்களை உயர்த்துதல் ஆகியவை இத்திட்டத்தின் நோக்கமாகும்.

### பசுமையான தீபாவளி , ஆரோக்கியமான தீபாவளி

- மத்திய சுற்றுசூழல் அமைச்சகம் , "பசுமையான தீபாவளி , ஆரோக்கியமான தீபாவளி " என்ற பிரச்சாரத்தை துவங்கியுள்ளது. சுற்றுச்சூழலுக்கு ஆபத்து விளைவிக்கும் பட்டாசுகளை வெடிக்காமல் சுற்றுச்சூழல் மாசுபடுதலை எவ்வாறு கட்டுப்படுத்த முடியும் என்று குழந்தைகளிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தும் நோக்கத்துடன் இந்த பிரச்சாரம் தொடங்கப்பட்டுள்ளது.
- பிரச்சாரத்தின் ஒரு பகுதியாக, சுற்றுச்சூழல் அமைச்சகம் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொள்வதோடு மக்களிடம் விழிப்புணர்வை ஏற்படுத்தி, காற்று மாசுபாட்டை குறைப்பதற்கு ஊக்குவிக்கின்றது.
- கடந்த சில ஆண்டுகளாக இந்திய நகரங்களில் குளிர்காலத்தில் காற்று மாசுபாடு அதிகரித்து வருகிறது. பாதுகாப்பான அளவீடுகளைத் தாண்டி அதிக அளவில் காற்று மாசுபடுகிறது. தீபாவளியின் போது அதிகப்படியாக பட்டாசுகளை வெடிப்பதும் ,அவை ஏற்படுத்தும் புகை மண்டலமும் மேலும் சுற்றுச்சூழலை பாதிக்கின்றன.
- கடந்த வருடம் டெல்லி மாநகர பகுதிகளில் , குறிப்பாக தீபாவளி பண்டிகைக்குப் பிறகு காற்றின் மாசு நிலை ஆபத்தான அளவுக்கு உயர்ந்தது . இதனால் பள்ளிகூடங்கள் , கட்டுமானத் தளங்கள் , மின் உற்பத்தி நிலையங்கள் போன்றவற்றை மூடும் நிலைமை ஏற்பட்டது குறிப்பிடத்தக்கது .

### புதிதாக கண்டறியப்பட்டுள்ள திராவிடா பேரின மண்புழுக்கள்

- மேற்கு தொடர்ச்சி மலைகளின் கேரளப் பகுதியில் , இரண்டு வகைப் பழங்கால மண்புழுக்கள் கண்டறியப்பட்டுள்ளன.
- இந்த இரண்டு வகை மண்புழுக்களுக்கு திராவிடா பாலிடைவர்டிகுலேடா (Drawida polydiverticulata) மற்றும் திராவிடா டோமாசி (Drawida thomasi) என்று பெயரிடப்பட்டுள்ளது.
- கேரளா மாநிலத்தில் திராவிடா பேரினத்தைச் சேர்ந்த பதினாறு மண்புழுக்கள் உள்ளன. இதில் பத்து திராவிடா மண்புழுக்கள் தனித்தன்மை வாய்ந்தவை ஆகும்.
- இந்தியத் துணைக் கண்டத்தில் திராவிடா பேரினங்களைச் (Drawida genus) சேர்ந்த 73 இனங்கள் வாழ்வது உறுதி செய்யப்பட்டுள்ளது. இதில் அதிகப்படியான இனங்கள் மேற்குத் தொடர்ச்சி மலையில் காணப்படுகின்றது. திராவிடா பேரினங்கள் பெருக்கத்தில் கேரள மாநிலம் பெரும் பங்கு வகிக்கின்றது.



*திராவிடா பாலிடைவர்டிகுலேடா*


- திராவிடா பாலிடைவர்டிகுலேடா மண்புழுக்களின் முன் பகுதியில் டைவர்டிகுழுமஸ் (diverticulums) எனும் பிரத்யேக பிளவுத்துண்டுகள் அமைந்திருக்கும். திராவிடா பேரினங்களில் இது தனித்துவமான உடல் உறுப்பு ஆகும்.
- காணப்படும் இடங்கள் :
    - மூணாறு பகுதியில் உள்ள சோலைக் காடுகள்
    - எரவிக்குளம் தேசியப் பூங்கா
    - பாம்பாதுான் தேசியப் பூங்கா (Pampadun Shola National Park)
    - சின்னாறு வனவிலங்குகள் சரணாலயம்

*திராவிடா தோமாசி*

- காணப்படும் இடங்கள் :
    - கோழிப்பாறை நீர்வீழ்ச்சி அருகில் உள்ள காக்கதம்போயில் (Kakkadampoyil) பகுதிகள்
    - மலப்புரம் கோழிக்கோடு எல்லைப் பகுதிகள்.

**நாசிகா பத்ராசுஸ் பூபதி – புதிய வகை இனங்கள் கண்டுபிடிப்பு**

- நாசிகா பத்ராசுஸ் என்ற உயிரினத்தின் புதிய வகை தவளை மேற்குத் தொடர்ச்சி மலையின் கிழக்கு சரிவில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.



- இது அப்பகுதியில் பூர்வீகமாக காணப்படும் உயிரினமாகும். புதிதாகக் கண்டறியப்பட்டு இவ்வகை உயிரினத்தின் பெயர் நாசிகாபத்ராசுஸ் பூபதி (Nasikabatrachus bhupathi). இது பன்றியைப் போல் நீண்ட மூக்கினைக் கொண்டதாகும். இது மண்ணில் வாழும் ஊதா நிறத் தவளையாகும்.



- இது ஸ்ரீவில்லிப்புத்தூரில் உள்ள நரைத்த பெரிய அணில் வனவிலங்கு சரணாலயத்தில் அதாவது மேற்குத் தொடர்ச்சி மலையின் கிழக்குச் சரிவுகளில் வசிக்கும் உயிரினமாகும்.
- இது கண்டத்திட்டு பரவல் கருத்தியலை உறுதிசெய்யும் கூடுதல் சான்றாகும். அவ்வகையில் இது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது. இத்தவளை செசல்ஸ் தீவுகளில் வசிக்கக் கூடியதாகும்.
- இந்தியாவில் இதன் கண்டுபிடிப்பு 65 மில்லியன் வருடங்களுக்கு முன் செசல்ஸ் தீவிலிருந்து பிரிந்த பழைய கோண்ட்வானா நிலப்பகுதியின் ஒரு பகுதிதான் இந்தியத் துணைக்கண்டம் என்பதை உறுதி செய்கிறது.

# மாநிலச் செய்திகள்

### ஹரியானா: திரவ நைட்ரஜனை எந்தவொரு பானத்திலும் கலக்கத் தடை

- திரவ நைட்ரஜனை எந்தவொரு பானம் அல்லது உணவுப் பொருள்களில் கலக்க ஹரியானா உணவு மற்றும் மருந்து நிர்வாகத்துறை தடை விதித்துள்ளது.
- 2006 ஆம் ஆண்டின் உணவுப் பாதுகாப்பு மற்றும் தரநிலைச் சட்டத்தின் (Food Safety and Standards Act, 2006) , 34 ஆவது பிரிவின் கீழ் தடை உத்தரவு ஏற்கனவே வெளியிடப்பட்டுள்ளது.
- திரவ நைட்ரஜன் மிகவும் குளிர்ந்த வெப்ப நிலையில் இருப்பதால் பனிப்புண்/பனிக்கடுப்பு அல்லது உடனடி மரணம் போன்ற ஆபத்தான விளைவுகளை ஏற்படுத்தும் .



### தென்னை மரம் கோவாவின் மாநில மரமாக அறிவிக்கப்பட்டுள்ளது

- தென்னை மரங்கள் வெட்டப்படுவதை ஒழுங்கு படுத்துவதற்காக, 1984, கோவா , டாமன் மற்றும் டையூ மரங்களைப் பாதுகாத்தல் சட்டத்தினுள் தென்னை மரத்தினைச் சேர்ப்பது என கோவா அரசாங்கம் முடிவெடுத்துள்ளது.
- மேலும் தென்னை மரத்தினை மாநில மரமாக அறிவிக்கவும் கோவா அரசாங்கத்தின் அமைச்சரவைக்குழு கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டது.

### மகாடிபிடி (MahaDBT), மகாவஸ்து (MahaVASTU) என்ற இணைய வாயில்களை துவக்கி இருக்கிறது மகாராஷ்டிரா அரசு

- பயனாளிகளுக்கு நேரடியாக பணம் செலுத்தும் வழிமுறையினை ஒழுங்குப்படுத்துவதற்காக மகா – டி.பி.டி என்ற இணைய வாயிலையும், கட்டுமானத்துறையில் அதிகளவு வெளிப்படைத் தன்மையினைக் கொண்டு வருவதற்கு மகாவஸ்து என்ற இணைய வாயிலையும் மகாராஷ்டிரா அரசு துவக்கி இருக்கிறது.

### நறுமணப்பொருள் பூங்கா: (Spices park)

- தெலுங்கானாவின் நிசாமாபாத்தில் மஞ்சளுக்கான நறுமணப்பொருள் பூங்கா அமைக்கப்படுவதற்கு மாநில அரசு முடிவெடுத்துள்ளது.
- இடைத்தரகர்களை முற்றிலுமாக தவிர்ப்பதற்கும் விவசாயிகளின் உற்பத்திப் பொருள்களுக்கு உரிய விலையினை வழங்குவதற்கும் நறுமணப்பொருள் பூங்காக்கள் அமைக்கப்படுதல் மிகவும் முக்கியமானதாக இருக்கிறது.
- நறுமணப்பொருள் பூங்கா அமைக்கப்படுவதற்கான நிலம் மற்றும் நிதியினை மாநில அரசும் தொழில்நுட்ப உதவியினை இந்திய நறுமணப்பொருள்கள் வாரியமும் வழங்குகிறது.
- மத்திய வர்த்தக மற்றும் தொழில்துறை அமைச்சகத்தின் கீழ் இயங்கும் நறுமணப்பொருள்கள் வாரியத்தின் தலைமையகம் கொச்சியில் உள்ளது. இந்திய நறுமணப்பொருள்களின் ஏற்றுமதியினை ஊக்குவிக்கவும் ஒழுங்குபடுத்தவும் இந்த நிறுவனம் உறுதுணையாக இருக்கிறது.

### அக்கறை பேணும் தோழமைத் திட்டம்

- பஞ்சாப் அரசாங்கம், "அக்கறை பேணும் தோழமைத் திட்டம் " (Care Companion Programme - CCP) என்ற திட்டத்தினை அறிமுகம் செய்துள்ளது.
- நோய்வாய்ப்பட்டவர்களது குடும்ப உறுப்பினர்களுக்கு கல்வி அளிப்பதன் மூலமாக நோயாளிகளை அக்கறையோடு கவனித்துக்கொள்ளும் தோழமையினை உருவாக்குவதே இந்தத் திட்டத்தின் நோக்கமாகும்.
- உடல்நலக் குறைவால் பாதிக்கப்பட்டு இருப்பவர்களின் குடும்ப உறுப்பினர்கள் , உடல் நலம் குன்றியவர்களை எவ்வாறு கவனித்துக்கொள்ள வேண்டும் என்று விழிப்புணர்வை ஏற்படுத்துவதும் இந்தத் திட்டத்தின் நோக்கம் ஆகும்.
- பாதிக்கப்பட்டவர் மருத்துவமனையில் இருக்கும் பொழுதும் , மருத்துவமனையில் இருந்து வீட்டிற்கு சென்ற பிறகும் அவர்களை கவனித்துக் கொள்வதற்குப் போதிய பயிற்சிகள் அளிக்கப்படும்.

## இந்தியாவிலேயே முதன்முறையாக அறிதிறன் பேசியின் மூலமாக பயணச்சீட்டு பெறும் வசதியினை அறிமுகப்படுத்த இருக்கிறது மும்பை மெட்ரோ

- ஆன்கோ (OnGO) என்ற பயணச்சீட்டு பெறும் நடைமுறையில் பயணிகள் தங்களது பயணச்சீட்டினை அறிதிறன் பேசியில் தானியங்கி கட்டணச் செலுத்துகை மூலமாக பெற இயலும்
- இந்த முறையானது டோக்கன் மற்றும் ஸ்மார்ட் கார்டு போன்றவை அல்லாதும் பயன்படுத்தப்பட இருக்கிறது.
- மேலும் பயணிகள் 'மும்பை மெட்ரோ' செயலியின் மூலமாக தினசரி, மாதாந்திர பயணச்சீட்டுகளையும் பெற்றுக்கொள்ள இயலும்.
- சோதனை முறையில் உள்ள இந்த நடைமுறையானது ஆகஸ்டு மாதத்தின் இறுதியில்அமல்படுத்தப்பட உள்ளது.

## பெங்களூருவில் இந்தியாவின் முதல் ஹெலி –டாக்ஸி (Heli-Taxi) சேவை தொடங்கப்படவுள்ளது

- பெங்களூருவில் உள்ள கெம்பேகவுடா சர்வதேச விமான நிலையம் தான் (Kempegowda International Airport), இந்தியாவில் முதன் முதலில் ஹெலி –டாக்ஸி சேவையினைத் தொடங்கும் விமான நிலையம் ஆகும் .
- மாநகரத்தின் கடும் போக்குவரத்து நெருக்கடியில் நேரத்தினைச் செலவிட இயலாதவர்களுக்காக இந்தச் சேவை தொடங்கப்படவுள்ளது.
- இன்னும் மூன்று மாதத்தில் தொடங்கப்பட உள்ள இந்தச் சேவையினை தம்ப்பி ஏவியேஷன் (Thumby Aviation Private Limited) என்ற தனியார் நிறுவனம் இயக்க உள்ளது.

## அஸ்ஸாம் மாநிலத்தில் ஆயுதப்படைச் சிறப்பு அதிகாரச் சட்டம் (Armed Forces (Special Powers) Act - AFSPA) மேலும் ஒரு மாதத்துக்கு நீட்டிக்கப்பட்டுள்ளது

- அஸ்ஸாம் மாநிலத்தில் ஆயுதப்படைச் சிறப்பு அதிகாரச் சட்டம் (Armed Forces (Special Powers) Acts - AFSPA) மேலும் ஒரு மாதத்துக்கு நீட்டிக்கப்பட்டுள்ளது . அதற்கு ஏற்றவாறு , ஒட்டுமொத்த அஸ்ஸாம் மாநிலமும் 'பாதிக்கப்பட்ட பகுதி' ('disturbed area') என்று மத்திய அரசு அறிவித்துள்ளது.
- மேகாலயாவின் எல்லையை ஒட்டியுள்ள பகுதிகளும் அஸ்ஸாமை ஒட்டியுள்ள பகுதிகளும் அருணாச்சல பிரதேசத்தின் மூன்று மாவட்டங்களும் பாதிக்கப்பட்ட பகுதியாக மேலும் இரண்டு மாதங்களுக்கு நீட்டிக்கப்பட்டுள்ளது
- அஸ்ஸாம் மாநிலத்தில் கடந்த 1990 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் முதல் ஆயுதப்படை சிறப்பு அதிகாரச் சட்டம் அமலில் உள்ளது.
- ஆயுதப்படை சிறப்பு அதிகாரச் சட்டமானது 1958 ஆம் ஆண்டு பாராளுமன்றத்தில் இயற்றப்பட்டது.
- தற்சமயம் , ஆயுதப்படை சிறப்பு அதிகாரச் சட்டம் அமல்படுத்தப்பட்டு இருக்கும் மாநிலங்கள் :
    - அருணாசலப் பிரதேசம்
    - அஸ்ஸாம்
    - மணிப்பூர்
    - மேகாலயா
    - மிசோரம்
    - நாகலாந்து
    - ஜம்மு காஷ்மீர்

- திரிபுரா மாநிலத்தில் மே மாதம் 2015 இல் ஆயுதப்படை சிறப்பு அதிகாரச் சட்டம் விலக்கப்பட்டது.

### சட்டீஸ்கர்: ராய்ப்பூரில் இந்தியாவின் முதல் நுண்காடுகள் (Micro Forest) உருவாக்கப்பட இருக்கிறது

- ராய்ப்பூரில் 70-க்கும் மேற்பட்ட அரசு அலுவலகங்கள் அமைந்துள்ள சற்றேறக்குறைய 19 ஏக்கர் பரப்பளவுப் பகுதியினை ஆக்ஸிஜன் நிறைந்த மண்டலமாக மாற்றுவதற்காக இந்த நுண்காடுகள் உருவாக்கப்பட இருக்கின்றன.
- சர்வதேச அளவில் அதிகம் மாசடைந்த நகரங்களின் பட்டியலில் 7-வது இடத்தில் உள்ள ராய்ப்பூருக்கு இந்த நுண்காடுகள் தூய காற்றினை வழங்க இருக்கிறது.
- அடுத்த எட்டு மாதங்களில் பொதுமக்களின் பயன்பாட்டுக்காக திறக்கப்பட இருக்கிறது.

### பசுமை காலநிலை நிதியம்

- மகாராஷ்டிரா மாநிலம் , பசுமை காலநிலை நிதியம் மூலமாக 270 மில்லியன் டாலர் நிதி திரட்டுவதற்கு 2030 நீர் வளக் குழு (2030 Water Resources Group , 2030WRG) உதவவுள்ளது.
- ஜல்யுக்த் சிவார் திட்டம் (Jalyukt Shivar Yojana) போன்ற ஒருங்கிணைந்த நீர்நிலைத் திட்டங்களில் முதலீடு செய்ய இந்த நிதி பயன்படுத்தப்படும்.
- வேளாண் வளர்ச்சி மற்றும் வருவாய் மேம்பாடு ஆகியவற்றுடன், பாசனப் பகுதிகளில் நீர் பயன்பாட்டு திறன்களை மேம்படுத்தும் திட்டங்களை துரிதப்படுத்தவும் இந்தத் திட்டம் முனைகிறது. பொது மற்றும் தனியார் கூட்டு முயற்சி மூலம் இந்தத் திட்டங்கள் செயல்படுத்தப்படும்.
- பசுமை காலநிலை நிதியமானது, ஐக்கிய நாடுகள் பருவநிலை மாற்ற மாநாட்டின் (UN Framework Convention on Climate Change) கொள்கைகள் மற்றும் விதிகளின் படி செயல்படுவதற்கு உருவாக்கப்பட்ட நிதி ஆகும் .
- 2030 நீர் வளக் குழு (2030 Water Resources Group - 2030WRG) என்பது சர்வதேச நிதி நிறுவனத்தால் நடத்தப்படுகிறது. மேலும் இது வளரும் நாடுகளில் நீர்நிலைகளை மேம்படுத்தும் அரசு – தனியார்- சிவில் சமூகத்தின் கூட்டு முயற்சி ஆகும்.
- நீர் வளங்களை உபயோகிப்பதில் ஒத்துழைப்பையும், சீர்திருத்தங்களையும் 2030 ஆம் ஆண்டுக்குள் கொண்டு வருவது இதன் முக்கியக் குறிக்கோள் ஆகும்.

### நமாமி கங்கை ஜக்ரிதி யாத்திரை

- நமாமி கங்கை ஜக்ரிதி யாத்திரையானது உத்திரப் பிரதேச மாநில அரசால் தொடங்கப்பட்டு இருக்கிறது. இது கங்கை நதியின் கரை ஓரங்களில் தூய்மை காக்க நடத்தப்படும் விழிப்புணர்வு இயக்கம் ஆகும்.
- உத்திரப் பிரதேசத்தின் தலைநகர் லக்னோவில் நடைபெற்ற விழாவில் அம்மாநில முதல் அமைச்சர் யோகி ஆதித்யநாத் இந்தப் பிரச்சாரத்தைக் கொடியசைத்துத் துவங்கி வைத்தார்.

### பீகாரில் நடமாடும் சிகிச்சை வாகனங்கள்

- நடமாடும் சிகிச்சை வாகனத்தை (Mobile Therapy Van) பீகார் மாநிலத்தின் முதலமைச்சர் நிதீஷ் குமார் துவங்கி வைத்தார். முதியோர்கள், விதவைகள் மற்றும் பிற வகுப்பினர்களுக்கு அவர்தம் இருப்பிடம் சென்றே அடிப்படை மருத்துவத் தேவைகளை இந்த நடமாடும் சிகிச்சை வாகனங்கள் வழங்கும்.

- இந்த வாகனங்களில் அடிப்படை மருத்துவ சாதனங்கள் மற்றும் தொழில்நுட்ப உதவிகளுக்கான குழுக்கள் பயணிக்கும்.
- இந்தத் திட்டமானது உலக வங்கி (World Bank) மற்றும் பீகார் அரசின் சமூக நலத் துறையின் (Social Welfare Department) கூட்டு முயற்சியாகும்.

## முகநூல் நிறுவனத்தின் தொழில் முனையும் பெண்களுக்கான திட்டம்

- முகநூல் (Facebook) நிறுவனத்தின் "She Means Business" எனும் தொழில் முனையும் பெண்களுக்கானத் திட்டம் ஒடிசா மாநிலத்தில் தொடங்கப்பட்டது. இதனை அம்மாநில முதலமைச்சர் நவீன் பட்நாயக் துவங்கி வைத்தார்.
- இத்திட்டத்தின் கீழ் அடுத்த ஓராண்டிற்குள் 2500 பெண்கள் மற்றும் மகளிர் சுய உதவிக்குழு உறுப்பினர்களுக்கு டிஜிட்டல் சந்தைப்படுத்துதல் (Digital Marketing) குறித்த பயிற்சிகள் அளிக்கப்படும். இவ்வாறு பயிற்சி அளிக்கப்படும் பெண்கள் குறித்த தரவுகளை முகநூல் நிறுவனம் தயாரிக்கும். மேலும் ஒரு வருட பயிற்சிக்குப் பிறகு அவர்களின் நிறுவனம், தொழில் விகிதம், நிகர இலாபம் போன்றவை எவ்வாறு வளர்ச்சியடைந்துள்ளது என்பதை ஆய்வு செய்யும்.

## மகாராஷ்டிரா நமோ யுவ ரோஜ்கர் கேந்திரா

- கல்வி பயிலாத இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பை ஏற்படுத்த மகாராஷ்டிரா முதலமைச்சர் தேவேந்திர பட்னாவிஸ் ஆகஸ்ட் 14, 2017 அன்று நமோ யுவ ரோஜ்கர் கேந்திராவை மும்பையில் தொடங்கி வைத்தார்.
- இந்தப் புது முயற்சியின் மூலம், விவசாயிகளின் வாரச் சந்தை, விவசாயிகளின் அலைபேசிச் சந்தை மற்றும் அம்மாவின் உணவுத் திட்டம் (Mother's Tiffin) ஆகியவை அடங்கும்.
- இந்த சேவைப் பொருளானது நடமாடும் வாகனத்தின் உதவியுடன் மும்பை முழுவதும் கிடைக்கப் பெறும். மேலும் இந்த வாகனத்தின் இருப்பிடம், இந்தச் செயலியின் மூலம் கிடைக்கப் பெறும்.

## தமிழக அரசு விருதுகள்

- பல்வேறு சமூகப் பணிகள், சாதனைகள் செய்வோரைப் பாராட்டி சுதந்திர தினத்தன்று பல்வேறு பெயர்களில் விருதுகள் வழங்கப்படுகின்றன. இந்த ஆண்டு வழங்கப்பட்ட விருதுகள் விவரம்:

### *கல்பனா சாவ்லா விருது*

- கழுத்துக்குக் கீழே எந்தவித செயல்பாடுகளும் இல்லாத மாற்றுத் திறனாளி பெண் பிரித்திக்கு துணிவு மற்றும் சாகசச் செயலுக்கான கல்பனா சாவ்லா விருது அளிக்கப்பட்டது.19 வயதுக்கு உட்பட்ட தமிழக மட்டைப் பந்து அணியின் தலைவியாகவும், தேசிய அளவிலான சாம்பியன்ஷிப் போட்டிக்கான மாநில அணியை 17-ஆம் வயதில் தலைமையேற்றும் வெற்றி பெற்றுள்ளார் பிரித்தி. அவருக்கு ஏற்பட்ட விபத்துக்குப் பிறகு உடல் உறுப்புகள் முற்றிலும் செயலிழந்த நிலையில் சக்கர நாற்காலியைச் சார்ந்தே அவரது வாழ்க்கை அமைந்தது. ஆனாலும், சோர்வடையாமல் உற்சாகத்தோடு செயல்பட்டு விபத்துகளில் முதுகுத் தண்டுவடம் பாதிக்கப்பட்ட நபர்களுக்காக அறக்கட்டளையைத் தொடங்கிச் செயல்படுத்தி வருகிறார்.
- இவர் மாற்றுத்திறனாளிகளுக்காக "சோல்ப்ரீ" ("Soul Free") என்ற அமைப்பை நடத்திவருகிறார்.

### *ஏ.பி.ஜெ.அப்துல் கலாம் விருது*

- கல்வி, அறிவியல், மருத்துவம் போன்ற துறைகளில் சாதனை படைப்போருக்கு முன்னாள் குடியரசுத் தலைவர் அப்துல் கலாம் பெயரில் விருது அளிக்கப்படுகிறது. இந்த விருது இந்த

ஆண்டு சென்னை பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் எஸ்.பி.தியாகராஜனுக்கு வழங்கப்பட்டது.

- இவர் தேசிய அளவில் புகழ்பெற்ற உயர்கல்வி வல்லுநர், பன்னாட்டு அளவில் பாராட்டுப் பெற்ற ஆராய்ச்சியாளர். இதுவரை 345 ஆராய்ச்சிக் கட்டுரைகளையும், 20 நூல்களையும் வெளியிட்டுள்ளார். அவருடைய 8 கண்டுபிடிப்புகளுக்காக காப்புரிமை பெற்றுள்ளார். மஞ்சள் காமாலை நோயைத் தீர்க்கும் வைரோஹெப் என்ற மருந்தை இந்திய மருத்துவத் தாவரத்தில் இருந்து கண்டுபிடித்து அதற்கான காப்புரிமையும் பெற்றுள்ளார். இந்தச் சாதனைகளுக்காக ஸ்ரீராமச்சந்திரா பல்கலைக்கழக இணை வேந்தர் (ஆராய்ச்சி), டாக்டர் எஸ்.பி.தியாகராஜனுக்கு அப்துல் கலாம் விருது அளிக்கப்பட்டது.

*நல் ஆளுமை விருதுகள்*

- தமிழக அரசுத் துறைகளில் சிறப்பான திட்டங்களைச் செயல்படுத்தியதற்கு நல் ஆளுமை விருதுகள் அளிக்கப்படுகின்றன. காவல் வீட்டுவசதி வாரியம், வேளாண்மைத் துறை இயக்குநரகம், வணிகவரிகள் துறை ஆகியவற்றுக்கு விருதுகள் அளிக்கப்பட்டன.
- தமிழகத்தில் கல்லீரல் சிகிச்சைப் பிரிவை அமைத்த சென்னை மருத்துவக் கல்லூரியின் கல்லீரலியல் துறைத் தலைவர் கே.நாராயணசாமி, மரங்களை வளர்க்கும் போது அதன் வேர்களுக்கே நேரடியாக தண்ணீரைச் செலுத்தும் வகையிலான புதிய நடைமுறையைக் கண்டுபிடித்ததற்காக வருவாய் நிர்வாக ஆணையாளர் கொ.சத்யகோபால் ஆகியோருக்கு பாராட்டுச் சான்றிதழ்களை முதல்வர் பழனிச்சாமி அளித்தார்.
- 9 ஆயிரம் பேருக்கு கண்புரை அறுவை சிகிச்சையும், 310 பேருக்கு விழிவெண்படல மாற்று சிகிச்சையும் ('கார்னியல் டிரான்ஸ்பிளான்டேஷன்') செய்து மாற்றுத் திறனாளிகள் நலனுக்காகப் பணியாற்றி வரும் காஞ்சிபுரம் கண் அறுவை சிகிச்சை மருத்துவர் வீ.ம. சங்கரனுக்கு மாற்றுத் திறனாளிகளுக்கு சேவை புரிந்த சிறந்த மருத்துவருக்கான விருது அளிக்கப்பட்டது. இவர் கண் வங்கிகள் மூலம் மாநிலத்தில் மாற்றுதிறனாளிகளுக்கு 3300 கண்களை சேகரித்து சேவை புரிந்துள்ளார்
- சிறந்த சமூகப் பணியாளர் விருது மதுரை க்யூர் அறக்கட்டளை மற்றும் ஆராய்ச்சி மைய நிறுவனர் வெ.பெ.இளையபாரி, சிறந்த தொண்டு நிறுவனத்துக்கான விருது மெடிந்தியா அறக்கட்டளை ஆகியவற்றுக்கு வழங்கப்பட்டது.
- மாற்றுத் திறனாளிகளுக்கு மிக அதிகளவில் வேலைவாய்ப்பு அளித்த தனியார் நிறுவனமாக திருச்சி ஆர்பிட் நிறுவனமும், சிறப்பாகச் செயல்படும் மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிக்கான விருது, சேலம் மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிக்கும் அளிக்கப்பட்டன. இந்த விருதுகள் தலா 10 கிராம் பதக்கமும், சான்றிதழும் அடங்கியது.

*மகளிர் நலன்*

- பெண்கள் நலனில் சிறந்து விளங்கி தொண்டாற்றும் நிறுவனமாக நீலகிரி மாவட்டத்தைச் சேர்ந்த ஆதிவாசிகள் நலச் சங்கமும், சமூகப் பணியாளருக்கான விருது கிருஷ்ணம்மாள் ஜெகன்னாதனுக்கும் அளிக்கப்பட்டது.

*உள்ளாட்சி அமைப்புகள்*

- சிறந்த மாநகராட்சி : திருநெல்வேலி மாநகராட்சி .
- சிறந்த நகராட்சி: சத்தியமங்கலம் நகராட்சி (முதல் பரிசு), பூந்தமல்லி நகராட்சி (இரண்டாம் பரிசு) திருமங்கலம் நகராட்சி (மூன்றாம் பரிசு).

*மாநில இளைஞர் விருதுகள்*

- "நோ ஃபுட் வேஸ்ட்" என்ற லாப நோக்கமில்லாத அமைப்பையும், எதுதர்மா என்ற இணைய வழி உதவித் தொகைத் திட்டத்தையும் செயல்படுத்தி வரும் கோவை மாவட்டம் ஆ.கோ.பத்மநாபன், பெண்களை ஆபத்தான பட்டாசுத் தொழிலில் இருந்து மீட்டு தொழில்முனைவோராக மாற்றி வரும் விருதுநகர் மாவட்டம் கோ.உமையலிங்கம், சீமைக் கருவேல மரங்கள் ஒழிப்பு, தூய்மைப் பணிகள் போன்றவற்றில் தீவிரமாக ஈடுபட்டு வரும் திருநெல்வேலி மாவட்டம் உ.ஸ்ரீபதி தங்கம் ஆகியோருக்கு இளைஞர் விருதுகள் அளிக்கப்பட்டன.


## இந்தியத் துணைக்கண்டப் பிரிவினை பற்றிய இந்தியாவின் முதல் அருங்காட்சியகம்

- எழுபது ஆண்டுகளுக்குப் பின்னர், பஞ்சாப் மாநிலத்தின் அமிர்தசரஸில் உள்ள டவுன்ஹால் கட்டடத்தில் இந்தியத் துணைக்கண்டப் பிரிவினை பற்றிய இந்தியாவின் முதல் அருங்காட்சியகம் விரைவில் தொடங்கப்பட இருக்கிறது.
- பிரிவினையின்போது பாதிப்பிலிருந்து மீண்டவர்களது கதைகளையும் நினைவலைகளையும் வெளியுலகுக்கு பறைசாற்றக்கூடிய ஒன்றாய் இது அமைக்கப்பட இருக்கிறது.
- இந்த அருங்காட்சியகத்தின் மூலமாக, எவ்வாறு காலனியாதிக்கத்திலிருந்து விடுதலை பெறுவதற்கான போராட்டம் மிகவும் கொடூரமான வன்முறைப் பாதையினை தழுவியது என்ற கதையினை அறிந்து கொள்ள இயலும்.
- பிரிவினையின் போது வெளிவந்த செய்தித்தாள்களின் செய்திக் கட்டுரைகள் இங்கு பொதுமக்களின் பார்வைக்கு வைக்கப்பட இருக்கிறது.

*இந்தியப் பிரிவினை (Partition of India)*

- இது 1947 ல் பிரிட்டிஷ் இந்தியாவை இந்தியா என்றும் பாகிஸ்தான் என்றும் பிரிக்கப்பட்டதைக் குறிக்கிறது.
- இந்தியத் துணைக் கண்டத்தில் பிரிட்டிஷ் இந்தியாவின் ஆட்சி முடிவுற்றதன் ஒரு பகுதியாக இந்தப் பிரிவினை கருதப்படுகிறது.
- சர் சையது அகமதுகான் முன்வைத்த இருதேசக் கொள்கையே (Two Nation Theory) இந்தியப் பிரிவினையின் முக்கியக் காரணமாகும்.
- இந்தப் பிரிவினையின் முதன்மை பரப்பாளராகச் செயல்பட்டவர் ஜின்னர் ஆவார். பின்னர் பாகிஸ்தானின் முதல் கவர்னர் ஜெனரல் பதவி வகித்தார்.
- இந்தப் பிரிவினையின் போது இரு நாடுகளுக்கிடையேயும் புதிதாக உருவாக்கப்பட்ட ராட்கிளிஃப் எல்லைக்கோட்டினை பல லட்சக்கணக்கான மக்கள் கடந்து இரு நாடுகளுக்கும் இடையே சென்றனர்.

## 'முதலைச்சரின் உதவி எண்' சேவை




- முதலைச்சரின் உதவி எண் ('Chief Minister's Helpline') என்ற சேவையினை உத்திரப்பிரதேச முதலைச்சர் துவங்கியுள்ளார் .

- 1000 பேர்கொண்ட குறைகேட்பு தொலைப்பேசி மையங்கள் லக்னோ நகரில் அமைக்கப்படும்.
- துன்புறுத்தல் அல்லது பல்வேறு தொல்லைகளுக்கு உள்ளாகும் உத்திரப்பிரதேச மக்கள் இந்த கட்டணமற்ற தொலைபேசி எண் மூலமாக தங்கள் புகார்களை தெரிவிக்கலாம்.
- இந்த மையம் ஒரு நாளுக்கு 80,000 தொலைபேசி அழைப்புகளை கையாளக்கூடியதாக உள்ளது.

## புதிய புத்தாக்க எரிசக்தி இயக்கத்தை தொடங்கியுள்ளது ஒடிசா

- நிகர அளவீட்டு முறை மூலம் (Net metering system) மேற்கூரை சூரிய ஒளி தயாரிப்பு மின் கட்டமைப்பை தொடங்கியுள்ளது ஒடிசா
- புத்தாக்க எரிசக்தி உருவாக்கலில் பொதுமக்களின் பங்கெடுப்பை ஊக்குவிக்கும் வகையிலான இந்த இயக்கத்தினை ஒடிசா முதல்வர் புவனேஷ்வரில் தொடங்கி வைத்துள்ளார்.
- மாநில அரசாங்கத்தால் 30 சதவீத மானியம் வீடு மற்றும் நிறுவனங்களைச் சேர்ந்த நுகர்வோர்களுக்கு வழங்கப்படுகிறது.
- தற்போது, மேற்கூரை சூரிய ஒளி உற்பத்தித் திட்டத்திற்கு ஒரு கிலோவாட்டுக்கு 70000 ரூபாய் முதலீடு செய்யப்பட்டுள்ளது.
- இந்தத் திட்டத்தின் சேவைகள் குறித்த நேரத்தில் கிடைக்கப் பெறுவதற்காக திட்டத்தின் பங்கேற்பாளர்கள், வாடிக்கையாளர்களோடு தொடர்பு கொள்வதற்கு ஏதுவாக WWW.RTSODISHA.GOV.IN என்ற இணைய வாயிலும் தொடங்கப்பட்டுள்ளது.
- இந்தத் திட்டத்தின் மூலமாக நுகர்வோர்கள் தங்கள் வீட்டுக்கூரையின் மீது சூரிய ஒளித்தகடுகளை பதித்து பகலில் மின்சாரம் உற்பத்தி செய்ய இயலும்.
- உபரியாக தயாரிக்கப்பட்ட மின்சாரம் ஆனது மின் கட்டமைப்பிற்கு 220V/440V என்ற முறையில் இணைப்புக் கம்பிகள் மூலம் விற்கப்படும்.
- இந்தத் திட்டத்தினை ஒடிசா புத்தாக்க எரிசக்தி வளர்ச்சி முகமையானது (Odisha Renewable Energy Development Agency - OREDA) நடைமுறைப்படுத்துகிறது.

## கேரளாவின் புதிய 'மின்னணு கழிவு' அகற்றுதல் திட்டம்

- சமீபத்தில் கேரள அரசு அதன் மாநில அரசுப் பள்ளிகளில் புதிய மின்னணு கழிவு அகற்றும் திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது.
- இதன் நோக்கம் தகவல் தொழில்நுட்ப அலுவலகங்களிலும் வேறுபல மையங்களிலும் உள்ள மின் கழிவுகளை கையாள்வது ஆகும்.
- இந்த திட்டத்தின் மூலம் ஏறக்குறைய 10000 பள்ளிகள் மற்றும் அலுவலகங்களிலிருந்து தோராயமாக 1 கோடி கிலோகிராம் எடையுள்ள மின்கழிவுகளை விஞ்ஞான முறையில் மறுசுழற்சி செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது.
- இதன் மூலம் கிடைக்கும் நிதியில் புதிய கணினிகள் அதே நிறுவனங்களுக்கு வாங்கப்படும்.
- இந்த மின் கழிவுப் பட்டியலில் 2000ம் ஆண்டிலிருந்து மாநிலத்தில் பயன்படுத்தாமல் உள்ள பழைய மின்னணுத் திரைகள், சுட்டிகள் [Mouse], கீ.போர்டுகள் மற்றும் தடங்கலிலா மின்திறன் அமைப்புகள் ஆகியவை அடங்கும்.
- இது தூய்மையான கேரளா நிறுவனமும், IT @ School Project என்று முன்னர் அறியப்பட்ட கேரள உள்கட்டமைப்பு மற்றும் தொழில்நுட்ப கல்வி நிறுவனத்தின் கூட்டு முயற்சி ஆகும்.

## மேற்கு வங்காளத்தின் அரிசி வகைக்கு புவிசார் குறியீடு

- மேற்கு வங்க மாநிலத்தின் புர்த்வான் மாவட்டத்தில் விளையும் கோபிந்தோபோக் (Gobindobhog) எனும் அரிசி வகைக்கு புவிசார் குறியீடு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

- புர்த்வான் பிராந்தியமானது (கிழக்கு மற்றும் மேற்கு புர்த்வான் என்று இரண்டு பகுதிகள்) 'வங்காளத்தின் அரிசிக் கிண்ணம் ' என்று அழைக்கப்படுகிறது.
- கோபிந்தோபோக் அரிசி வகை தாமோதர் ஆற்றின் தெற்குப் பகுதிகளில் பெருமளவில் பயிரிடப்படுகிறது.
- ஆண்டின் பிற்பகுதியில் பயிரிடப்படுவதால் மழையால் பாதிக்கப்படாமல் வளர்கிறது
- குருணை அளவில் , வெள்ளை நிறமாக , நறுமணம் வீசும் இந்த அரிசி வகையானது இனிப்பான வெண்ணெய் சுவையுடன் , ஒட்டும் தன்மையினைக் கொண்டிருக்கும்.
- பூச்சிகள் மற்றும் நோய் தாக்குதலால் அதிகம் பாதிக்கப்படாத இவ்வகை அரிசி , ஏக்கருக்கு அதிக உற்பத்தித் திறன் கொடுப்பதால் விவசாயிகள் நன்கு லாபம் அடைகின்றனர்.

### இந்திரா சிற்றுண்டி உணவகத் திட்டம்

- பெங்களூருவில் இந்திரா சிற்றுண்டி உணவகத் திட்டம் தொடங்கப்பட்டுள்ளது.
- நகர்ப்புறங்களில் உள்ள ஏழை மக்களுக்கு குறைந்த விலையில் உணவு வழங்குவதற்காக கர்நாடக அரசானது முன்னாள் பிரதமர் இந்திரா காந்தியின் நினைவாக இந்திரா சிற்றுண்டி உணவகத் திட்டத்தைத் தொடங்கியுள்ளது
- தமிழ்நாட்டில் ஏற்படுத்தப்பட்ட அம்மா உணவகத்தினை வடிவமாகக் கொண்டு இந்திரா சிற்றுண்டி உணவகம் ஏற்படுத்தப்பட்டுள்ளது.
- முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தியின் நினைவாக அவரது பிறந்த நாளான ஆகஸ்டு 20-ம் தேதி , 'சத்பவனா திவாஸ்' அல்லது 'நல்லிணக்க நாள்' என்று நாடு முழுவதும் அனுசரிக்கப்படுகிறது.

# பிரபலமானவர்கள், விருதுகள், நிகழ்வுகள்

### புகழ்மிக்க அறிவியலாளர் புஷ்பமித்ரா பார்கவா மறைவு

- ஹைதராபாத்தில் இயங்கி வரும் அறிவியல் மற்றும் தொழிலக ஆய்வு மன்றத்தின் (CSIR) செல்லுலார் மற்றும் மூலக்கூறு உயிரியல் மையத்தின் (Centre for Cellular Molecular Biology - CCMB) நிறுவன இயக்குனரான புஷ்பமித்ரா பார்கவா மறைந்தார்.



- நாட்டின் உயிர் தொழில்நுட்பத்தில் கரைதேர்ந்த இவரின் சேவை காரணமாக 1970 ல் மத்திய அறிவியல் தொழில்நுட்ப அமைச்சகத்தின் கீழ் உயிரி தொழில்நுட்பத்திற்கென்று தனியாகத் துறை ஒன்று உருவாக்கப்பட்டது.

- 2005ல், இந்தியாவின் Assisted Reproductive Technology தொழில்நுட்ப சிகிச்சை மையங்களை (ART clinics) ஒழுங்குபடுத்துவதற்கான இந்திய மருத்துவ ஆராய்ச்சிக் கழகத்தின் (ICMR) வரைவு விதிமுறை உருவாக்கலில் பெரும்பங்கினை ஆற்றியுள்ளார்.

## நிதி ஆயோக்கின் துணைத்தலைவர் அரவிந்த் பனகாரியா ராஜினாமா


- 2015 ஜனவரி 1 ல் உருவாக்கப்பட்ட பிரதமரின் தலைமையிலான நிதி ஆயோக்கின் துணைத்தலைவர் பொறுப்பில் இருந்து அரவிந்த் பனகாரியா பதவி விலகினார்.
- ஆகஸ்ட் 2014 இல் பிரதமர் அப்போதைய திட்டக் குழுவைக் கலைப்பதாக அறிவித்து அரவிந்த் பனகாரியாவைப் புதிய அமைப்பின் துணைத் தலைவர் ஆக்குவதற்குத் தேர்ந்தெடுத்தார்.



- இவர் பிரதமரின் மூலமாக நிதி ஆயோக் அமைப்பின் துணைத்தலைவராக நியமிக்கப்பட்டார்.

## புகழ்பெற்ற (துருபதம் -Dhrubad) பாடகர் உஸ்தாட் சையீதுதின் டாகர் மறைவு

- துருபத மரபில் அதீத நிபுணத்துவம் வாய்ந்த உஸ்தாட் சையீதுதின் டாகர் மறைந்தார்.
- புகழ் பெற்ற 'ஏழு டாகர் பந்துஸ்' (Dagar Bandhus) என்ற பிரிவில் மிகவும் இளையவர் இவர். தன் வாழ்க்கை முழுவதையும் இந்த இசைப்பணியின் மேம்பாட்டிற்காக அர்ப்பணித்தவர்.
- தன்னுடைய ஆறாம் வயதிலேயே இசை வாழ்க்கையினை தொடங்கிய இவர், ஏப்ரல் 29,1939 ல் ராஜஸ்தானின் ஆல்வரில் பிறந்தார்.




- ஜெய்ப்பூர் மற்றும் புனேவில் உள்ள துருபத சமூக அமைப்பின் தலைவராகவும் இருந்துள்ளார்.

**உலக வங்கியின் இந்தியாவுக்கான நிர்வாக இயக்குனர் – எஸ்.அபர்ணா**

- உலக வங்கிக்கான இந்தியாவின் நிர்வாக இயக்குனராக எஸ்.அபர்ணா தேர்வு செய்யப்பட்டுள்ளார்.
- இவர் குஜராத் பணிப் பிரிவைச் சேர்ந்த இந்திய ஆட்சிப் பணியாளர் (IAS) ஆவார். இவர் இந்தியா, பங்களாதேஷ்,பூட்டான் மற்றும் இலங்கை ஆகிய நான்கு நாடுகளுக்கும் சேர்த்து , அடுத்த மூன்று ஆண்டுகளுக்குப் பிரதிநிதியாக பதவி வகிக்கவுள்ளார்.
- 1988 ஆம் ஆண்டின் பணியாளர் பிரிவைச் சேர்ந்த அபர்ணா, தற்பொழுது குஜராத் முதல்வர் விஜய் ரூபனியின் முதன்மைச் செயலாளர் என்பது குறிப்பிடத்தக்கது.
- தற்பொழுது உலக வங்கிக்கான இந்தியாவின் நிர்வாக இயக்குனராக பதவி வகிக்கும் சுபாஷ் கார்க்குக்குப் பதிலாக அபர்ணா அப்பணியினைத் தொடரவுள்ளார்.
- சுபாஷ்கார்க், மத்திய நிதி அமைச்சகத்தின் பொருளாதார விவகாரங்களுக்கான செயலாளராக (Economic Affairs Secretary) நியமிக்கப்பட்டுள்ளார்.
- பிரதமர் தலைமையிலான அமைச்சரவை நியமனங்கள் குழு (Appointments Committee of the Cabinet - ACC) இவரது பணி நியமனத்தை உறுதி செய்தது.

## ராஜீவ் குமார்– நிதி ஆயோக்கின் புதிய துணைத் தலைவர்

- பொருளாதார நிபுணர் டாக்டர் ராஜீவ் குமார் அவர்கள் , நிதி ஆயோக் குழுவின் துணைத் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.
- இதற்கு முன்னர் இப்பதவியில் இருந்த அர்விந்த் பனகாரியா , பதவியில் இருந்து விலகி கல்விப் பணிகளுக்குத் திரும்பப் போவதாக அறிவித்துள்ளார் .
- ராஜீவ் குமார் , 2006 முதல் 2008 வரை தேசியப் பாதுகாப்பு ஆலோசகர் குழுவின் (National Security Advisory Board ) உறுப்பினராக இருந்தார். அவர் இந்தியத் தொழிலதிபர்கள் கூட்டமைப்பில் (Confederation of Indian Industries - CII) முக்கியப் பொருளாதார நிபுணராகவும் பணியாற்றியுள்ளார்.




- ஆசிய வளர்ச்சி வங்கி , இந்தியத் தொழில்துறை அமைச்சகம் , மத்திய நிதி அமைச்சகம் போன்றவற்றில் முக்கியப் பதவிகளையும் வகித்துள்ளார்.
- ராஜீவ் குமார் பல தேசிய மற்றும் சர்வதேச அமைப்புகளில் உறுப்பினராக உள்ளார் . அவற்றுள் சில ,
    - மன்னர் அப்துல்லா பெட்ரோலியம் ஆய்வுகள் மற்றும் ஆராய்ச்சி மையம், ரியாத் ( சவுதி அரேபியா) / King Abdullah Petroleum Studies and Research Center, Riyadh
    - ஆசியான் கூட்டமைப்பின் பொருளாதார ஆராய்ச்சி நிறுவனம்
    - பாரத ஸ்டேட் வங்கி
    - இந்திய வெளிநாட்டு வர்த்தக நிறுவனம் (Indian Institute of Foreign Trade)
- அனைத்திந்திய மருத்துவ அறிவியல் கழகத்தில், குழந்தைகள் நல மருத்துவராக உள்ள டாக்டர் வினோத் பால் அவர்களும் நிதி ஆயோக் குழுவின் ஒரு உறுப்பினராக தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

## திரைப்படத் தணிக்கை வாரியத்தின் புதிய தலைவராக : பிரசூன் ஜோஷி நியமனம்

- மத்திய திரைப்படத் தணிக்கை வாரியத்தின் (சி.பி.எஃப்.சி / CBFC ) தலைவர் பதவியில் இருந்து பஹலாஜ் நிஹலானியை மத்திய அரசு நீக்கியுள்ளது. அவருக்குப் பதிலாக அப்பதவிக்கு தேசிய விருது பெற்ற பாலிவுட் பாடலாசிரியரான பிரசூன் ஜோஷி நியமிக்கப்பட்டுள்ளார்.
- திரைப்படத் தணிக்கை வாரியத்தின் தலைவராக பிரபல திரைப்படத் தயாரிப்பாளரான பஹலாஜ் நிஹலானி கடந்த 2015-ஆம் ஆண்டு ஜனவரி மாதம் நியமிக்கப்பட்டார். அவர் இப்பதவியை வகித்த கடந்த இரண்டரை ஆண்டுகளில் பல்வேறு சர்ச்சைகள் எழுந்தன.

குறிப்பாக அவர் சர்வாதிகாரப் போக்கில் செயல்படுவதாக தணிக்கை வாரியத்தின் மற்ற உறுப்பினர்கள் குற்றம்சாட்டினர்.

- அண்மையில், பிரபல இயக்குநர் மதுர் பண்டார்கர் இயக்கிய, நெருக்கடி நிலை காலத்தைச் சித்திரிக்கும் 'இந்து சர்க்கார்' என்ற படத்தில் வெவ்வேறு இடங்களில் காட்சிகளை வெட்டுமாறு தணிக்கை வாரியம் உத்தரவிட்டது பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியது. மேலும், 'லிப்ஸ்டிக் அண்டர் மை பர்க்கா' என்ற படத்தைத் திரையிட தணிக்கை வாரியம் அனுமதி மறுத்ததும் பல்வேறு தரப்பினரால் விமர்சிக்கப்பட்டது.
- இந்நிலையில், திரைப்படத் தணிக்கை வாரியத்தின் தலைவர் பதவியில் இருந்து பஹலாஜ் நிஹலானியை மத்திய செய்தி-ஒலிபரப்பு அமைச்சகம் நீக்கியது. அப்பொறுப்புக்கு பிரபல பாலிவுட் பாடலாசிரியர் பிரசூன் ஜோஷி நியமிக்கப்பட்டுள்ளார்.



நிஹலானி பிரசூன் ஜோஷி

### உலக சுகாதார நிறுவனத்தின் நல்லெண்ணத் தூதர் மில்கா சிங்

- தென் கிழக்கு ஆசியப் பிராந்தியப் பகுதிகளில் , உடல் செயல்பாட்டை ஊக்குவிக்கும் நல்லெண்ணத் தூதராக மில்கா சிங்கை உலக சுகாதார நிறுவனம் நியமித்துள்ளது.
- ஒழுங்கற்ற வாழ்க்கை முறையால் உண்டாகும் தொற்றா நோய்களை (Non-Communicable Diseases) கட்டுப்படுத்தவும் , தடுக்கவும் உலக சுகாதார நிறுவனம் திட்டங்களை வகுத்துள்ளது.
- இத்திட்டமானது 2025 ஆம் ஆண்டுக்குள் போதிய உடல் உழைப்பின்மையை 10 சதவீதம் அளவும், தொற்றாத நோய் தாக்குதல்களை 25 சதவீதம் வரையும் குறைக்க முற்படுகிறது. தென்கிழக்கு ஆசிய பிராந்தியத்தில் இந்த திட்டத்தினை மில்காசிங் ஊக்குவிப்பார்.
- மில்கா சிங் காமன்வெல்த் போட்டிகளிலும், ஆசியன் விளையாட்டுகளிலும் இந்தியாவுக்குப் பதக்கங்களைப் பெற்றுத் தந்துள்ளார். ‘பறக்கும் சீக்கியர்’ என்று அழைக்கப்படும் இவர் இந்தியாவின் உயரிய விருதான பத்மஸ்ரீ விருது பெற்றவர் ஆவார்.

### சர்வதேச இளைஞர் தினம் : ஆகஸ்டு 12

- இன்றைய இளைஞர்களைச் சூழ்ந்துள்ள கலாச்சாரம் மற்றும் சட்ட ரீதியிலான சிக்கல்களை அனைவரின் கவனத்திற்கும் கொண்டு வரவும், விழிப்புணர்வு ஏற்படுத்தவும் சர்வதேச இளைஞர் தினம் கடைபிடிக்கப்படுகிறது.
- முதல் சர்வதேச இளைஞர் தினம் : ஆகஸ்ட் 12, 2000
- மோதல்களைத் தடுப்பதிலும், சமூக நீதியைக் காப்பதிலும் , அமைதியை நிலைநாட்டுவதிலும் இளைஞர்களின் பங்களிப்பை அங்கீகரிப்பதற்காக இந்த வருடத்தின் கருப்பொருள் “அமைதியை கட்டமைக்கும் இளைஞர்கள்” (Youth Building Peace) என்று தேர்வு செய்யப்பட்டுள்ளது.

### ரயில்வே வாரியத் தலைவராக அஸ்வனி லோஹானி நியமனம்

- ரயில்வே வாரியத்தின் புதிய தலைவராக, ஏர்-இந்தியா நிறுவனத்தின் தலைவர் அஸ்வனி லோஹானி நியமிக்கப்பட்டுள்ளார்.
- ரயில்வே வாரியத்தின் தலைவராக இருந்த, ஏ.கே.மிட்டல் தொடர் ரயில் விபத்துகளுக்குப் பொறுப்பேற்று தனது பதவியை ராஜிநாமா செய்தார். அதையடுத்து, அந்தப் பதவிக்கு அஸ்வனி லோஹானி நியமிக்கப்பட்டுள்ளார்.
- இவர், இதற்கு முன்பு, இந்திய சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் தலைவராகவும், ரயில் அருங்காட்சியகத்தின் தலைவராகவும் பதவி வகித்துள்ளார்.

### நாட்டின் முதல் மக்களவையில் இடம் பெற்றிருந்த எம்.பி ரிஷாங் கெய்ஷிங் காலமானார்

- நாட்டின் முதலாவது மக்களவையில் இடம் பெற்றிருந்த எம்.பி.யும், மணிப்பூர் முன்னாள் முதல்வருமான ரிஷாங் கெய்ஷிங் (96) காலமானார்.
- மணிப்பூர் மாநிலம் உக்ருல் மாவட்டத்தில் உள்ள பங்பா கிராமத்தில் 1920-ஆம் ஆண்டு அக்டோபர் 25-ஆம் தேதி பிறந்தவர் ரிஷாங் கேய்ஷிங்.
- இந்திய சுதந்திரத்துக்குப் பின்னர், சோசலிஷக் கட்சியில் கேய்ஷிங் சேர்ந்தார். பின்னர், 1952-ஆம் ஆண்டு நடைபெற்ற நாட்டின் முதலாவது மக்களவைத் தேர்தலில் அவர் போட்டியிட்டு எம்.பி.யாக தேர்ந்தெடுக்கப்பட்டார்.

### விவசாயத்திற்கான தேசிய தலைவர் விருது -2017

- தெலுங்கானா மாநில முதல்வர் K. சந்திரசேகர் ராவ், பெருமை மிகு விவசாயத்திற்கான தேசியத் தலைவர் விருதிற்கு (National Agriculture Leadership Award) இந்திய உணவு மற்றும் விவசாய மன்றத்தால் [ICFA] தேர்வு செய்யப்பட்டுள்ளார். இதன் தலைவர் அனைவருமறிந்த வேளாண் விஞ்ஞானி M.S. சுவாமிநாதன்.
- இவர் விவசாயத்துறையில் விவசாயிகளின் நலன் மேம்படுத்த கொண்டு வரப்பட்ட புதுமையான திட்டங்களுக்காக அந்த விருதிற்குத் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளார்.
- இந்த விருது செப்டம்பர் 5-ம் தேதி டெல்லியில் உள்ள தாஜ் ஹோட்டலில் வழங்கப்பட உள்ளது.
- இந்த விருது 2008-ம் வருடத்திலிருந்து ஆண்டுதோறும் இந்திய உணவு மற்றும் விவசாய மன்றத்தால் வழங்கப்பட்டு வருகிறது.
- கடந்த வருடங்களில் விருது வாங்கியவர்கள் பின்வருமாறு:
  - 2008 - M.S. சுவாமிநாதன்
  - 2009 - பலராம் ஜாக்கர்
  - 2010 - சரத்பவார்
  - 2011 - P.K. துமால்
  - 2012 - ரமன்சிங்
  - 2013 - பிரகாஷ்சிங் பாதல்
  - 2014 - அகிலேஷ் யாதவ்
  - 2015 - சிவராஜ் சிங் சௌஹான்
  - 2016 - ரத்தன் டாடா

### உச்ச நீதிமன்ற 45ஆவது தலைமை நீதிபதியாக தீபக் மிஸ்ரா பதவியேற்பு

- உச்ச நீதிமன்ற புதிய தலைமை நீதிபதியாக தீபக் மிஸ்ரா பதவியேற்றார்.
- உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதியாக இருந்த ஜே.எஸ். கேஹர் ஓய்வு பெற்றார். இதையடுத்து, புதிய தலைமை நீதிபதியாக மூத்த நீதிபதி தீபக் மிஸ்ரா அண்மையில் நியமிக்கப்பட்டார். அதன் படி, தில்லியில் குடியரசுத் தலைவர் மாளிகையில் உள்ள தர்பார் ஹாலில் நடைபெற்ற

விழாவில், உச்ச நீதிமன்றத்தின் புதிய தலைமை நீதிபதியாக தீபக் மிஸ்ரா பதவியேற்றார். அவருக்கு குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த் பதவிப் பிரமாணம் செய்து வைத்தார்.

- உச்ச நீதிமன்றத்தின் 45 ஆவது தலைமை நீதிபதி தீபக் மிஸ்ரா ஆவார். வரும் 2018 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 2-ஆம் தேதி வரை அந்தப் பதவியை அவர் வகிப்பார்.
- உச்ச நீதிமன்ற நீதிபதியாக தீபக் மிஸ்ரா பணியாற்றிய காலத்தில், பல்வேறு முக்கியத் தீர்ப்புகளை அளித்துள்ளார். தில்லியில் மருத்துவ மாணவி கூட்டு பாலியல் பலாத்காரம் செய்து கொலை செய்யப்பட்டது தொடர்பான வழக்கில் 4 பேருக்கு விதிக்கப்பட்ட தூக்குத் தண்டனையை உறுதி செய்தது தொடர்பான தீர்ப்பு, திரையரங்குகளில் தேசிய கீதம் கட்டாயம் ஒளிபரப்ப வேண்டும் என்பது தொடர்பான தீர்ப்பு ஆகியவை அவற்றில் அடங்கும் என்பது குறிப்பிடத்தக்கது.

### தமிழக அரசின் தலைமை வழக்குரைஞராக விஜய் நாராயண் நியமனம்

- சென்னை உயர் நீதிமன்றத்தில் அரசு தலைமை வழக்குரைஞராக பணிபுரிந்த ஆர்.முத்துக்குமாரசாமி தனது பதவியை ராஜிநாமா செய்தார். இதையடுத்து, தமிழக அரசின் புதிய தலைமை வழக்குரைஞராக விஜய் நாராயண் நியமிக்கப்பட்டுள்ளார்.
- கடந்த 2004 -ஆம் ஆண்டில் இவருக்கு மூத்த வழக்குரைஞர் அங்கீகாரம் வழங்கப்பட்டது.

# விளையாட்டுச்செய்திகள்

### உலகத் தடகள சாம்பியன்ஷிப்: மகளிர் 100 மீ. ஓட்டத்தில் தங்கம் வென்றார் டோரி போவீ

- உலகத் தடகள சாம்பியன்ஷிப் போட்டியில் மகளிர் 100 மீ. ஓட்டத்தில் அமெரிக்காவின் டோரி போவீ தங்கப் பதக்கம் வென்றார்.
- அதே நேரத்தில் நடப்பு ஒலிம்பிக் சாம்பியனான ஜமைக்காவின் எலைன் தாம்சன் 5-ஆவது இடத்தைப் பிடித்தார்.
- 16-ஆவது உலகத் தடகள சாம்பியன்ஷிப் போட்டி லண்டனில் நடைபெற்று வருகிறது. இதில் மகளிர் 100 மீ. ஓட்டத்தில் அமெரிக்காவின் டோரி போவீ 10.85 விநாடிகளில் இலக்கை எட்டித் தங்கப் பதக்கத்தைத் தட்டிச் சென்றார்.

### ஃபிஃபா ஆசியக் கோப்பை 2017

- ஆசியாவின் மிகப்பெரிய கூடைப் பந்தாட்டப் போட்டி லெபனான் நாட்டில் உள்ள பெய்ரூட் நகரில் தொடங்கியது .
- ஃபிஃபா ஆசியா சாம்பியன்ஷிப் என்று முன்னர் அழைக்கப்பட்ட போட்டி தற்போது ஃபீபா ஆசியக் கோப்பை என்றானது.
- ஆசியக் கண்ட அளவிலான இந்த 29 ஆவது கூடைப்பந்து சாம்பியன்ஷிப் போட்டி ஆகஸ்ட் 8 முதல் 20 வரை நடக்கிறது.
- இது இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை , ஆசிய நாடுகளின் ஆண்கள் அணிகளுக்கிடையே மட்டும் நடைபெறும் போட்டி ஆகும்.
- இது ஃபீபா கூடைப்பந்தாட்ட உலகக் கோப்பைப் போட்டிக்கும் , ஒலிம்பிக் கூடைப்பந்தாட்டப் போட்டிக்குமான ஆசிய அணிகளின் தேர்வுப் போட்டியாகும் .
- அம்ஜியோட் சிங் கில் தலைமையிலான இந்திய ஆடவர் அணி இப்போட்டியில் பங்கேற்கிறது .

## பல்கேரிய ஓபன்: லக்ஷயா சாம்பியன்

- பல்கேரிய ஓபன் பாட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் லக்ஷயா சென் சாம்பியன் பட்டம் வென்றார்.
- பல்கேரிய தலைநகர் சோபியாவில் நடைபெற்ற இறுதிச் சுற்றில் லக்ஷயா சென் போட்டித் தரவரிசையில் 2-ஆவது இடத்தில் இருந்த குரோஷியாவின் ஸ்வோனிமிர் துர்கின்ஜாக்கை தோற்கடித்தார்.

## 2017-ஆம் ஆண்டுக்கான விளையாட்டு விருதுகள்

- விளையாட்டுத்துறையில் சிறந்து விளங்கும் வீரர்களுக்கு விளையாட்டு அமைச்சகம் ஆண்டுதோறும் விருதுகளை வழங்கி வருகிறது. அதன்படி 2017ஆம்ஆண்டிற்கான விருதுகள் பின்வருமாறு

*ராஜீவ்காந்தி கேல் ரத்னா விருது*

- இந்திய ஹாக்கி அணியின் முன்னாள் கேப்டனான சர்தார் சிங், 2016-ஆம் ஆண்டு ரியோ ஒலிம்பிக்கில் ஈட்டி எறிதலில் தங்கம் வென்ற தேவேந்திர ஜஜ்ஜாரியா ஆகியோருக்கு இந்திய விளையாட்டுத் துறையின் மிக உயரிய விருதான ராஜீவ் காந்தி கேல்ரத்னா விருது வழங்கப்படவுள்ளது.

*அர்ஜுனா விருது*

- ரியோ பாரா ஒலிம்பிக் உயரம் தாண்டுதலில் தங்கம் வென்ற தமிழக வீரர் மாரியப்பனுக்கு அர்ஜுனா விருது வழங்கப்படவுள்ளது. அவருடன் வில்வித்தை வீராங்கனை சுரேகா, தடகள வீராங்கனை குஷ்பீர் கௌர், தடகள வீரர் ஆரோக்கிய ராஜீவ், கூடைப்பந்து வீராங்கனை பிரசாந்திசிங், குத்துச் சண்டை வீரர் லைஷ் ராம் தேவேந்திரசிங், கிரிக்கெட் வீரர் சேதேஷ்வர் புஜாரா, கிரிக்கெட் வீராங்கனை ஹர்மன்பிரீத் கௌர், கால்பந்து வீராங்கனை ஓய்னம் பெம்பெம் தேவி ஆகியோருக்கு அர்ஜுனா விருது வழங்கப்படுகிறது.
- இவர்களுடன், கோல்ஃப் வீரர் எஸ்.எஸ்.பி.சௌராஸியா, ஹாக்கி வீரர் சுனில், கபடி வீரர் ஜஸ்பீர்சிங், துப்பாக்கி சுடுதல் வீரர் பி.என்.பிரகாஷ், டேபிள் டென்னிஸ் வீரர் அமல்ராஜ், டென்னிஸ் வீரர் சாகேத்மைனேனி, மல்யுத்த வீரர்சத்யவர்த்கடியான், பாரா தடகள வீரர் வருண்சிங் ஆகியோரும் அர்ஜுனா விருது பெறுகின்றனர்.

*துரோணாச்சார்யா விருது*

- பயிற்சியாளர்களுக்கான துரோணாச்சார்யா விருது 7 பேருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.
  - தடகள பிரிவில் மறைந்த ஆர்.காந்தி,
  - கபடி பிரிவில் ஹீராநந்த் கட்டாரியா,
  - பாட்மிண்டன் பிரிவில் ஜி.எஸ்.எஸ்.வி.பிரசாத் (வாழ்நாள் சாதனையாளர்),
  - குத்துச்சண்டைப் பிரிவில் பிரிஜ்பூஷண் மொஹந்தி (வாழ்நாள் சாதனையாளர்),
  - ஹாக்கி பிரிவில் பி.ஏ. ரஃபேல் (வாழ்நாள் சாதனையாளர்),
  - துப்பாக்கி சுடுதல் பிரிவில் சஞ்சய் சக்ரவர்த்தி (வாழ்நாள் சாதனையாளர்),
  - மல்யுத்த பிரிவில் ரோஷன் லால் (வாழ்நாள் சாதனையாளர்)

ஆகியோருக்கு துரோணாச்சார்யா விருது வழங்கப்படவுள்ளது.

*தியான் சந்த் விருது*

- வாழ்நாள் சாதனையாளருக்கான தயான்சந்த் விருது 3 பேருக்கு வழங்கப்படுகிறது.
  - தடகள பிரிவில் பூபேந்தர்சிங்,
  - கால்பந்து பிரிவில் செய்ய துஷாஹித் ஹக்கிம்,
  - ஹாக்கி பிரிவில் சுமராய் டேடே

ஆகியோருக்கு தயான் சந்த்விருது வழங்கப்படவுள்ளது.

## தேசிய விளையாட்டு அருங்காட்சியகம்

- மத்திய இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சகம் நாட்டிலேயே முதன்முறையாக தேசிய விளையாட்டு அருங்காட்சியகத்தை டெல்லியில் ஜவஹர்லால் நேரு விளையாட்டு அரங்கத்தில் துவங்க இருக்கிறது.
- இந்த அருங்காட்சியகம் விளையாட்டுத் துறையில் இந்தியாவின் சாதனைகளை எடுத்துக்காட்டுவதோடு இந்தியாவின் பழமையான விளையாட்டுகள் மீதும் கவனம் செலுத்தும்.
- இந்த அருங்காட்சியகத்தின் முக்கிய நோக்கம் விளையாட்டு என்பது வாழ்க்கையின் ஒரு முக்கிய அங்கம் என்று பிரபலப்படுத்துவது ஆகும்.
- தற்போதைக்கு, இந்த அருங்காட்சியகம் பழமையான நடைமுறையான தொகுப்புகளை நினைவுபடுத்துமிடமாக மட்டுமல்லாமல், அனைத்துத் தலைமுறையும் கலந்துரையாடும் ஒரு மையமாகத் திகழும்.
- இது விளையாட்டுத் துறையில் இந்திய ஜாம்பவான்களின் சாதனைகளைக் காட்சிப்படுத்துவதோடு கல்விக்கான மையமாகவும், இளைஞர்கள் விளையாட்டு நடவடிக்கைகளை ஆய்ந்தறிய வாய்ப்பு வழங்கும் நிறுவனமாகத் திகழும்.

## ‘கிராமின் கேல் மஹோத்சவ்’ முதல் பதிப்பு

- கிராமப்புற விளையாட்டுகளின் முதல் பதிப்பு எனப்படும் கிராமின் கேல் மஹோத்சவ் ஆகஸ்டு 28 முதல் செப்டம்பர் 3 வரை டெல்லியில் துவங்க உள்ளது.
- இதன் நோக்கம் நமது மரபார்ந்த விளையாட்டுகளான மல்யுத்தத்தையும் தடகளப்போட்டிகளையும் பிரபலப்படுத்துவது ஆகும். இதில் மூத்தோர்களுக்கான கயிறு இழுக்கும் போட்டியும், மட்கா பந்தயமும் அடங்கும்.
- மத்திய இளைஞர்நலன் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சகம் திறமை வாய்ந்த விளையாட்டுகளுக்கான தேடல் இணைய தளத்தையும் துவங்க உள்ளது.
- இந்த தளம் மூலம் எந்தவொரு நபரும் நாட்டின் எந்தவொரு மூலையிலிருந்தும் அவர்களது தகவல்களை பதிவேற்றம் செய்ய முடியும். இதன் மூலம் அமைச்சகம் அவர்களது திறன்களை கண்டறிந்து அவர்களுக்கு அவரவர் துறைகளில் பயிற்சியளித்து மேம்படுத்த முடியும்.

## உலக பாட்மிண்டன்: வெள்ளி வென்றார் சிந்து

- உலக பாட்மிண்டன் சாம்பியன்ஷிப் போட்டியில் இந்தியாவின் பி.வி.சிந்து மகளிர் ஒற்றையர் பிரிவில் வெள்ளிப் பதக்கம் வென்றார்.
- ஸ்காட்லாந்தின் கிளாஸ்கோ நகரில் நடைபெற்ற இறுதிச்சுற்றில், ஜப்பானின் நஜோமி ஒகுஹராவை எதிர்கொண்ட சிந்து வீழ்ந்தார்.
- உலக பாட்மிண்டன் சாம்பியன்ஷிப் போட்டியில் இறுதிச் சுற்றுக்கு சிந்து முன்னேறியது இது முதல் முறையாகும். தற்போது இறுதிச் சுற்று வரை முன்னேறியதன் மூலம், உலக சாம்பியன்ஷிப் போட்டியின் இறுதிச் சுற்றுக்கு முன்னேறிய 2 ஆவது இந்தியர் என்ற பெருமையை சிந்து பெற்றுள்ளார்.
- முதல் இந்தியராக, சாய்னா நெவால் ஜகார்த்தாவில் நடைபெற்ற கடந்த சாம்பியன்ஷிப்பில் இறுதிச் சுற்று வரை முன்னேறினார்.
- இதனிடையே, இந்த உலக சாம்பியின்ஷிப் போட்டியில் இந்தியாவுக்கு சாய்னா ஒரு வெண்கலம் பெற்றுத் தந்துள்ள நிலையில், சிந்து ஒரு வெள்ளியை வென்று தந்துள்ளார்.
- உலக சாம்பியன்ஷிப்பில் இந்தியா 2 பதக்கங்களைப் பெறுவதும் இது முதல் முறையாகும்.

# இதரச் செய்திகள்

### உலகத் தாய்ப்பாலூட்டும் வாரம்: ஆகஸ்ட் 1 – 7

- உலகத் தாய்ப்பாலூட்டும் வாரம், ஒவ்வொரு வருடமும் ஆகஸ்ட்1 முதல் 7 வரை கடைபிடிக்கப்படுகிறது .




- குழந்தைகளுக்குத் தாய்ப்பால் ஊட்டுவதின் முக்கியத்துவம் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்துவதும், தாய்ப்பால் ஊட்டும் பழக்கத்தினை ஊக்குவிக்கவும் இந்த வாரம் அனுசரிக்கப்படுகிறது.
- 2017 ஆம் ஆண்டுக்கான கருப்பொருள்: "தாய்ப் பாலூட்டும் பழக்கத்தை ஒன்றுகூடி நிலைப்படுத்துவோம்" ("Sustaining Breastfeeding Together")
- 2017 ஆம் ஆண்டில் உலகத் தாய்ப்பால் வாரம் 25 வது ஆண்டில் அடி எடுத்து வைக்கின்றது என்பது குறிப்பிடத்தக்கது.

### தேசியக் கைத்தறி தினம் – ஆகஸ்ட் 7

- நாடு முழுவதும் உள்ள கைத்தறி நெசவாளர்களை போற்றும் விதமாக, ஒவ்வொரு ஆண்டும் ஆகஸ்ட் 7 ஆம் தேதி, தேசியக் கைத்தறி தினமாக அனுசரிக்கப்படுகிறது.
- இந்த வருடம் , தேசியக் கைத்தறி தினத்தின் மூன்றாம் ஆண்டு விழா ஆகும். தேசியக் கைத்தறி தினம் 2015 ஆம் ஆண்டு முதல் அனுசரிக்கப்பட்டு வருகிறது.

### 2017 ஆம் ஆண்டுக்கான (எட்டாவது) சர்வதேசத் தொழில் முனைவோர் மாநாடு

- 2017 ஆம் ஆண்டுக்கான (எட்டாவது) சர்வதேசத் தொழில் முனைவோர் மாநாடு, வரும் நவம்பர் மாதம் 28 ஆம் தேதி, இந்தியாவின் ஹைதராபாத் நகரில் நடைபெற உள்ளது.
- இந்திய வெளியுறவுத்துறை அமைச்சகம் மற்றும் ஆந்திரப் பிரதேச அரசாங்கத்துடன் , நிதி ஆயோக் குழுவும் இணைந்து இந்த மாநாட்டினை ஒருங்கிணைக்க இருக்கிறது.

- உலகளாவிய முதலீட்டாளர்களும் , தொழில் முனைவோர்களும் ஒன்று திரள்வதற்கான புதிய வாய்ப்பினை இந்த மாநாடு ஏற்படுத்தித் தருகின்றது.
- உலகளாவிய மற்றும் வளர்ந்து வரும் ஆசிய ஆப்பிரிக்க நாடுகளின் தொழில் முனைவோர்களிடையே பொருளாதார வளர்ச்சியையும், புதிய வாய்ப்புகளை ஊக்குவிக்கவும் இம்மாநாடு பெரிதும் உதவுகிறது .
- அமெரிக்க அதிபரின் மகள் இவாங்கா டிரம்ப் இம்மாநாட்டில் கலந்து கொள்ள உள்ளார் .
- உலகளாவியத் தொழில் முனைவோர்களை ஒரே தளத்தில் கொண்டு வருவதற்கான ஏற்பாடாக அமெரிக்காவின் முந்தைய அதிபர் ஒபாமாவின் தலைமையின் கீழ் 2010 ஆம் ஆண்டு வாஷிங்டனில் இதன் முதல் மாநாடு நடத்தப்பட்டது .

**2017-ஆம் ஆண்டிற்கான இந்திய-ஆசியான் இளைஞர் உச்சி மாநாடு போபாலில் நடைபெற இருக்கிறது**

- இந்திய-ஆசியான் இளைஞர் உச்சி மாநாடு, வரும் ஆகஸ்ட் 14 முதல் 19 வரை மத்தியப் பிரதேசத்தின் தலைநகர் போபாலில் நடைபெற இருக்கிறது.
- கருப்பொருள்: பகிரப்பட்ட மதிப்புகள், பொதுவான நியதி
- இந்தியா பவுண்டேஷன் மற்றும் ஆசியான் செயலகம் ஆகிய இரண்டும் ஒன்றிணைந்து இந்நிகழ்வினை நடத்த இருக்கிறது.
- ஆசியானின் 10 நாடுகளைச் சேர்ந்த பிரதிநிதிகள் இதில் கலந்து கொள்ள உள்ளனர்.
- இந்தியா மற்றும் ஆசியான் நாடுகளின் மக்களுக்கிடையேயான தொடர்பினை இந்த மாநாடு மேம்படுத்துகிறது.

**ஆசியாவின் 30 மிகப்பெரும் நகரங்கள்**

- ஆக்ஸ்போர்டு பொருளாதார (Oxford Economics) நிறுவனம், சமீபத்தில் ஆய்வு மேற்கொண்டு ஆசியாவின் 30 மிகப்பெரும் நகரங்களை தரவரிசைப்படுத்தி உள்ளது.

**TOP 10 FASTEST GROWING CITIES**

| Rank | City | GDP growth in % |
|---|---|---|
| 1 | **Delhi** | 8.3 |
| 2 | Ho Chi Minh City | 7.9 |
| 3 | Chennai | 7.6 |
| 4 | **Mumbai** | 7.5 |
| 5 | **Hyderabad** | 7.1 |
| 6 | **Bengaluru** | 6.9 |
| 7 | Beijing | 6.7 |
| 8 | Tianjin | 6.7 |
| 9 | **Kolkata** | 6.6 |
| 10 | Guangzhou | 6.6 |

Source: Bloomberg

- இதன்படி, ஆசியாவிலேயே டெல்லி அதிவேகமாக வளரக்கூடிய நகரங்களில் முன்னிலை வகிக்கிறது. கடந்த ஆண்டினை ஒப்பிடும் போது 2021-ல் டெல்லியின் பொருளாதார வளர்ச்சி 50 சதவிகிதம் அதிகமாக இருக்கும்.
- இந்திய நகரங்கள் சமீபகாலமாக மற்ற ஆசிய நகரங்களைக் காட்டிலும் மிகவேகமாக வளர்ந்து வருகின்றன.
- இந்தியாவில் நிதிச்சேவை மற்றும் வணிகச்சேவைத் துறைகள் மிக வேகமாக வளர்ந்து வருகின்றன
- முதல் ஐந்து இடங்களில் இந்திய நகரம் அல்லாத ஒரே நகரம் வியட்நாமின் ஹோசிமின் நகரம் மட்டும் தான். மேலும் சீனாவின் வளர்ச்சியும் மிகக் குறைவாக இருக்கும் என இந்த ஆய்வறிக்கை கூறுகிறது.

### உலக சிங்கம் தினம் – ஆகஸ்ட்10

- சிங்கங்களை அழிவில் இருந்துப் பாதுகாக்கவும் , அவற்றினைப் பாதுகாப்பது குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தவும் உலக சிங்க தினம் ஒவ்வொரு ஆண்டும் ஆகஸ்ட் 10 ஆம் தேதி கொண்டாடப்படுகிறது.

### ஆகஸ்டு 10: சர்வதேச உயிரி எரிபொருள் தினம்

- புதைபடிவ எரிபொருட்கள் அல்லாத எரிபொருள்களைப் பயன்படுத்துவதற்கான விழிப்புணர்வினை ஏற்படுத்தும் நோக்கில் ஒவ்வொரு ஆண்டும் ஆகஸ்டு 10 ஆம் தேதி சர்வதேச உயிரி எரிபொருள் தினம் கொண்டாடப்படுகிறது.
- 1893-இல் இதே நாளில் தான் டீசல் எஞ்சினைக் கண்டுபிடித்த ருடால்ஃப் டீசல் அவர்கள் முதன் முறையாக நிலக்கடலை எண்ணெயைக் கொண்டு பொறியியல் இயந்திரத்தினை வெற்றிகரமாக இயக்கினார்.

### உலக யானைகள் தினம் : ஆகஸ்ட் 12

- சர்வதேச அளவில் யானைகளைப் பாதுகாக்க ஒவ்வொரு ஆண்டும் ஆகஸ்ட் 12-ம் தேதி உலக யானைகள் தினமாக கொண்டாடப்படுகிறது.
- இதன் முக்கிய நோக்கங்களாக,
    - ஆபத்து நிலையில் உள்ள ஆப்ரிக்க-ஆசிய யானைகளைப் பற்றிய விழிப்புணர்வினை உருவாக்குதல்.
    - யானைகளைப் பற்றிய தகவல்களை பகிர்ந்து கொள்ளுதல்.
    - யானைகளை சிறந்த முறையில் நலம் பேணுதல் மற்றும் பாதுகாத்தல்.
- பன்னாட்டு இயற்கைப் பாதுகாப்பு சங்கத்தின் பட்டியலில் (IUCN Red List) ஆப்பிரிக்க யானைகள் அழிவாய்ப்புக்குட்பட்ட இனப்பட்டியலிலும் (Vulnerable), ஆசிய யானைகள் அருகிய இனப்பட்டியலிலும் (Endangered) சேர்க்கப்பட்டுள்ளன.

### உலக மனிதாபிமான தினம் : ஆகஸ்ட் 19

- உலக மனிதாபிமான தினம் (World Humanitarian Day - WHD) ஒவ்வொரு ஆண்டும் ஆகஸ்ட் 19 ம் தேதியன்று கடைபிடிக்கப்படுகிறது.
- ஐக்கிய நாடுகளின் பொதுச் சபையால் அங்கீகரிகப்பட்ட இந்தத் தினமானது , மனிதாபிமான சேவையில் தங்கள் உயிர்களை பணயம் வைத்து சேவைப் புரிபவர்களுக்கு மரியாதை

செலுத்தும் விதமாகவும் , உலகின் பல்வேறு பகுதிகளில் நெருக்கடி நிலையால் பாதிக்கப்பட்டு போராடும் மக்களுக்கு ஆதரவு திரட்டுவதும் இதன் நோக்கமாகும்.

- இந்த வருடத்தின் கருப் பொருள் : ஒரு இலக்கு அல்ல (Not A Target)
- இந்தக் கருப்பொருளின் பொருள் , மோதலில் சிக்கியுள்ள பொதுமக்கள் ஒரு இலக்கு அல்ல என்பதாகும்.

## வாழத்தகுந்த இடங்களின் சர்வதேசத் தரவரிசை

- ஆஸ்திரேலியாவின் மெல்போர்ன் நகரம்-உலகின் சிறந்த வாழத்தகு நகரம்.
- இந்த தரவரிசையின்படி தொடர்ந்து ஆறாண்டுகளாக மெல்போர்ன் நகரமே உலகின் மிகச்சிறந்த வாழத்தகு நகரமாக பட்டியலிடப்பட்டு வருகிறது.
- எக்கனாமிஸ்ட் இதழின் நுண்ணறிவுப் பிரிவு (Economist Intelligence Unit) வெளியிட்ட சர்வதேச வாழத்தகு தரவரிசைப்பட்டியலில் 140 நகரங்கள் பட்டியலிடப்பட்டுள்ளன.
- பாதுகாப்பு, சுகாதாரம், கல்வி, உட்கட்டமைப்பு மற்றும் சுற்றுச்சூழல் போன்ற 30 காரணிகள் தரவரிசைப் பட்டியலுக்கு கணக்கில் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது.
- மெல்போர்னுக்கு அடுத்தடுத்த இடங்களில் ஆஸ்திரியாவின் தலைநகர் வியன்னாவும் கனடாவின் வான்கூவரும் இடம்பெற்றுள்ளது
- தரவரிசைப்பட்டியலின் கடைசி இடத்தில் (140 வது இடத்தில்) சிரியாவின் டொமாஸ்கஸ் இடம்பெற்றிருக்கிறது.
- தரவரிசைப்பட்டியலில் முதல் பத்து இடங்களிலோ (அல்லது) கடைசி பத்து இடங்களிலோ இந்திய நகரங்கள் எதுவும் இடம்பெறவில்லை.

## உலக புகைப்பட தினம்: ஆகஸ்ட் 19

- உலக புகைப்பட தினம் ஒவ்வொரு ஆண்டும் ஆகஸ்ட் 19 அன்று கடைப்பிடிக்கப்படுகிறது.
- உலகில் உள்ள புகைப்பட ஆர்வலர்கள் , எளிமையான நோக்கத்தை வெளிப்படுத்தும் ஒரு புகைப்படத்தை பகிர்ந்துக்கொள்ள வேண்டும் . இது அவர்கள் காணும் உலகின் கோணத்தை மற்றவர்களுக்கு வெளிப்படுத்துவதாகும்.

## அடிமை வணிகத்தையும் அதன் ஒழிப்பையும் நினைவூட்டும் சர்வதேசதினம்- ஆகஸ்ட்23

- அடிமை வணிகத்தையும் அதன் ஒழிப்பையும் நினைவூட்டும் சர்வதேச தினம் ஒவ்வொரு வருடமும் ஆகஸ்ட் 23 ஆம் நாள் கடைபிடிக்கப்படுகிறது.
- அட்லாண்டிக் அடிமை வர்த்தகத்தை நினைவுகோரும் வகையில் ஐக்கிய நாடுகள் கல்வி, அறிவியல், பண்பாட்டு நிறுவனம் (United Nations Educational, Scientific and Cultural Organization - UNESCO) நியமித்த நாள் இதுவாகும்.
- குறிப்பாக 1791 ஆண்டு 22ம் தேதி இரவு துவங்கி 23ம் தேதி வரை தற்போதைய ஹெய்டி தீவில் (Island of Saint Domingue) இடம் பெற்ற அடிமை வியாபாரத்திற்கு எதிரான கிளர்ச்சியையும் அதனால் ஏற்பட்ட விளைவுகளையும் நினைவுகூரும் வகையிலேயே இத்தினம் நியமிக்கப்பட்டது.

## தேசிய விளையாட்டு தினம் – ஆகஸ்ட் 29

- இந்தியாவின் தலைசிறந்த வளைதடிப் பந்தாட்ட (Hockey) வீரரான தியான் சந்தின் பிறந்த நாளான ஆகஸ்ட் 29 , இந்தியாவில் தேசிய விளையாட்டு தினமாக கடைபிடிக்கப்படுகிறது.

*தியான் சந்த்*

- தியான் சந்த் பிறந்த நாள் : 29 ஆகஸ்ட் , 1905
- தியான் சந்த் பிறந்த இடம் : அலகாபாத்
- தியான் சந்தின் மயக்கவைக்கும் வளைதடி கைவண்ணம் பிற ஆட்டக்களங்களிலிருந்தும் கூட்டத்தை ஈர்த்தது. இந்திய மாயவித்தைக்காரர் தியான் சந்த் ('The Wizard') என்று அழைக்கப்பட்டார் .
- 1956 ஆம் ஆண்டு தமது 42 வது வயதில் பத்ம பூசண் விருது பெற்றார்
- 1928 ஆம் ஆண்டு ஆம்ஸ்டர்டமிலும் ,1932 ஆம் ஆண்டு லாஸ் ஏஞ்சல்சிலும், 1936 ஆம் ஆண்டு பெர்லினிலும் நடைபெற்ற ஒலிம்பிக் விளையாட்டுகளில் தங்கப் பதக்கம் பெற்ற இந்திய அணியில் பங்கேற்றிருந்தார்.

---